678
5145
R.R.NO: 757
A80(B)-2.
527

# தஞ்சாவூர் மாவட்ட நிர்வாக அறிக்கை

## 1964 - 65

©
தமிழ்நாடு அரசாங்கம்
1966

...ங்கத்திற்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்தொழில்
நெறியாளரால் அச்சிடப்பட்டது.

R
21193, 8+ N64
N66
33132

# பொருளடக்கம்


1. முன்னுரை .. .. .. 1

2. விவசாயமும், உணவு உற்பத்தியும்

(1) அரசாங்க விதைப் பண்ணைகள் .. .. 2

(2) குடி மராமத்து .. .. .. 2

(3) நில உச்ச வரம்பு சட்டம் .. .. .. 2

(4) தீவிர சாகுபடித் திட்டம் .. .. .. 3–5

(5) விவசாயம் .. .. .. 6–7

(6) முந்திரி அபிவிருத்தித் திட்டம் .. .. .. 7–8

(7) விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் .. .. 8–11

(8) வனவளம் .. .. .. 11–12

(9) மீன் வளம் .. .. .. 12–14

(10) மரச்செடி நடு விழா .. .. .. 14

3. விலங்கின வளர்ப்பு .. .. .. 14–15

4. வருமானத் துறை

(1) நிலவரி .. .. .. 15–16

(2) வாணிக வரி .. .. .. 16

(3) வருமான வரி .. .. .. 16

(4) விவசாய வருமான வரி .. .. .. 16–17

5. நிதித் துறை

(1) கருவூலத் துறை .. .. .. 17

(2) தலநிதி தணிக்கைத் துறை .. .. .. 17–18

(3) கோவில் தணிக்கை .. .. .. 18

6. நீதி நிர்வாகத் துறை

(1) நீதி, குற்ற இயல் துறை .. .. .. 18

(2) நீதி மன்றங்கள் .. .. .. 18–19

(3) போலீஸ் (காவல்துறை) .. .. .. 20

பக்கம்

7. பொதுப்பணித் துறை

(1) பாசனப் பிரிவு .. .. .. 20–21

(2) கால்வாய் புதுப்பித்தல் .. .. .. 21–22

(3) கட்டிடப் பிரிவு .. .. .. 22

8. சுகாதாரம்

(1) பொதுச் சுகாதாரம் .. .. .. 22–23

(2) மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை, செங்கிப்பட்டி .. .. .. 23

(3) மருத்துவத் துறை .. .. .. 23–25

(4) மண்டல கொசுத் தடுப்பு நிறுவனம், தஞ்சாவூர் .. 25

9. கல்வி

(1) கல்லூரிக் கல்வி .. .. .. 25–27

(2) ஏனைய கல்வித் துறைகள் .. .. .. 27–28

(3) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் .. .. .. 28

(4) தொழிற் பயிற்சிப் பள்ளிகள் .. .. .. 28

(5) சிறுவர் சீர்திருத்தப் பள்ளி .. .. .. 29

10. கூட்டுறவு .. .. .. 29–30

11. அறநிலைய ஆட்சித் துறை .. .. .. 30–31

12. (1) நகராட்சி மன்றங்கள் .. .. .. 31–32

(2) பஞ்சாயத்து அபிவிருத்தி .. .. .. 32–34

13. சேமிப்பு .. .. .. 34

14. கலைகள்

(1) கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர் .. 34–35

(2) தஞ்சாவூர் சரபோஜி மன்னர் நூல் நிலையம் .. 35

(3) மாவட்ட நூலக ஆணைக்குழு, தஞ்சாவூர் .. 35–36

(4) புதைபொருள் மற்றும் பழங்கால நினைவுச் சின்னங்களின் பராமரிப்பு .. .. .. 36

(5) தஞ்சைக் கலைக்கூடம் .. .. 36

15. முதியோர் உதவித் தொகைத் திட்டம் 36–37

16. அகதிகள் 37

17. தீ விபத்து 37–38

பக்கம்

18. உள்நாட்டு விநியோகம் .. .. .. 38-39

19. முன்னேற்றப் பாதை

(1) கிராம வேலைத் திட்டம் .. .. .. 39

(2) குடும்பக் கட்டுப்பாடு .. 39–40

(3) மின்சாரம் .. .. .. 40

(4) பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு நிறுவனம் .. 40–41

(5) தொழிலாளர் துறை .. .. 41–42

(6) தொழில் வர்த்தகத் துறை .. .. .. 42–45

(7) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் கழகம் .. 45–46

(8) கதர் அபிவிருத்தித் திட்டம் .. .. .. 46

(9) கிராமத் தொழில் வளர்ச்சி .. .. .. 46–47

(10) இந்தியக் கொதிகலன் (பாய்லர்) சட்டம் .. .. 47-48

(11) மாவட்ட வேலை வாய்ப்பு நிலையம் .. .. 48

(12) மாதர் நலம் .. .. .. 48–49

(13) ஹரிஜன நல முன்னேற்றம் . .. .. 49-51

20. மண்டலப் போக்குவரத்து .. .. .. 51

# தஞ்சாவூர் மாவட்ட 1964-65-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை.

---

## முன்னுரை

"தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம்" என்று புகழப்படும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வடக்கில் கொள்ளிடம் ஆறும், திருச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியும், தெற்கில் பாக்-ஜலசந்தியும், இராமநாதபுரம் மாவட்டமும், கிழக்கில் வங்கக் கடலும், மேற்கில் திருச்சி மாவட்டமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

(2) இம் மாவட்டத்தின் நீர்ப்பாசனம், காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் (காவிரி-மேட்டூர் அணை) ஆகிய ஆறுகள் மூலம் நடைபெறுகின்றது. இம் மாவட்டம் பன்னிரண்டு தாலூகாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தின் தட்பவெப்ப நிலை பொதுவாக ஆரோக்கியம் நிறைந்தது என்றே குறிப்பிடலாம். அதிக அளவில் சாகுபடி நிலங்களும், எண்ணற்றத் தோப்புகளும் இருப்பதனால், "டெல்டாப்" பகுதிகளின் வெப்பநிலை ஏனைய பகுதிகளைவிடக் குறைவாக இருக்கிறது. கோடை காலம் மார்ச்சு மாதத்தில் துவங்கி ஜூன் மாதத்தில் முடிவடைகிறது. ஜூன் மாதத்திற்குப் பிறகு பருவ மழை தொடங்கினாலும் அக்டோபர், நவம்பர் மாதங்களில்தான் நல்ல மழை பெய்கிறது. இம் மாவட்டத்தின் ஆண்டுச் சராசரி மழை அளவு 45·19" ஆகும். சுமார் 13 லட்சம் ஏக்கர் நிலங்களில் நன்செய் சாகுபடி செய்யப்படுகிறது.

(3) தஞ்சாவூர், இம் மாவட்டத்தின் தலைநகரமாகும். பண்டைய சோழப் பேரரசர்களின் தலைநகரமாக விளங்கிய தஞ்சாவூர் நகரில், பழமையின் நினைவுச் சின்னமாக கட்டிடக்கலையின் சிறப்பிற்கோர் எடுத்துக்காட்டாக, சிற்பக்கலையின் சிகரமாக வானளாவி தலைநிமிர்ந்து நிற்கும் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் ஆலயத்தையும், மற்றும் இம் மாவட்டத்திலுள்ள எண்ணற்ற ஆலயங்களையும் கண்டு களிக்க உள் நாட்டவர் மட்டுமன்றி, வெளி நாட்டவர் பலரும் ஒவ்வோர் ஆண்டும் இங்கு வந்து சென்றவண்ணமுள்ளனர். அறிக்கை ஆண்டில், அமெரிக்கத் துணைத் தூதர் திரு. இராபர்ட் கால்டுவெல், இந்தியாவிலுள்ள இங்கிலாந்தின் தூதர், ஆஸ்திரேலியாவின் தூதர், பாண்டிச்சேரி லெப். கவர்னர், அஸ்ஸாம் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சஞ்சீவிராவ் நாயுடு, ஆந்திர மாநிலத்தின் உள்துறை அமைச்சர் திரு. அகமத் அலிகான் ஆகியோர் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வந்திருந்து இங்குள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களையும், ஆலயங்களையும் கண்டு களித்துச் சென்றனர்.

(4) நீர் வளம், நில வளம், வரலாற்றுப் புகழ் ஆகிய அனைத்தும் நிரம்பிய இம் மாவட்டத்தின் 1964–65-ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை சுருக்கமாகத் தயாரிக்கப்பட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

2. **விவசாயமும் உணவு உற்பத்தியும்—**

(1) **அரசாங்க விதைப் பண்ணைகள்.**—இம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் அரசாங்க விதைப் பண்ணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந் நிலங்கள் யாவும் அரசாங்கத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்டவையாகும்.

| | | | எ. | செ. |
|---|---|---|---|---|
| 1 | காட்டுத் தோட்டம் | .. | 48 | 21 |
| 2 | மருதாநல்லூர் திப்பிராஜபுரம் | .. | 55 | 35 |
| 3 | தீபாம்பாள்பட்டினம் | .. | 92 | 36 |
| 4 | நாடியம்பாள்புரம் | .. | 19 | 29 |
| 5 | சாக்கோட்டை | .. | 30 | 82 |
| 6 | நெடும்பலம் | .. | 61 | 68 |
| 7 | நாகமங்கலம் | .. | 52 | 69 |
| 8 | கீரந்தை | .. | 54 | 38 |
| 9 | காஞ்சி குடிக்காடு | .. | 51 | 38 |
| 10 | திருக்கடையூர் | .. | 45 | 64 |
| 11 | ஒரத்தூர் | .. | 49 | 93 |
| 12 | மூங்கில்குடி | .. | 47 | 25 |
| 13 | சிக்கல் | .. | 56 | 50 |

நில ஆர்ஜிதம் செய்யாமல் கீழ்க்கண்ட இடத்தில் ஒரு விதைப் பண்ணை உள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நாகமங்கலம் | .. | 25 | 66 |

நாகமங்கலத்தில் அரசினருக்குச் சொந்தமான 131–62 ஏக்கர் தரிசு நிலம், விதைப் பண்ணைக்காக விவசாயத் துறையினருக்குக் கொடுக்கப் பட்டுள்ளது.

2. (2) **குடி மராமத்து.**—அறிக்கை ஆண்டில், இம் மாவட்டத்தில் 596 பஞ்சாயத்துக்கள் குடி மராமத்து வேலையை மேற்கொண்டன. 3,674 மைல் நீளமுள்ள வாய்க்கால்கள் மராமத்துச் செய்யப்பட்டன. இதன் மூலம் 387,624–15 ஏக்கர் நிலம் பயன் பெறுகிறது. இதற்கு ரூ. 8,62,327–53 செலவாகியுள்ளது. விவசாயிகளிடமிருந்து ரூ. 5,33,172–30 வசூல் செய்யப்படவேண்டியுள்ளது. குடி மராமத்திற்கான அதிகச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை அரசாங்கம் கொடுக்கிறது. அதன்படி அரசாங்கத்தின் பங்கு ரூ. 3,26,556–33 ஆகிறது. இந்தத் திட்டத்தின் பலனாக விவசாயிகள் ஆண்டுதோறும் விவசாயத்திற்கு எளிதாகவும் போதிய அளவிலும் நீர்ப்பாசனம் பெற வாய்க்கால்களையும், மற்ற நீர்நிலைகளையும் மராமத்துச் செய்துகொள்ள ஏதுவாகிறது.

2. (3) **நில உச்ச வரம்பு சட்டம்.**—தமிழ்நாடு, நிலச் சீர்திருத்த (நில உடமைக்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டம் 6—4—1960 முதல் அமலுக்கு வந்தது. இச்சட்டத்தையும், 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது டிரஸ்டுகள் (விவசாய நில நிர்வாக ஒழுங்கு முறை விதிகள்) சட்டத்தையும் அமலாக்கும் பொருட்டு இம் மாவட்டத்தில் உதவி கலெக்டர் தகுதியில் அதிகாரம் பெற்ற அதிகாரிகள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தஞ்சாவூர், நாகப்பட்டினம், மாயூரம் ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக்கொண்டு பணியாற்றி வருகின்றனர்.

2. உச்ச வரம்பு குறிப்பிடப்பட்டுள்ள பரப்பளவிற்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து உபரி நிலத்தை அரசாங்கம் பெற்று நிலமற்றவர்

களுக்குப் பகிர்ந்தளிப்பதும், மேற்படி சட்டம் அமலுக்குக் கொண்டுவரப் பட்ட தேதிக்குப் பிறகு யாரும் உச்ச வரம்பிற்குமேல் நிலம் சேர்க்காதபடித் தடுப்பதும் இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

3. இந்த சட்டத்தின்படி 30 'தர' ஏக்கருக்கு மேல் கைப்பற்றில் நிலம் வைத்திருப்பவர்கள் தங்களிடமுள்ள நிலங்களையும் உபரி நிலங்களாகப் பாவிக்கப்படவேண்டியவற்றையும், அரசாங்கத்துக்குத் தெரிவிக்கவேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை சேகரிக்கப்பட்ட தகவலின் மூலம் 1018 நபர்களிடம் மொத்தம் 6,809–24 ஏக்கர் நிலம் உபரியாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை சம்பந்தமாக மேற்படி சட்டத் தின் 10 (1) பிரிவின்படி அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிட அனுப்பப் பட்டு வருகிறது.

1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது டிரஸ்டுகள் (விவசாய நில நிர்வாக ஒழுங்கு முறை விதிகள்) சட்டம்;

இச் சட்டத்தின்படி 'பொது டிரஸ்டுகள்' 20 'தர' ஏக்கர் வரை சொந்த விவசாயத்திற்கும், தனி நபர்கள் 5 ஏக்கர் வரை சொந்த விவசாயத் திற்கும் வைத்துக்கொள்ளலாம். தஞ்சாவூர் மாவட்டத்தில் 9 பொது டிரஸ்டுகள் 20 "தர" ஏக்கருக்கு மேல் வைத்துக்கொண்டு சொந்த விவசாயம் செய்வதாகவும், 380 நபர்கள் 5 தர ஏக்கருக்கு மேல் டிரஸ்டு களில் குத்தகை எடுத்துக் கொண்டு சாகுபடிக்கு வைத்திருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு சட்டங்களின் கீழும் இன்னும் கணக்கிடப்படவேண்டிய உபரி நிலங்களும், விசாரணை செய்யப்படவேண்டிய நிலச்சுவான்தார்களும், குத்தகைதாரர்களும் உள்ளனர். மேற்படி விசாரணையை முடித்து உபரியாக உள்ள நிலங்கள் யாவற்றையும் விரைவில் கணக்கெடுப்பதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அதிகாரம் பெற்ற அதிகாரிகள் மூவர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

2. (4) **தீவிர சாகுபடித் திட்டம்.—**

**திட்ட அமல்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் அறிக்கை ஆண்டில் தீவிர சாகுபடித் திட்டம் 36 அபிவிருத்தி வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1,557 கிராமங்களில் மொத்தம் 1,102,808 ஏக்கரில் செயல்படுத் தப்பட்டது.

அலுவலர் குழு.—இத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளின் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருங்கிணைக் கிருர். இத்திட்டத்தின் விவசாய நுண்ணியல் பிரிவின் பொறுப்பாளராக திட்ட அலுவலர் (கூட்டு வேளாண்மை நெறியாளர்) செயலாற்றுகிருர். இவருக்கு உதவியாக வேளாண்மை வல்லுநர், பயிர்ப் பாதுகாப்பு நிபுணர், பண்ணை நிர்வாகத்திற்காக துணை விவசாய நெறியாளர், விதைக்காக மாவட்ட விவசாய அலுவலர், செய்தி மாவட்ட விவசாய அலுவலர், பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்காக உதவித்திட்ட அலுவலர், பொதுத்துறை உதவி விவசாயப் பொறியாளர், வானொலி நிபுணர் ஆக எட்டு பொருளியல் நிபுணர்கள் பணியாற்றுகிருர்கள்.

1. **பண்ணை உற்பத்தித் திட்டங்கள்.**—இத் திட்டத்தில் 1964-65-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள 36 வட்டாரங்களிலும் மொத்தம் 156,556 பண்ணை உற்பத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இது சாகு படிப் பரப்பில் கீழ்க்கண்ட சதவீத அளவைக் குறிக்கிறது.—

| | |
|---|---|
| 24 வட்டாரங்கள் | 100 சத விகிதம் |
| 2 வட்டாரங்கள் | 65 சத விகிதம் |
| 1 வட்டாரம் | 40 சத விகிதம் |
| 9 வட்டாரங்கள் | 30 சத விகிதம் |

2. **விவசாயத் தேவைப் பொருள்களை வழங்குதல்** :—1964–65-ம் ஆண்டுக்கான விவசாயத் தேவைகளின் இலக்குகளும், வழங்கப்பட்ட அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அளவு : மெட்ரிக் டன்

| | பொருள். | பண்ணைத் திட்டங்களின் தேவை. | வழங்கப்பட்ட அளவு. |
|---|---|---|---|
| 1. | பொறுக்கு விதை நெல் | 8,030 | 8,100 |
| 2. | தழை எரு விதைகள் | 789 | 857 |
| 3. | அம்மோனியம் சல்பேட்டுக்கு ஈடாக தழைச்சத்து இரசாயன உரங்கள் | 25,045 | 28,145 |
| 4. | அம்மோனியம் சல்பேட்டுக்கு ஈடாக கலப்பு உரம் | .. | 6,639 |
| 5. | சூப்பர் பாஸ்பேட் | 25,965 | 32,460 |
| 6. | சூப்பர் பாஸ்பேட்டுக்கு ஈடாக கலப்பு உரம் | .. | 4,036 |
| 7. | பொட்டாஷ் | 339 | 506 |
| 8. | பூச்சி மருந்துகள் | 1,888 | 2,675 |
| 9. | நவீன கலப்பைகள் | 4,868 | 12,862 |
| 10. | பார்மீய சட்டேன்கள் | 879 | 1,640 |
| 11. | ஜப்பானிய இடை உழவுக் கலப்பை | 167 | 304 |
| 12. | தெளிப்பான்கள் | 104 | 330 |
| 13. | தூவான்கள் | 44 | 203 |
| 14. | விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட குறுகிய காலக்கடன் | ரூ. 150·67 லட்சம் | |
| 15. | இடைக்காலக் கடன் | 7·74 ,, | |

3. **செய்முறை விளக்கங்கள்**.—1964–65-ம் ஆண்டில் மொத்தம் ரூ. 97,758 செய்முறை விளக்கப் பாத்திகள் போட்டதற்கு உதவிப்பணமாகக் கொடுக்கப்பட்டது.

4. **விவசாயக் கருவிகள் தொழிற்கூடம், திருவாரூர்**.—1964–65-ம் ஆண்டில் மும்முரச் சாகுபடித் திட்ட டிராக்டர்களால் செய்யப்பட்ட வேலையின் விவரம்.—

| | | எக்கர். | செண்ட். |
|---|---|---|---|
| (1) | டிராக்டர்களால் உழப்பட்ட பரப்பளவு | 16,718 | 58 |

(2) அரசாங்கத்திற்குக் கிடைத்தவருவாய் ரூ. 2,92,625–23 பைசா.

5. **விவசாயக் கருவிகள் தொழிற்கூடத்தில் செய்தவேலைகளின் விவரம்**—

| | | |
|---|---|---|
| (1) | கிடைக்கப்பெற்ற வேலை உத்தரவுகள் .. | 496 |
| (2) | முடிவு செய்யப்பட்ட வேலை உத்தரவுகள் .. | 452 |
| (3) | அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் .. | ரூ. 17,362–53 |

6. **தரமான விதைத் திட்டம்**.—இத திட்டத்தின்கீழ் கும்பகோணம் கோட்டத்தில் சாக்கோட்டையிலும், மாயூரம் கோட்டத்தில் குத்தாலத்திலும், நாகப்பட்டினம் கோட்டத்தில் சிக்கலிலும், மன்னார்குடி கோட்டத்தில்

நெடும்பலத்திலும் வட்டார விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1964-65-ம் ஆண்டில் நடைபெற்ற வேலை விவரம் வருமாறு:—

| | | 50 கிலோ கிராம்கொண்ட மூட்டைகள். |
|---|---|---|
| (1) | சுத்தம் செய்யப்பட்டது .. | 18,913 |
| (2) | மருந்து கலக்கப்பட்டது .. | 36,774 |
| (3) | முளைப்புத் திறன் பரிசோதனை செய்தது | 1,672 |
| (4) | தரமான விதையைக்கொண்டு பயிரிடப் பட்ட பரப்பு . | 8,34,392 |

(7) **பயிற்சி முகாம்கள்.**—கும்பகோணம், மன்னார்குடி கோட்டங்களில் உள்ள விவசாய வளர்ச்சி அலுவலர்களுக்கும், கிராம நல ஊழியர்களுக்கும் பண்ணைத் திட்டங்கள் தயார் செய்வது குறித்தும், தெளிப்பானும், தூவுவானும் உபயோகிப்பது குறித்தும், செய்முறை விளக்கம் நிகழ்த்திக் காட்டுவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. வட்டார அளவில் "முனைப்புப்" பழக்கங்களை அனுசரிப்பது குறித்து 252 கிராமங்களில் மொத்தம் 7,560 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மற்றும் மத்திய அரசாங்கத்திலிருந்தும், போர்டு பௌண்டேஷனிலிருந்தும், நிபுணர்கள் பயிற்சி முகாமுக்கு வருகை தந்து பயிற்சியாளர்களுக்கு விவசாய விஸ்தரிப்பு முறைகளை விளக்கிக் கூறினார்கள். மேலும், டெல்லியில் நடைபெற்ற தீவிர சாகுபடி திட்ட முக்கிய அலுவலர்களின் கூட்டத்தில் திட்ட அலுவலர் (கூட்டு விவசாய இயக்குநர்) கலந்துகொண்டார்.

(8) பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பற்றியும், எலி ஒழிப்புப் பற்றியும் அறிக்கை ஆண்டில் முகாம்கள் நடத்தப்பட்டன. 1964-65-ம் ஆண்டில் நடைபெற்ற எலி ஒழிப்பு வேலையின் விவரம்—

| | | பரப்பின் அளவு. (ஏக்கர்). | எலியின் எண்ணிக்கை (லட்சத்தில்). |
|---|---|---|---|
| (அ) | ஏரிக் கரைகள், வயல் வரப்புகளில் | 1,65,894 | 5·00 |
| (ஆ) | கிடுக்கி வைத்தது .. .. | 66,048 | 3·02 |
| (இ) | விஷம் வைத்தது .. .. | 1,32,376 | 3·40 |
| | | 3,64,318 | 11·42 |

சிங்க் பாஸ்பைட் உபயோகித்தது .. 1,921½ கிலோ கிராம்.

(9) **ஜப்பானிகா இண்டிகா முன்னோடி திட்டம்.**—கும்பகோணம் கோட்டத்தில் உள்ள தீவிர சாகுபடி பரப்பில் முதன் முறையாகக் குறுவைக் காலத்தில் ஜப்பானிகா, இண்டிகா நெல் ரகத்தின் உபயோகத்தைப் பரிசீலிக்க 200 எக்கராவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த நெல் ரகத்திற்கு ஆடுதுறை 27 என்று பெயரிடப்பட்டது. இது அதிக அளவு உரத்தைத் தாங்கும். இத் திட்டம் இந்திய விவசாய ஆராய்ச்சி மன்றத்தின் பொருளுதவியின்கீழ் நடத்தப்பட்டது. இது 200 எக்கராவில் இருந்து கிடைக்கும் விதையைக்கொண்டு 1965-ம் ஆண்டு குறுவைக் காலத்தில் 5,000 எக்கராவில் பயிரிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு மாநிலங்களிலிருந்து பார்வையாளர்களும், 'பௌண்டேஷன் அதிபர்களும், தஞ்சாவூருக்கு வந்து தீவிரச் சாகுபடித் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது, அதனால் விவசாயிகள் அடைந்த பயன் என்ன என்பதை ஆராய்ந்து சென்றுள்ளனர்.

**2 (5) விவசாயம்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாய வளர்ச்சிக்காக மாவட்ட விவசாய அலுவலர்கள் ஆறு பேர் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்குத் தஞ்சை, கும்பகோணம், மாயூரம், மன்னார் குடி, பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அலுவலகங்கள் உள்ளன. இந்த மாவட்டத்தில் அறிக்கை ஆண்டில் விவசாயத்துறையில் ஆற்றப்பட்ட பணியின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் தீவிர விவசாய சாகுபடி திட்டம் போர்டு பவுண்டேஷன் " Ford Foundation " உதவியினால் எல்லா வட்டாரத்திலும் அமலாக்கப்பட்டு வருகிறது.

2. இம்மாவட்டத்தில் நெற்பயிரே முக்கிய சாகுபடியாகும். நெல்லைத் தவிர முத்துப்பேட்டை, தலைஞாயிறு, வேதாரணியம், பட்டுக் கோட்டை முதலிய பகுதிகளில் தென்னைச் சாகுபடியும் நடைபெற்று வருகிறது. வேதாரண்யம் வட்டாரத்திலும், ஆவுடையார்கோயில் வட்டாரம், மணல்மேல்குடி சத்திரம் தோட்டத்திலும் புகையிலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாய முன்னேற்ற வளர்ச்சிக்கு அரசாங்கம் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறது. முதல் தர விதைகள் விநியோகத் திட்டம், நாட்டு எரு அபிவிருத்தித் திட்டம், நவீன விவசாயக் கருவிகள் விநியோகத் திட்டம், பூச்சி மருந்து வழங்கும் திட்டம் போன்றவை அவற்றுள் முக்கிய மானவையாகும். இத் திட்டங்களின் முழுப் பயனையும் விவசாயிகள் பூரண மாக உபயோகித்து நன்மையடையும்பொருட்டு ஒவ்வொரு திட்டத்திலும் மானியச் சலுகை வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திட்டத்தின் கீழும், இந்த மாவட்டத்தில் அறிக்கை ஆண்டில் நடைபெற்ற வேலைகளின் விவரம் வருமாறு :—

1. **முதல்தர விதைகள் விநியோகத் திட்டம்.**—தரமான பொறுக்கு விதைகள் மூலம் நல்ல விளைச்சலையும், பயனையும் அடையும் பொருட்டு இந்த மாவட்டத்தில் அறிக்கை ஆண்டில் 1,737 டன் பொறுக்கு விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

2. **கிராம நல உதவியாளர்கள் திட்டத்தின்கீழ் மாற்றிக்கொள்ளப்பட்ட விதைகள்.**—ஒவ்வோர் ஆண்டும் நெல் பயிரிடப்படும் நிலத்தில் மூன்றில் ஒரு பகுதியில் பொறுக்கு விதைகள் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். கிராம நல உதவியாளர்கள் மூல வித்துக்கான விதைகளை அரசாங்க விதைப் பண்ணையிலிருந்து வட்டார விவசாய மண்டி மூலம் வாங்கி தங்கள் பண்ணைகளில் பெருக்குவார்கள். அவ்வாறு பெருக்கிய விதைகளை முறைப்படிச் சுத்தம் செய்து தேவையான அளவு உலர்த்திய பின்னர் பைகளில் நிரப்பப்பட்டு அவை விவசாயிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. அந்த வகையில் அறிக்கை ஆண்டில் இந்த மாவட்டத்தில் 8,164 டன் நெல் விதைகள் கிராம நல உதவியாளர்கள் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

3. **பசுந்தாள் எரு விநியோகம்.**—ஒரு வட்டாரத்திற்குத் தேவையான அளவு பசுந்தாள் எரு விதைகள் அந்தந்த வட்டார விவசாய மண்டியில் சேகரம் செய்யப்பட்டு வாங்குபவர்களுக்கு பதினைந்து சதவிகிதம் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

4. **இரசாயன உரம் வழங்குதல்.**—இரசாயன உரங்கள் இடுவதால் கிடைக்கும் கூடுதல் உற்பத்தியையும் உரத்தைப் பயன்படுத்த வேண்டிய முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு உர செய்முறை மூலம் விளக்கப்படு கின்றன. இந்த அறிக்கை ஆண்டில் 36,500 டன் அம்மோனியம் சல்பேட்டும் அம்மோனியம் நைட்ரேட் கலப்பு உரங்கள் 37,696 டன்னும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கை ஆண்டில் 15,300 உர செய்முறை விளக்கங்கள் விவசாயிகளுக்கு நடத்திக் காண்பிக்கப்பட்டுள்ளன.

**5. பயிர்ப் பாதுகாப்பு.**—பயிர்களில் பூச்சி அண்டாமலும் பூஞ்சான் நோய்கள் வாராமலும் தடுப்பதற்காக அவ்வப்போது வேண்டிய அறிவுரைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. பயிர்களுக்கு நோய் வந்தால் தடுப்பதற்காக பூச்சி, பூஞ்சான் மருந்துகள் 25 சதவிகிதம் மான்ய விலையில் விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. இதைத் தவிர பயிர்ப்பாதுகாப்புக்கு வேண்டிய தெளிக்கும், தூவும் கருவிகள் சகாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. வாடகைக்கு கொடுப்பதற்கு பஞ்சாயத்து யூனியன் விதைத் தெளிப்பான்களும், மற்றும் கையால் உந்தப்படும் தெளிப்பான்களும், தூவு கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் அறிக்கை ஆண்டில் விவசாயிகளுக்கு 453 தெளிப்பான்களும், 216 தூவுவான்களும் வழங்கப்பட்டுள்ளன.

**6. நவீன விவசாயக் கருவிகள் விநியோகம்.**—நிலங்களை நல்ல முறையில் உழுவதற்கு மேனூர் கலப்பைகளையும், பசுந்தழைகளை சேற்றில் அழுத்துவதற்கு தழை அழுத்தும் கருவிகளையும் உபயோகிக்கும்படி விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி அறிக்கை ஆண்டில் 10,393 மேனூர் கலப்பைகள் விவசாயிகளுக்குச் சகாயவிலையில் வழங்கப்பட்டுள்ளன.

**7. முந்திரி சாகுபடித் திட்டம்.**—முந்திரி சாகுபடி செய்வதற்காக இத் திட்டத்தின்கீழ் கடன் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 80 வீதம் ஒருவருக்கு ரூபாய் இரண்டாயிரத்திற்கு மேற்படாமல் கடன் வழங்கப்படும். ஏக்கருக்கு 3 ராத்தல் வீதம் நல்ல முந்திரி விதைகள் கொடுக்கப்படும். 421 ஏக்கர் நிலத்தில் இந்த மாவட்டத்தில் அறிக்கை ஆண்டில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**8. பழ அபிவிருத்தித் திட்டம்.**—இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நீண்ட காலக்கடன், குறுகிய காலக்கடன் முறைகளில் பண உதவி செய்யப்படுகின்றது. அறிக்கை ஆண்டில் இந்த மாவட்டத்தில், கடனுதவி பெற்று 88 ஏக்கர் நிலத்தில் விவசாயிகள் பழத்தோட்டங்கள் அமைத்துள்ளனர்.

**9. வடிமுனைக் குழாய்க் கிணறு.**—குறைந்த கட்டணத்தில் குழாய்க் கிணறு இறக்கித் தண்ணீர் இறைத்துக்கொள்வதற்கான இயந்திரம் வாங்க ரூ. 3,000 வரை கடன் வழங்கப்படுகின்றது. இந்தக் கடன் ஐந்து ஆண்டுத் தவணைகளில் திருப்பி வசூலிக்கப்படும். இந்தத் திட்டத்தின்கீழ் அறிக்கை ஆண்டில் 144 வடிமுனைக் குழாய்க்கிணறுகள் இறக்கப்பட்டுள்ளன.

**10. பயிர்விளைச்சல் போட்டி.**—பயிர் விளைச்சலைப் பெருக்குவதில் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அதிக விளைச்சல் காண்பிப்பவர்களுக்கு ஆண்டுதோறும் பரிசு வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு உற்சாகம் ஏற்பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்காக சாகுபடி முறையில் நவீன முறைகளைக் கையாள ஆரம்பித்துள்ளனர். இதைத் தவிர ஒவ்வொரு வட்டாரத்திலும் மரம் நடு விழா, கலவை உர வார விழா மற்றும் விதை பொறுக்குத்திட்ட வார விழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இப்படி பலவகையாலும், விவசாயிகளை ஊக்குவித்து உணவு உற்பத்தியைப் பெருக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2 (6) முந்திரி அபிவிருத்தித் திட்டம்.—ஆண்டுதோறும் முந்திரி ஏற்றுமதியின்மூலம் நம் நாட்டிற்குக் கணிசமான அளவில் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. தமிழ்நாட்டில் முக்கியமாக தஞ்சை மாவட்டத்தில் முந்திரி சாகுபடிக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. செம்மண் பரவலான சரளை நிலங்களிலும், மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளிலும் முந்திரி சாதாரணமாக பயிரிடப்படுகிறது.

முந்திரி சாகுபடியை அதிகரிக்க தமிழ்நாடு அரசாங்கம் நீண்ட காலக் கடன் வசதித் திட்டமொன்றை அமுல் நடத்தி வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 80-ம் அதிக அளவு ஒரு நபருக்கு 25 ஏக்கர் சாகுபடி செய்ய ரூபாய் 2,000 வரையும் கடன்வசதி அளிக்கப்பட்டு வருகிறது. கடன் கொடுத்த தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழித்துக் கடன் தொகை ஐந்து ஆண்டு சம தவணைகளில் $5\frac{1}{2}$ சத விகித வட்டியுடன் திரும்ப வசூலிக்கப்படுகிறது. பொறுக்கு விதைகள் விவசாயத் துறையினரால் வழங்கப்படுகின்றன. இலவச ஆலோசனைகளும் அவ்வப்போது விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1964–65 ஆம் ஆண்டில் முந்திரி சாகுபடித் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட வேலை விவரம் வருமாறு :—

| இலக்கு. | | சாதனை. | |
|---|---|---|---|
| கடன் (ரூபாய்) | பரப்பு (ஏக்கர்) | கடன் (ரூபாய்) | பரப்பு (ஏக்கர்) |
| 32,160 | 402 | 33,710 | 421 |

1963-ஆம் ஆண்டிலிருந்து மேற்படி கடன் வசதிகளை கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் அளிக்க தமிழ்நாடு அரசாங்கம் ஆணையிட்டதால், இந்த சலுகையைப் பெற்று அறிக்கை ஆண்டில் 5 பஞ்சாயத்துக்கள் முந்திரித் தோட்டங்கள் அமைத்துள்ளன.

2 (7) **விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டு விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் உள்ளன. ஒன்று ஆடுதுறையிலும், மற்றொன்று பட்டுக்கோட்டையை அடுத்துள்ள வேப்பங்குளத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. 1964–65-ம் ஆண்டில் மேற்படி பண்ணைகளில் நடைபெற்ற வேலை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

1. **ஆடுதுறை வட்டார ஆராய்ச்சிப் பண்ணை** :—இந்த அறிக்கை ஆண்டில் மொத்தம் 44–15 அங்குலம் மழை பெய்தது. இது கடந்த ஆண்டு மழையளவைவிட 18.3 அங்குலம் குறைவாகும்.

**நெல் ஆராய்ச்சி.**—நாரின்–8 என்னும் ஜப்பானிய ரகத்துடன் கிச்சிலிச் சம்பா நெல்லைக் கரு ஒட்டுச் சேர்த்து செய்த ஆராய்ச்சியின் விளைவாகக் கிடைத்த 2,914 என்னும் பொறுக்குரகம் (ADTஆடுதுறை 27) என்றஉயர்ந்த பொறுக்கு விதை உருவாக்கித் தரப்பட்டுள்ளது. இந்த உயர்ந்த ரகத்தை கும்பகோணம் கோட்டத்தில் விவசாயிகள் 200 ஏக்கரில் பயிர் செய்து சோதனை செய்ததில் சாதாரண அளவு உரமிட்டால் ஏக்கருக்கு 1,983 கிலோ தானியமும், அதிக அளவு உரமிட்டால் ஏக்கருக்கு 2,365 கிலோ தானியமும் கிடைக்கிறதென்று தெரியவந்துள்ளது. இந்த உயர்ந்த ரகம் காவிரி பாயும் பகுதிகளில் இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களில் ADT 20-க்குப் பதிலாகப் பயிர் செய்யப்பட்டு வரும். இது அதிக உரமேற்று நல்ல விளைச்சலைத் தரும் தன்மையோடு மட்டுமல்லாமல் எளிதில் சாயாமல் நிற்கவல்லதாகையாலும் சிறந்த வகை அரிசியினை உடையதாகையாலும் விவசாயிகட்குப் பெருமளவில் நன்மை பயக்கும். இதனைப் பயிரிடுவதால் ஓர் ஆண்டில் சுமார் 120 லட்ச ரூபாய் மதிப்புள்ள 40,000 டன் தானியம் அதிகமாகக் கிடைக்கும்.

ADT 3 என்னும் நம் நாட்டு ரகத்தையும், சி.எச். 42 என்னும் சீன ரகத்தையும் கருச் சேர்க்கை செய்து ஆராய்ச்சி செய்ததின் பயனாகக் கிடைத்ததுதான் 2,701 என்னும் பொறுக்கு ரகம். இது கதிர் நன்றாக முற்றிய நிலையிலும் சாய்வதில்லை என்பதோடு, ஆராய்ச்சி நிலையத்தில் ஐந்து வருடப் பரிசோதனைகளில் ADT 3-ஐ விட அதிக மகசூலையும் கொடுத்துள்ளது.

இதன் பயனை விவசாயிகளுக்கு எடுத்துக் காட்டுவதற்காக மாயூரம், நாகப்பட்டினம் கோட்டங்களில் சுமார் 200 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்ய ஒரு முன்னோடித் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இது சுமார் 50,000 ஏக்கர் நிலங்களில் பரவும் வாய்ப்பிருப்பதால் அதிக விளைச்சல் மூலம் சுமார் $37\frac{1}{2}$ லட்சம் ரூபாய் மதிப்புள்ள 12,500 டன் தானியம் இதன் மூலம் கூடுத லாகக் கிடைக்குமென எதிர்பார்க்கலாம்.

நூற்று ஐந்து நாட்களில் விளையும் குறுவை நெல் ரகங்களின் தானியங் கள் அனேகமாக பருமனுள்ளனவாயும், எளிதில் உதிர்ந்துவிடக்கூடியன வாயும் உள்ளன. இக்குறைகளை நீக்கும் நோக்கத்துடன் ADT 16 என்ற ரகத்தையும். கிச்சிலிச் சம்பாவையும் கருச்சேர்க்கை செய்து பரிசோதனை கள் நடத்தியதில் 2,032 என்னும் புதுரகம் ஒன்று கிடைத்துள்ளது. இது ADT 16ஐவிட பத்து நாட்கள் முன்னதாகவே விளைந்துவிடுவதாகவும், ADT 16 போன்று சன்ன நெல்லை உடையதாயும், ஆனால் எளிதில் உதிராத் தன்மை கொண்டதாயும் உள்ளது. நூறு நாட்களில் விளைந்து விடும் நெல் வகைகளில் இவ்வளவு சின்ன அரிசி, கொண்ட நெல் ரகம் இதுவரை வெளிவந்ததில்லை என்று கூறமுடியும்.

**பயிர்ப் பாதுகாப்பு.**—நண்டுகளால் நெற்பயிருக்கு ஏற்படும் சேதத்தை 0.1% பாரதியான் மருந்து அடிப்பதன்மூலம் தடுக்க இயலும் என்றும், எண்ட்ரில் 0·03% அடித்து குருத்து பூச்சியைக் கொல்லுவது சிக்கனமுறை என்றும் தெரிகிறது. ஒரு சதவிகித போர்டோ கலவை அல்லது கோபிசான் 0.5%ஐ அடித்து குலை நோயைத் தடுக்கலாம். போர்டோ கலவை, கோபிசான் ஆகிய இரண்டினுள் போர்டோ கலவை அடிப்பதே சிக்கன மானது. இதனால் ஏக்கருக்கு 91·82 ரூபாய் நிகர வருமானம் கிடைக் கிறது.

**வெண்டை.**—தாளடி அல்லது சம்பா பயிருக்குப் பின் வயலை உழுது புழுதியாக்கி பூசாசவாலி என்ற வெண்டை வகையைப் பயிரிடுவதால் ஏக்க ருக்கு சுமார் ரூ. 1,200 நிகர லாபம் கிடைக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

**பருத்தி.**—ரஷ்யாவிலிருந்து வந்த பருத்தி வகைகள் சில தாளடிப் பயிருக்குப்பின் பயிரிட உகந்தவை என்றும், இவை பி. 216 எப் ரகத்தை விட அதிக மகசூல் கொடுக்கவல்லவை, அதாவது ஏக்கருக்கு சுமார் 1,400 ராத்தல் பஞ்சு கொடுக்கவல்லவை என்றும் ஆராய்ந்து காணப்பட் டுள்ளது.

**கோடை விவசாயம்.**—கோடை காலத்தில் பல நெல் வகைகளைப் பயிரிட்டு பரிசோதனை செய்ததில் டி.கே.எம். 3, ஏ.டி.பி. 27 ஆகியவை மற்ற ரகங்களைவிட மேலானவை என்று தெரியவருகிறது.

**பசுந்தாள் எரு உற்பத்தி.**—தரிசு வயலில் செஸ்பேனியா விதைப்ப தன் மூலம் 110 மெட்ரிக் டன் தழை எருவும் வயல் வரப்புகளின்மீது கிளிரிசீடியாச் செடிகள் வளர்ந்து கிடைத்த 50 மெட்ரிக் டன் தழையும் வயல்களுக்கு எருவாகப் பயன்படுத்தப்பட்டன. சாலை மரங்களிலிருந்து 58 கிலோ கிளிரிசீடியா விதைகளும் வரப்பு ஓரங்களில் நட்டுவைத்த செடி களிலின்றும் 430 கிலோ செஸ்பேனியா விதைகளும் சேர்க்கப்பட்டன. பசுந்தாளெரு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்திற்காக 77,575 கிளிரிசீடியா கன்றுகளும், 7,260 மீட்டர் நீளமுள்ள கிளிரிசீடியா விதைக் கழிகளும் விற்பனை செய்யப்பட்டன.

**பயறுகள்.**—நன்செய்த் தரிசில் வளரக்கூடிய பயறுவகைப் பயிர்களில் 21 என்னும் எண்கொண்ட பச்சைப்பயறும், 15 என்னும் எண் கொண்ட உளுந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**பழச்செடிகள்.**—இப்பண்ணையிலிருந்து மா, பலா, எலுமிச்சை, பம்பளி மாஸ், துருஞ்சி போன்ற கன்றுகளில் மொத்தம் 440-ம், தென்னம்பிள்ளை

களில் 440–ம், இளவங்கன்றுகளில் 4,140–ம், சினியா புற்சிம்புகள் 8,750–ம் பொதுமக்கட்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**கால்நடை.**—மூன்று சிந்து பசுக்களிலிருந்து 2,320 லிட்டர் பால் கிடைத்து விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பண்ணைக்கு உழவர் பெருமக்களும், நிலச்சுவான்தார்களும், ஏனைய துறையில் உள்ள எண்ணற்ற மக்களும், மாணவரும், நம்நாட்டு விஞ்ஞானிகள் மட்டுமன்றி வெளிநாட்டு விஞ்ஞானிகளும், மற்றுமுள்ள அறிஞர்களும் வருகை தந்து, பண்ணையின் செயல்முறைகளை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

**2. தென்னை ஆராய்ச்சிப் பண்ணை—வேப்பங்குளம்.**—1953, 55–ம் ஆண்டு உண்டான கோரப் புயலினால் கிழக்கு கடற்கரைப் பிரதேசத்தில் தென்னை அதிகமாகப் பாதிக்கப்பட்டு பெருத்த சேதம் உண்டாகியது. தென்னை உற்பத்தியைப் பெருக்க நவீன முறையை மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டமையால், தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று கிழக்கு கடற்கரைப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டது. கிழக்கு கடற்கரைப் பிரதேசத்திற்குப் பொருந்திய நிலவளம், உரவளம், தென்னை வகை, பூச்சி, பூஞ்சாளை நோய்த் தடுப்பு முறை, முதலியவற்றைக் கண்டுபிடிப்பதற்கும், தென்னை சம்பந்தமாக சாகுபடியாளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நீக்குவதற்கும், இந்திய மத்திய தென்னைக் குழுவின் உதவியைக்கொண்டு இந்த மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சிப் பண்ணை நிறுவப்பட்டது.

**அறிக்கை ஆண்டில் ஆராய்ச்சிப் பண்ணையில் கீழ்க்கண்ட பரிசோதனைகள் செய்யப்பட்டன.**—1. இடைவெளி, உர அளவு பரிசோதனை.—20' × 20', 25' × 25' 30' × 30' கொண்ட மூன்று வித இடைவெளிகளில் தென்னங் கன்றுகள் நடப்பட்டு அளவுகள் எடுக்கப்படுகின்றன. ஒவ்வொருவித இடைவெளிக்கும் மூன்று வித உர அளவுகள், அதாவது உரமில்லாதது, ஓரளவு உரம், இருமடங்கு உரம், ஆகியவை இட்டுப் பரிசோதனை செய்யப்படுகிறது. இந்தப் பரிசோதனையைத் தொடர்ந்து செய்து தென்னங்கன்றுகளுக்கு இடையே உள்ள இடைவெளி, தகுந்த உரம் ஆகியவை நிர்ணயிக்கப்படும். மற்றும், தென்னை நல்ல முறையில் மகசூல் கொடுக்கவும், நல்ல முறையில் வளரவும், அவற்றைத் தகுந்த முறையில் பயிரிடவும் இங்கு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. இதுவரை செய்யப்பட்ட பரிசோதனையிலிருந்து 2' ஆழத்தில் தென்னம்பிள்ளைகளை நடுவது இந்தப் பகுதிக்கு ஏற்றது என்று தெரிகிறது. ஆனால் நடவேண்டிய ஆழம் பற்றி இறுதியான முடிவைக்கான இன்னும் சில காலம் இந்தப் பரிசோதனையை தொடர்ந்து செய்யவேண்டியுள்ளது. இது போன்றே தென்னை அதனுடைய தாய் வழியைப் பின்பற்றி வளர்ச்சியடைகிறதா என்று அறியவும், வெளிநாட்டுத் தென்னைகள் நம்நாட்டு மண்ணில் நல்ல முறையில் பயிராகுமா என்பது பற்றியும் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

மற்றும் இம்மாவட்டத்திலுள்ள பகுதிகளில் விளையும் சிறந்த இனத் தென்னைகளில் மிக உறுதியானதும், தொடர்ந்து பலன்தரக்கூடியது மான தென்னையின் வமிசாவழி வளர்ச்சியை மேலும் விவரமாகத் தெரிந்து கொள்ளவும், தென்னைகளில் குரும்மை உதிர்ந்துவிடுவதைத் தடுக்க ரசாயன மருந்து தெளிப்பது பற்றியும், பருவகால மாற்றங் களினால் தென்னையின் மகசூல் பாதிக்கப்படுகின்றனவா என்று அறியவும், தென்னையில் வரிசைக்கு வரிசை அதிக இடைவெளியும், ஒரே வரிசையில் குறைந்த இடைவெளியும் வைத்துத் தென்னையின் மகசூல் பற்றி கணக்கிடுவதற்கும், தொடர்ந்து ஆராய்ச்சி செய்யப்பட்டுவருகிறது.

தென்னையின் குருத்தைத் தாக்கும் கருவண்டினை, வண்டெடுக்கும் ஊசியால் குத்தி எடுத்து, இலைகளின் இடைவெளியில் பி எச்சி, 10%ஐ மணலுடன் கலந்து, மேற்கொண்டும் பூச்சி தாக்காவண்ணம் தடுக்கப் படுகிறது. சிகப்புக் கூன்வண்டு தாக்கிய மரங்களில் பைரோகோன்—ஈ என்னும் மருந்தைத் தண்ணீருடன் கலந்து உட்செலுத்தி அதன் தாக்குதல் தடுக்கப்படுகிறது. பல்வேறு துறைகளிலும் கவனம் செலுத்தி தென்னை உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய இந்த ஆராய்ச்சிப் பண்ணை பெரிதும் முயன்று வருகிறது.

2. (8) **வனவளம்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் 1964–65 நிதியாண்டில் மாவட்ட வனத்துறையினர் ஆற்றிய பணியின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆற்றரிப்பைத் தடுத்துக் கரைகளைப் பலப்படுத்துவதற்காக ஆறு ஏரி, கால்வாய்க் கரையோரங்களில் தேக்கு கன்றுகள் நடுதல்.—

| | | எக்கர். | |
|---|---|---|---|
| (1) | வெண்ணாறு, வெள்ளையாறு, வெலப்பாறு இவற்றின் கரையோரங்களில் தேக்குக் கன்றுகள் நடப்பட்ட பரப்பு. | 240 | |
| (2) | புதாறு, பாலாறு, அரசலாறு | 240 | |
| (3) | புதிய கட்டளை மேல்மட்டக் கால்வாய் .. | 240 | (மூன்றும் வனச் சரகம், திருச்சி.) |
| (4) | மன்னையாறு கொள்ளிடம் .. | 240 | |
| (5) | கோரையாறு, பாமணியாறு .. | 240 | |
| | | 1,200 | |

ஒரு ஏக்கருக்கு 80 கன்றுகள் விதம், 1,200 ஏக்கர்களிலும் மொத்தம் 96,000 தேக்குக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. நடப்பட்ட தேக்குக் கன்றுகள் நன்றாக வளர்ந்து வருகின்றன.

2. **சவுக்கு வளர்புத் திட்டம்.**—இத்திட்டத்தின்கீழ் இலட்சிய அளவான 70 எக்கர் பகுதியையும் நான்காவது வனச்சரகத்தைச் சேர்ந்த முதலை மடு, சோதியக்குடி, மகாராசபுரம் ஆகிய இடங்களில் எடுத்து நடப் பட்டுள்ளது.

3. **முந்திரி உற்பத்தித் திட்டம்.**—இத்திட்டத்தின் இலட்சிய அளவான 30 எக்கர் பகுதியையும் மன்னார்குடி வனச் சரகத்தைச் சேர்ந்த கீரமங்கலத்தில் எடுத்து முந்திரிவிதையிடப்பட்டது. முந்திரி கன்றுகள் நன்கு வளர்ந்து வருகின்றன.

4. **அரக்கு உற்பத்தித் திட்டம்.**—1964–65-ல் இத்திட்டத்தின்கீழ் 175 தூங்குமூஞ்சி மரங்களில் அரக்கு கட்டப்பட்டது. இன்னும் அரக்கு அறுவடை செய்யப்படவில்லை.

5. **தென்னை வளர்ப்புத் திட்டம்.**—வன அபிவிருத்தித் திட்டப்படி 1964–65-ல் மன்னார்குடி வனச் சரகத்தைச் சார்ந்த மணமேற்குடியில் 40 ஏக்கரில் 3,600 தென்னங் கன்றுகள் நடப்பட்டன. தேவையான தென்னங்கன்றுகள் பட்டுக்கோட்டை தென்னை அபிவிருத்தி அலுவலரிடமிருந்து வாங்கி நடப்பட்டன. அவை நன்கு வளர்ந்து வருகின்றன.

மேற்கண்ட விவரங்களின்படி அறிக்கை ஆண்டில் செலவிடப்பட்ட தொகையின் விவரம் :

| திட்டத்தின் பெயர். | அளவு ஏக்கர். | தொகை ரூ. பை. |
|---|---|---|
| 1. ஆறு, ஏரி, வாய்க்கால் கரைகளில் தேக்கு கன்றுகளை நடும் செலவு. | 1,200 | 1,63,557 00 |
| 2. சவுக்கு வளர்ப்பு | 70 | 14,973 00 |
| 3. முந்திரி உற்பத்தி | 30 | 2,351 00 |
| 4. அரக்கு உற்பத்தி | 175 (மரங்களில் கட்டப்பட்ட அரக்கு.) | 5,897 00 |
| 5. பணியாளர்களுக்கான வீட்டு வசதி திட்டம். | சில வேலைகள் | 746 00 |
| 6. தென்னை வளர்ப்புத் திட்டம் | 40 | 9,047 00 |
| மொத்தம் .. | | 1,96,571 00 |

மேற்கண்ட செலவினத் தொகையில், தோட்டங்களின் பராமரிப்புச் செலவும் அடங்கும்.

2. (9) **மீன் வளம்.**—"மீன் உணவு" சத்துள்ள உணவு வகைகளில் ஒன்றாகும். குறைந்த விலையில் அவை கிடைப்பதால் ஏழைகளும் அவற்றின் பயனை எளிதில் பெற முடிகிறது. உணவு பற்றாக்குறையை ஓரளவு தீர்ப்பதற்கு இந்த 'மீன் உணவு' பெரிதும் உதவுகிறது.

2. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1964-65 ஆம் ஆண்டில் மீன் வளர்ப்புத் துறையினர் ஆற்றிய பணியின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

**உள்நாட்டு மீன் பிடிப்பு.**—இந்த ஆண்டில் 38,725,784 மீன் குஞ்சுகள் சேகரித்து வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டன. கடந்த மூன்று ஆண்டுகளாக, வருவாய்த்துறை அதிகாரிகளால் தேசிய மய மாக்கப்பட்ட ஆறு, குளங்கள், மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஏலம் விடப்பட்டு வருகின்றன. மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்காக வெண்ணாறு வெட்டாறு ரெகுலேட்டர்களில் 'நர்சரி' கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

**'மாதிரி மீன் குளங்கள்'.**—இந்த மாவட்டத்தில் 17 கிராமங்களில் மாதிரி மீன் குளங்கள் இருக்கின்றன. 1964-65 ஆம் ஆண்டில் மொத்தம் 29,443,150 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டன. அதன் விற்பனைத் தொகையாக ரூ. 14,833·34 அரசாங்கத்திற்குக் கிடைத்தது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 36 வட்டாரங்களிலும் 'நர்சரி' அமைப்பதற்கு தகுதியான இடம் பார்க்கப்பட்டு மீன் பண்ணைகள் நிறுவப்பட்டன. அவைகளின் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1. மீன் பண்ணைக்காக நர்சரி கட்டுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த இடங்கள். | 132 |
| 2. இதுவரை மீன் நர்சரி வேலை பூர்த்தி செய்யப்பட்ட நர்சரிகளின் எண்ணிக்கை. | 94 |
| 3. வழங்கப்பட்ட மீன் குஞ்சுகள். | 10,670,500 |

**மீனவர்களுக்கு விசைப் படகுகள்.**—விசைப்படகுகளைக் கொண்டு நவீன முறையில் மீன்பிடி தொழிலை விருத்தி செய்ய மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விசைப்படகுகளும், வலைகளுக்கான நூலும் கொடுக்கப் பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | இந்த ஆண்டு கொடுக்கப்பட்ட விசைப்படகுகளின் எண்ணிக்கை | 4 |
| 2. | மானியமாகக் கொடுக்கப்பட்ட வலை நூலின் மதிப்பு | ரூ. 5,369·70 |
| 3. | மொத்தம் உபயோகிக்கப்பட்ட நூலின் மதிப்பு | ரூ. 7,019·20 |

**மீன் பதனிடும் வாடிகள்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் ஐந்து மீன் பதனிடும் வாடிகள் உள்ளன. அவை பின்வருமாறு :—

1. அதிராம்பட்டினம்.
2. முத்துப்பேட்டை.
3. சேதுபாவா சத்திரம்.
4. ஆர்க்காட்டுத்துறை.
5. வானகிரி.

ஐந்து மீன் வாடிகளிலும் மொத்தம் 1,500 டன் மீன் பதப்படுத்து வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 1,569 டன் மீன் பதப்படுத்தப் பட்டன.

**சங்கு.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடிக்கரைப் பகுதிகளில் சங்கு குளிப்பு செய்கிறார்கள். மூன்று வருட காலத்தில் (1963 முதல் 1966 வரை) மீதமுள்ள பகுதிகளில் வருடத்திற்கு ரூ. 36,111 வீதம் சங்குக குளிப்பு எலம் விடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மீனளத்துறையினால் சேகரிக்கப்பட்ட சங்குகளின் விவரம்.—

| | | |
|---|---|---|
| முழு உருவ சங்கு | .. | 12,310 |
| எரிந்த சங்கு | .. | 3,508 |
| குழாய் சங்கு | .. | 11,860 |

எல்லா சங்குகளும் சேதுபாவா சத்திரத்திலுள்ள சங்கு கிடங்கில் சேகரிக்கப் பட்டுள்ளன.

**தஞ்சாவூர் மீனவர் கூட்டுறவு ஒன்றிப்பு.**—தஞ்சாவூர் மீனவர் கூட்டுறவு ஒன்றிப்பு 1957-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் தேதியில் பதிவு செய்யப் பட்டது. மேற்படி சங்கம் 1957-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் தேதியில் 16 அங்கத்தினர்களைக் கொண்டு ரூ. 800 பங்கு முதலீட்டுடன் ஆரம்பிக் கப்பட்டது. மேற்படி சங்கத்தில் மீன்துறை உதவி நெறியாளரும் கூட்டுறவு மத்திய பாங்கி அமைப்பாளரும் அங்கம் வகிக்கிறார்கள். தனியார் நிறுவனங்களிடமிருந்து சமஷ்டிகள் மூலம் நைலான் நூல் வாங்கப்பட்டு குறைந்த விலையில் மீனவர் சங்கத்திற்கு வழங்கப்படுகிறது.

**மீன் விற்பனை யூனியன்.**—நாகப்பட்டிணத்தில் மீன் விற்பனை யூனியன் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த யூனியனுக்கு மீன்துறை ஆய்வாளர் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்குச் சென்று அவர்கள் பிடிக்கும் மீன்களைச் சங்கம் மூலமாக மேற்கண்ட விற்பனை யூனியனுக்கு அனுப்ப செயலாளர் அவ்வப்போது ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

**மோட்டார் வண்டிகள்.**—மீன் சேகரிப்பு நிலையங்களிலிருந்து மற் அரசாங்கக் குளங்கள், நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றிற்கு மீன் குஞ்சுக

எடுத்துச்செல்ல இந்த மாவட்டத்தில் 10 மோட்டார் வண்டிகள் அரசாங் கத்தால் வழங்கப்பட்டுள்ளன.

**மீன்துறை உயர்தர ஆரம்பப்பள்ளி.**—மீன்துறை நிர்வாகத்தினரால் காவிரிப்பூம்பட்டிணத்தில் உயர்தர ஆரம்பப்பள்ளி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இதில் மீனவர்களின் குழந்தைகள் கல்வி பயிலுகின்றனர்.

**குளிர் சாதன முறை.**—தஞ்சாவூர் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கீழவாசல் மீன் கடைக்கு அருகில் 6,086 சதுர அடி நிலம் குளிர் சாதனம் அமைப்பதற்காக வாங்கப்பட்டு கட்டிட வேலை முடிந்துவிட்டது. அதில் இயந் திரங்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

மற்றும், அண்மையில் தனுஷ்கோடியில் வீசிய கொடிய புயல் காற்றின் விளைவாக தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுகாக் களின் கடற்கரை ஓரப்பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அப்படி பாதிக் கப்பட்ட மீனவர்களின் நல்வாழ்விற்காக அரசாங்கம் கீழ்க்கண்ட உதவிகளைச் செய்தது.

| | | ரூ. |
|---|---|---|
| மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை | .. | 53,794 |
| கொடுக்கப்பட்ட மான்யம் | .. | 60,179 |
| வழங்கிய மொத்த தொகை | .. | 1,13,973 |

2. (10) **மரச்செடி நடுவிழா.**—1964, ஜூலை மாதம் முதல் வாரத்தில் தேசிய மரச்செடி நடு விழாவும், 1964, அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் 9-ம் தேதி முடிய உள்ள வாரத்தில் தனியாக மரச் செடி நடு விழா ஒன்றும் தஞ்சை மாவட்டத்தில் தாசில்தார்கள், துணைத் தாசில் தார்கள், பஞ்சாயத்துக் கட்டுமன்ற ஆணையர்கள் ஆகிய அனைவராலும் கொண்டாடப்பட்டது. அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவாறு மரச்செடிகள் நடப்பட்டன:—

| | | |
|---|---|---|
| நடப்பட்ட பழ மரக் கன்றுகளின் எண்ணிக்கை. | | 79,939 |
| நடப்பட்ட சாதாரண மரச்செடிகளின் எண்ணிக்கை. | | 735,542 |
| கூடுதல் | .. | 815,481 |
| நடப்பட்ட பழ மரக்கன்று உயிருடன் இருப்பவை. | | 63,691 |
| நடப்பட்ட சாதாரண மரச்செடிகளில் உயிருடன் இருப்பவை. | | 485,799 |
| கூடுதல் | .. | 549,490 |

3. **விலங்கின வளர்ப்பு.**—இம்மாவட்டத்தில் விலங்கின வளர்ப்பு அலு வலர்கள் இருவர் உள்ளனர். தஞ்சாவூர், நாகப்பட்டிணம் ஆகிய இடங்களில் அவர்களுக்கு அலுவலகங்கள் உள்ளன.

கால்நடைகள் முன்னேற்றத்திற்காக 1964–65 நிதியாண்டில் ஆற்றிய பணிகளின் விவரம் :—

மேற்படி நிதியாண்டில் மேலத் தஞ்சை மாவட்டத்தில் பெருவாரி யான கால்நடைகளுக்குத் தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டு அவைகள் பாதுகாக்கப்பட்டன. கோழி பராமரிப்புத் திட்டத்தின்கீழ் கிராமங்களுக்கு பாதி விலையில் கோழி முட்டை குஞ்சு பொரிப்புக் கருவிகளும், கோழி தங்குமிடங்களைப் புதுப்பிப்பதற்கும், புதிதாகக்

கட்டுவதற்கும் நபர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் பன்னிரண்டு நபர்களுக்கு உதவித் தொகையும் அளிக்கப்பட்டன.

**பொலி காளைகள்.**—அரசாங்க உதவித் திட்டத்தின்கீழ் பொலி காளைகளைப் பராமரிப்பதற்காக பொலி காளை "முர்ரே" இனத்திற்காக ரூ. 220-ம் இதர காங்கேயம், உம்பளாச்சேரி "சிந்திகிர்", "கிராஸ்" ஆகியவற்றிற்காக ரூ. 200-ம் கொடுக்கப்படுகின்றன. அதன்படி மேற்படி ஆண்டில் 193 காளைகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட கால்நடை ஊழியர்களால் செய்யப்பட்ட பணியின் விவரம் :—

| | | |
|---|---|---|
| 1. | சிகிச்சை அளிக்கப்பட்ட மொத்தக் கால்நடைகள். | 98,490 |
| 2. | காயடிக்கப்பட்ட மொத்தக் கால்நடைகள். | 15,911 |
| 3. | தடுப்பு ஊசிபோடப்பட்ட கால்நடைகள். | 271,544 |
| 4. | கால்நடை வளர்ச்சி அலுவலரால் வாங்கிக் கொடுக்கப்பட்ட உயர் ஜாதி கோழிகளின் எண்ணிக்கை. | 1,820 |
| 5. | கால்நடை வளர்ச்சி அலுவலர்களால் வாங்கிக் கொடுக்கப்பட்ட செம்மறி ஆடுகள். | 74 |

**பொலி காளைகளும் அவற்றின் பயனும்.**

| | |
|---|---|
| பொலி காளைகளின் மொத்த எண்ணிக்கை | 151 |
| மேற்படி காளைகளின் பொலி எண்ணிக்கை | 13,697 |
| பிறந்த கன்றுகள் | 6,760 |
| காளைகளின் உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட உதவித் தொகை. | ரூ. 30,200 |

மேற்படி காளைகள் ஐம்பது சதவிகிதம் அரசாங்க மானியத்துடன் வழங்கப்பட்டவையாகும்.

**கூட்டுறவுப் பால் வழங்கும் நிலையங்கள்.**—வெளிப்பாளையம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, மாயூரம், கீவளூர், திருவாரூர், குத்தாலம் ஆகிய இடங்களில் கூட்டுறவு பால் வழங்கும் நிலையங்கள் ஏற்படுத்தி, பொது மக்களுக்குத் தரமான பால் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் குதிரை அபிவிருத்தித் திட்டம், ஆடு வளர்ச்சித் திட்டம், கோழி வளர்ச்சித் திட்டம், செயற்கை முறை இன விருத்தித் திட்டம் ஆகியவற்றின் மூலமாக நல்ல தரமான கால்நடைகளை வளர்த்து தேசிய கால்நடை வளர்ச்சித் திட்டம் வெற்றியடைய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையிலும் கால்நடைகளின் வளர்ச்சிக்கும் அவற்றின் தரத்தை உயர்த்துவதற்கும் கால் நடைகளுக்குத் தேவையான நவீன தீவன வசதிகளைச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**(4) வருமானத் துறை—(1) நிலவரி.**—

| | | | |
|---|---|---|---|
| இம்மாவட்டத்தில் முன் பசலி பாக்கியும், அறிக்கை ஆண்டின் கேட்புத் தொகையும் (Demand) சேர்த்து திறப்பு, ஜமீன், இனும் கிராமங்களில் வசூலிக்கப்பட வேண்டியிருந்த தொகை. | ரூ. | 2,25,08,225 | 00 |
| வசூலிக்கப்பட்ட தொகை | ரூ. | 2,20,56,406 | 00 |
| பாக்கி | ரூ. | 4,51,819 | 00 |

**பத்திரப் பதிவுகள்.**—தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய இரு இடங்களில் மாவட்டப் பதிவாளர்கள் செயலாற்றி வருகின்றனர். தஞ்சாவூர், ஒரத்த நாடு, பட்டுக்கோட்டை, பாபநாசம், கும்பகோணம் தாலூகாக்களும், மாயூரம், நன்னிலம், அறந்தாங்கி தாலூகாக்களின் சில பகுதிகளும், தஞ்சாவூர் பதிவுப் பத்திர மாவட்டத்தில் சேர்ந்துள்ளன. அறந்தாங்கி தாலூகாவின் ஒரு பகுதி மட்டும் புதுக்கோட்டைப் பதிவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இம்மூன்று பத்திரப் பதிவு மாவட்டங்களிலும் அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கையும் அதன் மூலம் பதிவுத் துறைக்குக்கிடைத்த வருமானத் தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை. | தொகை. ரூ. | பை. |
|---|---|---|
| 1,18,414 | 15,81,738 | 17 |

2. **வாணிக வரி.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் 1964–65 நிதியாண்டில் வசூல் செய்யப்பட்ட வாணிக வரிகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1. | 1939-ம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச்சட்டப்படி வசூலான தொகை. | 16,57,857 | 60 |
| | அபராதமாக வசூலித்தது. | 15,787 | 00 |
| 2. | 1939-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் எண்ணெய் வரிச்சட்டப்படி வசூலான தொகை. | 11,926 | 60 |
| | அபராதமாக வசூலித்தது. | 45 | 00 |
| 3. | 1956-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டப்படி வசூலான தொகை. | 7,21,348 | 75 |
| | அபராதமாக வசூலித்தது. | 8,975 | 10 |
| 4. | 1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம். | 99,09,317 | 28 |
| 5. | 1961-ம் ஆண்டு தல நிதிச் சட்டப்படி வசூலான தொகை. | 12,18,344 | 85 |
| | அபராதமாக வசூலித்தது. | 885 | 00 |
| | | 1,35,44,487 | 18 |

3. **வருமான வரி.**—இம்மாவட்டத்தில் வருமானவரி அலுவலகங்கள் தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய இரண்டு இடங்களில் இயங்கி வருகின்றன. வருமானவரி அதிகாரிகள் பின்வரும் வரிகளை விதித்து வசூலிக்கின்றார்கள்.

1. வருமானவரி
2. செல்வ வரி
3. நன்கொடை வரி
4. செலவு வரி

மேற்கண்ட வரிகள் யாவும், மத்திய அரசாங்கத்தால் விதிக்கப்படும் நேரிடை வரிகளாகும்.

4. **விவசாய வருமான வரி.**—இம்மாவட்டத்தில் 10 விவசாய வருமான வரி அதிகாரிகள் தாசில்தார் தகுதியிலும், 2 உதவி விவசாய வருமான

வரி அதிகாரிகள் உதவித் தாசில்தார் தகுதியிலும் தஞ்சாவூர், விவசாய வருமான வரி உதவி ஆணையரின்கீழ் பணியாற்றி வருகின்றனர்.

2. அறிக்கை ஆண்டில் 242,331–34 ஏக்கர்களுக்கு வரி விதிக்கப்பட்டுள்ளது. இணக்க மனுவின்பேரில் வரி விதிக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 8,42,515–36, புதிதாக 446 வரி விதிப்பு இனங்கள் விவசாய வருமான வரி அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அறிக்கை ஆண்டில் 222 மேல் முறையீடுகள் வரப்பெற்றன. முடிவு செய்யப்படவேண்டிய கட்டுகள் 224 ஆக இருந்தன. அவற்றில் 221 மேல்முறையீடுகள் முடிவு செய்யப்பட்டுவிட்டன.

**விவசாய வருமான வரி வசூல் விவரம்.**

| | ரூ. | பை. |
|---|---|---|
| நடப்பு ஆண்டில் கேட்புத் தொகையும், பழைய பாக்கியும், சேர்த்து வசூல் செய்யப்பட வேண்டியது. | 17,78,802 | 86 |
| வசூல் செய்யப்பட்டது. | 12,81,793 | 29 |
| பாக்கி .. | 4,97,009 | 57 |

5. **நிதித் துறை—(1) கருவூலத்துறை.**—இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பதின்மூன்று கிளைக்கருவூலங்கள் செயலாற்றி வருகின்றன :—

1. தஞ்சாவூர்
2. பாபநாசம்
3. கும்பகோணம்
4. மாயூரம்
5. சீர்காழி
6. நன்னிலம்
7. நாகப்பட்டினம்
8. திருத்துறைப்பூண்டி
9. மன்னார்குடி
10. பட்டுக்கோட்டை
11. அறந்தாங்கி
12. திருவாரூர்
13. ஒரத்தநாடு

மேற்கண்ட கிளைக் கருவூலங்களில், தஞ்சாவூர், சீர்காழி, நன்னிலம் தவிர மற்றவைகள் தமது அலுவல்களை வங்கியின்மூலம் நடத்துகின்றன. தஞ்சாவூர், சீர்காழி, நன்னிலம் ஆகிய கிளைக் கருவூலங்களை வங்கி தொடர்புடைய கிளைக் கருவூலங்களாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதைத் தவிர இம்மாவட்டத்தில் திருவையாறு, திருவிடைமருதூர், வேதாரணியம், பேராவூரணி போன்ற இடங்களில் கிளைக் கருவூலங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

(2) **தலநிதி தணிக்கைத் துறை.**—தல நிதி தணிக்கைக்காக, தஞ்சாவூரில் மாவட்ட இன்ஸ்பெக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரும், அவருடைய உதவியாளர்களும் நாகப்பட்டினம், மாயூரம், திருவாரூர்

நகராட்சிகள், கீழத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நகர ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள், ஹரிஜன மாணவர் உணவு விடுதிகள், சிறுர் சீர்திருத்தப் பள்ளிகள், மற்றும் அரசாங்கத்திடம் உதவித் தொகை பெறும் நிறுவனங்கள் ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்கின்றனர். ஹரிஜன மாணவர் உணவு விடுதிகளுக்கு 1964–65-ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிவுற்றது. நகராட்சிகள் பற்றிய தணிக்கை நடந்துகொண்டு இருக்கிறது.

(3) **கோவில் தணிக்கை.**—கீழ்க்கண்ட நிறுவனங்களின் தணிக்கை அறிக்கை ஆண்டில் செய்யப்பட்டது:—

| | சமயச் சார்புள்ள நிறுவனங்கள் அமைந்துள்ள தாலூகாக்கள். | தணிக்கை செய்யப்பட வேண்டியவை. | செய்யப் பட்டவை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1. | தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, ஒரத்தநாடு. | 155 | 31 |
| 2. | கும்பகோணம், பாபநாசம் | 231 | 49 |
| 3. | நன்னிலம், நாகப்பட்டினம் | 180 | 64 |
| 4. | மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி | 136 | 48 |

6. **நீதி நிர்வாகத் துறை—(1) நீதி, குற்ற இயல்துறை.**—தஞ்சை மாவட்டத்திலுள்ள குற்ற இயல் நீதிபதிகளின் அலுவலகங்களில் 1964–65-ம் நிதி ஆண்டில் பதிவான வழக்குகளின் விவரம் :—

| வழக்குகளின் விவரம். | 1—4—64-ல் தேக்கம். | வரவு. | வேறு நீதி மன்றங்களுக்கு மாற்றலானவை. | 203, 247, 248, 259 & 345 இ.பி.கோ.படி தள்ளுபடி செய்யப்பட்டவை. | மற்றவை. | 1—4—65-ல் தேக்கம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| பதிவானவை. | 1,459 | 53,090 | 2,350 | 3,819 | 46,341 | 1,859 |
| கிரிமினல் அப்பீல் தாக்கல். | 30 | 558 | 1 | .. | 571 | 16 |
| கிரிமினல் ரிவிஷன் மனுக்கள். | 2 | 19 | .. | .. | 20 | 1 |

(2) **நீதி மன்றங்கள்.**—தஞ்சை மாவட்டத்தில் இரண்டு மாவட்ட நீதி மன்றங்கள் உள்ளன. இவை தவிர, மூன்று துணை நீதி மன்றங்களும், 11 மாவட்ட முன்சீப் நீதி மன்றங்களும் உள்ளன. 1961-ல் நிறுவப்பட்டு நாகப்பட்டினத்தில் செயலாற்றிவரும் துணை நீதி மன்றம் நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கி வருகிறது.

இந்த மாவட்டத்தில் பல்வேறு நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டு முடிவான வழக்குகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

**சிவில் வழக்குகள்.**

| வழக்குகள். | 1—4—64-ல் தேக்கம். | பதி வானவை. | மொத்தம். | முடி வானவை. | எஞ்சி யுள்ளவை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6 |
| **1. மேலத் தஞ்சாவூர்.—** | | | | | |
| அசல் வழக்குகள். | 1,485 | 3,769 | 5,254 | 3,813 | 1,441 |
| சிறு வழக்குகள். | 424 | 5,425 | 5,849 | 5,379 | 470 |
| அப்பீல் வழக்குகள். | 307 | 521 | 828 | 677 | 151 |
| பலதரப்பட்ட அப்பீல்கள். | 48 | 210 | 258 | 209 | 49 |
| நிறைவேற்றுமனுக்கள். | 1,554 | 7,368 | 8,922 | 7,463 | 1,459 |
| பலதரப்பட்ட மனுக்கள். | 900 | 22,922 | 23,822 | 22,750 | 1,072 |
| நிலவார அப்பீல். | 10 | 88 | 98 | 51 | 47 |
| **2. கீழத் தஞ்சாவூர் பிரிவு.—** | | | | | |
| அசல் வழக்குகள். | 1,252 | 2,783 | 4,035 | 2,612 | 1,323 |
| சிறு வழக்குகள். | 398 | 4,596 | 4,994 | 4,598 | 396 |
| அப்பீல் வழக்குகள். | 237 | 332 | 569 | 397 | 172 |

**கிரிமினல் வழக்குகள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1. மேலத் தஞ்சாவூர்.—** | | | | | |
| வழக்குகள். | 14 | 93 | 107 | 105 | 2 |
| கிரிமினல் அப்பீல். | 7 | 126 | 133 | 132 | 1 |
| ரிவிஷன். | 1 | 6 | 7 | 7 | .. |
| **2. கீழத் தஞ்சாவூர்.—** | | | | | |
| வழக்குகள். | 7 | 49 | 56 | 52 | 4 |
| அப்பீல்கள் | 2 | 93 | 95 | 79 | 16 |
| **3. மாயூரம் துணை நீதி மன்றம்.—** | | | | | |
| செஷன்ஸ் வழக்குகள். | 4 | 26 | 30 | 28 | 2 |
| **4. நாகை தற்காலிக துணை நீதி மன்றம்.—** | | | | | |
| செஷன்ஸ் வழக்குகள். | 1 | 5 | 6 | 6 | .. |

(3) **போலீஸ் (காவல் துறை).**—தஞ்சை மாவட்டத்தில் 1964–65-ம் ஆண்டில் காவல் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் பின் வருமாறு :—

| | பதிவானவை. | கண்டுபிடிக்கப்பட்டவை. |
|---|---|---|
| கொலை | 62 | 32 |
| கொள்ளை | 1 | .. |
| கன்னக் களவு | 816 | 463 |
| வழிப்பறி | 5 | 2 |
| சாதாரணத் திருட்டு | 1,352 | 894 |
| மாட்டுத் திருட்டு | 157 | 130 |
| | 2,393 | 1,521 |

மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்ட குற்றங்கள் : 7,548.

**7. பொதுப்பணித்துறை.**—

(அ) **பாசனம்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் பாசனம், காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் ஆகிய மூன்று முக்கிய ஆறுகளின் மூலம் நடைபெறுகிறது. இம்மூன்று ஆறுகளின்மூலம் நடைபெறும் பாசனத்தைக் கண்காணித்து ஒழுங்குபடுத்துவதற்காக மூன்று நிர்வாகப் பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இங்குள்ள பொதுப்பணித்துறை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நிர்வாகப் பொறியாளரிடமும் ஒவ்வொரு கோட்டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவை— 1. நிர்வாகப் பொறியாளர், காவிரிக்கோட்டம்.

2. நிர்வாகப் பொறியாளர், கல்லணைக் கால்வாய்க் கோட்டம்.

3. நிர்வாகப் பொறியாளர், வெண்ணாறு கோட்டம்.

1964–65-ஆம் ஆண்டில் பாசனப் பிரிவில் நடைபெற்ற வேலைகளின் விவரம் கீழே தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) **பாசனப் பிரிவு.**—மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சரிவர மழை இல்லாத காரணத்தால் மேட்டூர் அணைத் தேக்கத்தில் நீர் வெகுவாக குறைந்துவிட்டது. ஆகவே, சற்றுக் குறைவாகவே தண்ணீர் திறந்துவிடப் பட்டது. 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் தேதி அன்று மேட்டூர் அணையில் கல்லணைக் கால்வாய் பிரிவிற்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ம் தேதியன்று காவிரிப் பிரிவிற்கும், வெண்ணாறு பிரிவிற்கும் தண்ணீர் விடப்பட்டது. ஆரம்ப காலத்தில் விவசாயத்திற்கு ஏற்றவாறு பாசனப் பகுதியிலும் மழை பெய்யவில்லை. எனவே, தண்ணீர் பற்றுக்குறை தவிர்க்க முடியாததாகிவிட்டது. பிறகு போதுமான அளவு தண்ணீர் விடப்பட்டு குறுவைச் சாகுபடி நல்ல முறையில் நடந்து அறுவடையாகி நல்ல பயனும் கிடைத்தது. வழக்கம்போல் ஆறுகளில் முறை வகுத்துத் தண்ணீர்விடும் திட்டம் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் தேதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் வடகிழக்குப் பருவக்காற்றினால் அக்டோபர் மாதத்தில் பரவலாகவும், நவம்பர் மாதத்தில் முற்பகுதியிலும், டிசம்பர் மாதத்தில் பிற் பகுதியிலும் சராசரிக்குச் சற்று அதிகமாகவும் மழை பெய்ததால், தாளடி

பயிரும், சம்பாப் பயிரும் நல்ல பலனைக் கொடுத்தன. அறிக்கை ஆண்டில் நதிகளின் மராமத்திற்காகவும், அபிவிருத்திக்காகவும் ரூ. 35,07,961 செலவழிக்கப்பட்டுள்ளது.

(ஆ) **சிறு பாசனச் சிறப்புத் திட்டம்.**—அறிக்கை ஆண்டில் 53 சிறிய வேலைகள் சிறு பாசனச் சிறப்புத் திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஆறுகளின் குறுக்கே சிறு அணைகள் கட்டுதல், ஏற்கனவே உள்ள அணைகளைப் பழுதுபார்த்தல், காட்டாறுகளில் மழைக்காலங்களில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தை வீணாக்காமல் தகுதியான இடங்களில் அணைகள் கட்டி பாய்வாய்க்கால்கள் மூலம் இருபுறங்களிலும் உள்ள ஏரிகளைச் செப்பனிட்டு அவைகளில் நீரை நிரப்பி பாசனத்திற்கு ஏற்பாடு செய்தல், காவிரி, மேட்டூர் அணைக்குட்பட்ட பழைய ஜமீன் இனாம் ஏரிகளைச் செப்பனிட்டு பாசன வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகிய பணிகளைப் பட்டுக்கோட்டையைத் தலைமையிடமாகக்கொண்டுள்ள சிறு பாசனச் சிறப்புத் திட்ட கோட்ட அலுவலர்கள் கவனித்து வருகின்றனர். இக்கோட்டத்தினர் அறிக்கை ஆண்டில் 6 சிறிய அணைகளைக் கட்டி முடித்துள்ளனர். 5 அணைகளுக்கு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. 42 குளங்களில் மராமத்து வேலைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வேலைக்காக ரூ. 23,38,969 செலவாகியுள்ளது. இதைத் தவிர ரூ. 12,93,260 மதிப்பிற்கு 82 ஏரிகளின் மராமத்து வேலைக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைத்தவிர, வெண்ணாறு கோட்டத்தில் சிறு பாசனச் சிறப்புத் திட்டத்தின்கீழ் அறிக்கை ஆண்டில் ரூ. 8,81,273 மதிப்புள்ள 22 பாசன வேலைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் பாசன வசதி சரிவர கிடைக்காத கிராமங்களுக்கு சாகுபடி செய்யும் அறிக்கை ஆண்டில் 1,128 கிணறுகள் வெட்டுவதற்கு "புதிய கிணறுகள் வெட்ட உதவும் திட்டத்தின்" கீழ் ரூ. 11,15,500 முதல் தவணைக் கடனுகை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 1963–64, 1964–65 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 30,500, ரூ. 9,000 இரண்டாம் தவணைக்கடன் தொகையாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. மொத்தம் இதுவரை ரூ. 11,55,500 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(2) **கால்வாய் புதுப்பித்தல்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரிச் சங்கமுக ('டெல்டா') பகுதியிலுள்ள ஆறுகள், கிளை ஆறுகள், வாய்க்கால்கள், அதன் பல்வேறு வகைக் கிளை வாய்க்கால்கள் முதலியவற்றைப் புதுப்பித்தும், சீர்ப்படுத்தியும் பாசனத்திற்குத் தேவையான தண்ணீரை எல்லா பகுதிகளுக்கும் ஒழுங்கு முறையில் குறித்த காலத்தில் கிடைக்கும்படிச் செய்ய வேண்டியதற்கான பரிசீலனைகளைச் செய்ய, தஞ்சாவூரில் கால்வாய் புதுப்பிக்கும் கோட்டம் ஒன்று நிறுவப்பட்டு பணிபுரிந்து வருகிறது. இந்தக் கோட்டத்தின் பணிகள் (1964–65) தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. முள்ளியாறு, ஓடம்போக்கியாறு ஆகியவற்றின் இரு பக்கங்களிலும் ஏற்படும் அதிகப்படியான கசிவு நீரைத் தடுப்பதற்கு மேற்படி ஆறுகளில் சுமார் $16\frac{1}{2}$ மைல் நீளம் பரிசீலனை செய்து ரூ. 42,50,000-க்கு செலவு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது

2. இங்குள்ள 133 'எ' பிரிவு வாய்க்கால்களில் சுமார் 2,37,727 எக்கர்களுக்குப் பாசனம் அளிப்பதும், 437 மைல்கள் நீளமுள்ளதுமான 79 வாய்க்கால்களைப் பரிசீலனை செய்து ரூ. 1,31,36,750-க்கு மதிப்பீட்டுப் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. மற்றும் மீதமுள்ள 54 வாய்க்கால்களுக்குப் பரிசீலனை நடந்து வருகின்றது.

3. **வடிகால்கள் பரிசீலனை.**—இரண்டு வடிகால் ஆறுகளுக்கு வரைபடங்களும் மதிப்பீட்டுப் பட்டியல்களும் ரூ. 62,500-க்கு தயார் செய்யப்பட்டுள்ளன. இவைகளைத் தவிர இதுவரை பரிசீலனை செய்து, மதிப்பீடு பட்டியல்கள் தயார் செய்ததை ஆதாரமாகக் கொண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் சங்கமுக ('டெல்டா') பிரதேசத்திலுள்ள எல்லா ஆறுகளையும், வாய்க்கால்களையும்,

மற்றும் எல்லா பாசன ஆதாரங்களையும் சீர்ப்படுத்தி, புதுப்பிக்கும் வேலையை ஒரு முழுத் திட்டமாகக் கருதி உத்தேச மதிப்பீட்டுப் பட்டியல் தயார் செய்து அனுப்பப்பட்டிருக்கின்றது. இத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 11·50 கோடியாகும். மற்றும் பழவாறு பிரிவு கோவிந்த காவிரி புதுப்பிக்கும் திட்டம் ரூ. 3,00,000-க்கும் பாமினியாறு பிரிவு, இராஜன் வாய்க்கால் திட்டம் ரூ. 2,25,000-க்கும் முன்னோடி திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு 50 சதவிகிதம் வேலை முடிந்துவிட்டது. மீதமுள்ள வேலை வருகின்ற கோடையில் மேற்கொள்ளப்படும்.

(3) **கட்டிடப் பிரிவு.**—இந்த மாவட்டத்திலுள்ள அரசாங்கக் கட்டிடங்கள் அனைத்தும் பொதுப்பணித் துறையினரின் நிர்வாகத்தில் இருந்து வருகின்றன. அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் புதிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1. | சக்கோட்டை, மருதாநல்லூர், நாகமங்கலம் முதலிய இடங்களில் விதைப் பண்ணைகளுக்கு வேண்டிய கிடங்குகள் கட்டிய வகையில் | 24,412 | 00 |
| 2. | திருக்கடையூர், மூங்கிலடி முதலிய இடங்களிலுள்ள விதைப் பண்ணைகள் கட்டிய வகையில் | 24,726 | 00 |
| 3. | ஆரம்ப சுகாதார நிலையம், காளி | 55,099 | 00 |
| 4. | கோனுலாம்பள்ளம் மருத்துவ மனை | 7,956 | 00 |
| 5. | தேரழுந்தூர் மருத்துவருக்கு வீடு கட்டி கொடுத்தது | 18,373 | 00 |
| 6. | தஞ்சையில் மீன்களைப் பக்குவமாகப் பாதுகாப்பதற்கு குளிர்ப்பதன சாதன அறைகள் கட்டியது | 39,099 | 00 |
| 7. | தஞ்சையில் மீன் வளர்ப்பு நிலையமும், கிடங்கு அறையும் கட்டிய வகையில் | 11,212 | 00 |
| 8. | மாயூரம் அரசினர் பெண்கள் தங்கும் விடுதிக்கு மதிற்சுவர் கட்டிய வகையில் | 9,854 | 00 |
| 9. | பொறையாறில் கோழி அபிவிருத்திப் பண்ணை அலுவலகக் கட்டிடம் (வேலை நடந்து கொண்டிருக்கிறது). | 6,316 | 00 |

இதைத் தவிர அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட துறைகளுக்குக் கட்டிடப் பராமரிப்புச் செலவின் விவரம் :—

| | ரூபாய். |
|---|---|
| விவசாயம் .. .. . .. | 6,103 |
| மருத்துவம், சுகாதாரம் .. .. | 73,274 |
| போலீஸ் .. .. .. .. | 7.095 |
| கல்வி ... .. .. .. | 25,033 |

8. **சுகாதாரம்**—

(1) **பொதுச் சுகாதாரம்.**—இம் மாவட்டத்தில் அறிக்கை ஆண்டில் சுகாதாரத் துறையினர் ஆற்றிய பணிகளின் விவரம் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | அறிக்கை ஆண்டில் பதிவான பிறப்புகள். | 29,121 |
| 2. | அறிக்கை ஆண்டில் பதிவான இறப்புகள். | 18,338 |

3. முக்கிய தொத்து நோய்களால் இறந்தவர்களின் விவரம் :—

| | கண்டது. | இறந்தது. |
|---|---|---|
| அம்மை .. | 438 | 148 |
| வாந்திபேதி .. | 1,028 | 555 |

| | | |
|---|---|---|
| 4. | வாந்திபேதிக்காக தடுப்பு ஊசிப் போடப் பட்டவர்கள். | 412,315 |
| 5. | முதல் தடவை அம்மை வைத்துக்கொண்டவர் கள். | 113,398 |
| 6. | மறுதடவை அம்மை வைத்துக்கொண்டவர்கள். | 1,191,802 |
| 7. | அம்மை தடுப்பிற்காக சென்று பார்த்த கிராமங் கள். | 124 |
| 8. | மலேரியா நோய்க்கு சிகிச்சை பெற்றவர்கள் .. | 1,772 |
| 9. | இதர ஜுரங்களுக்கு .. .. .. | 37,070 |
| 10. | வயிற்றுப் போக்கிற்கு சிகிச்சை பெற்றவர்கள் .. | 164,426 |
| 11. | வயிற்றுப் போக்கினல் இறந்தவர்கள் .. | 58 |
| 12. | கட்டப்பட்ட பொது (கக்கூஸ்கள்) கழிப்பிடங்கள். | 295 |
| 13. | கட்டப்பட்ட சாக்கடைக் குழிகள் .. .. | 1,093 |
| 14. | கட்டப்பட்ட சொந்த (கக்கூஸ்கள்) கழிப்பிடங்கள். | 258 |
| 15. | கட்டப்பட்ட குப்பைக் குழிகள் .. .. | 2,244 |
| 16. | கட்டப்பட்ட கிணறுகள் .. .. .. | 125 |
| 17. | சுத்தமாக்கப்பட்ட கிணறுகள் .. .. | 199 |
| 18. | கிணறு வெட்டுவதற்காக பார்வையிடப்பட்ட இடங்கள். | 1,075 |
| 19. | குறைந்த விலைக்கு கொடுக்கப்பட்ட கழிவிடங்கள். | 37 |
| 20. | நடத்தப்பட்ட திருவிழாக்கள் .. .. | 80 |
| 21. | பார்வையிடவேண்டிய மொத்த தொழிற்சாலை கள். | 271 |
| 22. | பார்வையிட்ட மொத்த தொழிற்சாலைகள் .. | 13 |

**(2) மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை, செங்கிப் பட்டி.**—தஞ்சாவூருக்கு அருகிலுள்ள செங்கிப்பட்டியில் இந்த மருத்துவ மனை நிறுவப்பட்டுள்ளது. காசநோயால் அவதிப்படுவோரின் இன்னலைப் போக்க 450 படுக்கைகளுடன் எல்லா நவீன வசதிகளுடன் இந்த மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. ஆண்களுக்கு 302 படுக்கைகளும், பெண்களுக்கு 80 படுக்கைகளும், தனி வார்டில் தனி வகையான 44 படுக்கைகளும் உள்ளன. இந்த மருத்துவமனையில் ஒவ்வொரு ஆண்டும், முதியோர் பலரும், பெண்டிரும், பாலரும் சிகிச்சை பெற்று குணமடைந்து வருகின்றனர்.

**(3) மருத்துவத் துறை.**—தஞ்சாவூர் மாவட்டத்தின் தலைமை மருத்துவ மனை நாகப்பட்டினத்தில் அமைந்துள்ளது. இந்த மாவட்டத்தில் பதின்மூன்று பெரிய மருத்துவமனைகளும், இருபத்தொன்பது மருந்தகங் களும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர ஒரத்தநாட்டில் அரசினர் தொழுநோய் தடுப்புக் காவல் நிலையம் ஒன்றும் செயலாற்றி வருகிறது. ஒவ்வொரு மருத்துவமனையிலும் அறிக்கை ஆண்டில் நடைபெற்ற வேலை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**1. அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினம்.**—இம் மருத்துவமனையில் இதுவரை 120 ஆக இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேக நோய்க்கான தனி மருத்துவச்சாலை அமைக்க அரசினர் அனுமதி அளித்துள்ளனர். பொது மக்களின் நன்கொடை கொண்டு ஒரு மகப்பேறு விடுதி கட்டப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான வார்டு கட்டுவதற்கு வேலைகள் நடந்து வருகின்றன. வெளி நோயாளிகள் தங்குவதற்கான பகுதியை விரிவுபடுத்த ரூ. 38,000 அரசினரால் அனுமதிக்கப்பட்டு கட்டிட வேலைகள் நடந்து வருகின்றன. கீழ்க்கண்ட அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

1. சிறுநீர் கழிப்பிடம்—மலத்தூய்மை கிடங்கு கட்டுதல்.

2. பல வார்டுகளையும் இணைக்கும் பாதைகள் அமைத்தல்.

3. அறுவைச் சிகிச்சை அறையைச் சுற்றிலும் பாதுகாப்பிற்கான கண்ணாடிகள் பதித்தல்.

4. நீர்த்தேக்கமொன்று கட்டுதல்.

5. நவீன சாதனங்களுடன் கூடிய சமையலறை கட்டுதல்.

மேலும் ஓர் (ஒளி ஊடுருவி கதிர்) இயந்திரமும், மாவட்ட முழுவதற்குமான ஒரு பொதுச் சுகாதார பரிசோதனை நிலையமும், இரத்த சேமிப்பு நிலையமும் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. காசநோய்த் தடுப்பிற்கான மருத்துவமனை ஒன்று கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

**அரசினர் மருத்துவமனை, கும்பகோணம்.**—இதில் 146 படுக்கைகள் உள்ளன. இங்கு ஒளி ஊடுருவி கதிர் இயந்திர நிலையமும், பரிசோதனை நிலையமும், குடும்பக் கட்டுப்பாடு நிலையமும், அறுவை சிகிச்சை நிலையமும் உள்ளன. இங்கு இரத்த சேமிப்பு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

**அரசினர் மருத்துவமனை, மாயூரம்.**—இதில் 60 படுக்கைகள் உள்ளன. மாயூரத்தைச் சேர்ந்த துர்க்காமணி சுந்தர அன்னதான ஸ்தாபனத்திலிருந்து கொடுக்கப்பட்ட நன்கொடையினால் 6 படுக்கைகள் கொண்ட ஒரு மகப்பேறு வார்டு கட்டுவதற்கு அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கட்டிடம் கட்டும் வேலை துரிதமாக நடந்து வருகிறது.

**அரசினர் மருத்துவமனை, திருவாரூர்.**—இதில் 46 படுக்கைகள் உள்ளன. ஓர் ஒளி ஊடுருவி கதிர் இயந்திர நிலையமும், அறுவைச் சிகிச்சை நிலையமும் உள்ளன.

**அரசினர் மருத்துவமனை, திருத்துறைப்பூண்டி.**—இம் மருத்துவமனையில் 24 படுக்கைகள் உள்ளன. 34 படுக்கைகள்கொண்ட பிரிவு ஒன்று கட்டுவதற்கான வேலைகள் நடந்துவருகின்றன.

**அரசினர் மருத்துவமனை, மன்னார்குடி.**—இதில் 100 படுக்கைகள் உள்ளன.

**அரசினர் மருத்துவமனை, அறந்தாங்கி.**—இம் மருத்துவமனையை தாலூகாத் தலைமை மருத்துவமனையாக மாற்றி ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்காக அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 7,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மற்றும் வைதீஸ்வரன் கோவில், சீர்காழி, பாபநாசம், ஒரத்தநாடு ஆகிய இடங்களிலும் அரசினர் மருத்துவமனைகள் நிறுவப்பட்டுள்ளன.

**குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள்.**—அரசாங்க மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும். மற்றும் இம் மாவட்டத்திலுள்ள மருத்துவமனை களிலும் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுடன் அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் ஆண்களுக்காக ஒரு முழுநேர அறுவைச சிகிச்சைப் பகுதி யும் நிறுவப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மருத்துவமனைகளில் செய்த அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை—

1. ஆண்களுக்குச் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சையின் எண்ணிக்கை 3,231.

2. பெண்களுக்குச் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை 63.

8.3132

**(4) மண்டல கொசுத் தடுப்பு நிறுவனம், தஞ்சாவூர்.**—தஞ்சாவூர் மலேரியா நிறுவனம் 72,852 சதுர மைல்கள் பரப்புள்ளதும், சுமார் 2,426,217 மக்கள் தொகை உள்ளதுமான தென்னார்க்காடு, தஞ்சாவூர் திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய ஏழு தென்னக மாவட்டங்களைத் தனது ஆட்சி வரம்பின்கீழ்ப் பெற் றுள்ளது.

2. இந்த அலுவலகத்தின் தொழில் நுட்ப மேற்பார்வையுடனும், அறிவுரைகளுடனும் சுமார் 82 யானைக்கால் கொசு ஒழிப்புத் திட்டங்களை பஞ்சாயத்துக்களும், நகராட்சிகளும், நடத்தி வருகின்றன. யானைக்கால் தடுப்புத் திட்டங்கள், கொசு ஒழிப்புத் திட்டங்கள் ஆகியவற்றை நிறைவேற்ற ஆகும் செலவில் பஞ்சாயத்துக்களுக்கு மூன்றில் ஒரு பகுதியும், நகராட்சி களுக்கு நான்கில் ஒரு பகுதியும், அரசினரால் மான்யமாக அளிக்கப் படுகின்றன. மேற்படித் திட்டங்கள் சரிவர நடைபெறுகின்றனவா என்று ஆண்டுக்கு இருமுறை மேற்பார்வையிடப்படுகிறது. ஏழுக்கும் மேற்பட்ட இடங்களில் கொசுத் தடுப்பிற்கான ஏற்பாடுகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. அதற்கான தகுந்த திட்டமும் வரைந்து அரசினர் அனுமதிபெற்று அதை பஞ்சாயத்துக்களும், நகராட்சிகளும் அமல் நடத்துமாறு கோரப்பட்டுள்ளன. மலேரியா, யானைக்கால் நோய் மற்றும் கொசுக்களால் உண்டாகும் நோய் களைப் பற்றி பயிற்சி அளிக்கும் நிலையமாகவும் இவ்வலுவலகம் விளங்கு கிறது. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வடலூரில் நடந்த தைப்பூச விழாவிற்கு ஈ ஒழிப்பிற்காக உதவி பூச்சி இயல் வல்லுநரும், இரண்டு களப்பணியாளர்களும் அனுப்பப்பட்டனர்.

**9. கல்வி.—(1) கல்லூரிக் கல்வி.**—இம் மாவட்டத்தில் ஆறு கல்லூரிகள் உள்ளன. அவைகளின் விவரம் பின் வருமாறு :—

1. இராசா சரபோஜி கல்லூரி, தஞ்சாவூர்.
2. காதர் முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம்.
3. அன்பநாதபுரம் வகையார் அறத்துறை கல்லூரி, மன்னம்பந்தல், மாயூரம்.
4. ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.
5. அரசினர் கல்லூரி, கும்பகோணம்.
6. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.

**1. இராசா சரபோஜி கல்லூரி, தஞ்சாவூர்.**—இக் கல்லூரியில் புகுமுக வகுப்பும், பட்ட வகுப்புகளில் பி. ஏ. (பொருளாதாரம்), பி.எஸ்.ஸி. (கணிதம்), பி. எஸ். ஸி. (ரசாயனம்), பி. எஸ். ஸி. (உயிரியல்) முதலிய வகுப்புகளும் நடந்து வருகின்றன. இந்த ஆண்டு கல்லூரியில் மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 1,042. வழக்கம்போல்

இந்த ஆண்டிலும் மக்கள் பணி மன்றத்தினரால் முதியோர் கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டன. கல்லூரிகளுக்கிடையே நாடக, பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரி மாணவர்கள். என்.சி.சி., ஏ.சி.சி. ஆகியவற்றில் பங்கு பெற்று வருகின்றனர்.

**2. காதர் முகைதீன் கல்லூரி** (அதிராம்பட்டினம்).—இந்தக் கல்லூரி 1965-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது. புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்சி., ஆகிய வகுப்புகளைக் கொண்ட இக்கல்லூரியின் மாணவர் தொகை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| புகுமுக வகுப்பு | 510 | 564 |
| பி.ஏ. (பொருளாதாரம்) | 17 | |
| பி.ஏ. (வரலாறு) | 15 | |
| பி.எஸ்சி. (கணிதம்) | 22 | |

மாணவர்களுக்கு வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் பயிற்சியளிக்கக் கருதி, இக்கல்லூரியில் தமிழ் மன்றம், சமூகப்பணி மன்றம், திட்ட அரங்கு, மாண்பியல் மன்றம், விஞ்ஞான மன்றம், நுண்கலைக் கழகம், மன மகிழ்மன்றம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. அவைகளில் மாணவர்கள் பெருமளவில் பங்கு கொண்டு பயன்பெறுகின்றனர்.

**3. அன்பநாதபுரம் வகையார் அறத்துறைக் கல்லூரி, மன்னம் பந்தல், மாயூரம்.**—கோடை விடுமுறைக்குப் பின்னர் இக்கல்லூரியில் ஏராளமான மாணவர்கள் வந்து திரண்டதால், பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை 400-லிருந்து 510 ஆகவும், இவ்வாண்டு புதிதாக துவக்கப்பட்ட பல்கலைக் கழக பட்டப் படிப்பில் பௌதிகத் துறையில் 24 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 600-லிருந்து 740 ஆக உயர்ந்தது.

**உதவித் தொகை.**—இவ்வாண்டு 442 மாணவர்களுக்கு ரூ. 95,355 மத்திய அரசாங்கத்திலிருந்தும், தமிழ்நாடு அரசாங்கத்திலிருந்தும் உதவித் தொகை கிடைக்கப்பெற்றது. பல்கலைக் கழக மானியக் குழுவின் ஏழை மாணவர்கள் உதவித் திட்டத்தின்படி 48 மாணவர்கள் ரூ. 4,261 உதவித் தொகை பெற்றனர்.

**4. ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி.**—(1) இக் கல்லூரி 1956-ல் தொடங்கப் பட்டது. தற்போது இக்கல்லூரியில் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பில் 650 மாணவர்களும், பட்ட வகுப்புகளில் 495 மாணவர்களும், கல்வி பயிலுகின்றனர். பொருளாதாரம் பட்ட வகுப்பு மாணவர்கள் நடந்து முடிந்த தேர்வில் (1964-65) அனைவரும் வெற்றி பெற்றனர்.

(2) இக்கல்லூரி நூலகத்திற்கு ரூ. 7,500 செலவில் 600-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் வாங்கப்பட்டன. இவ்வாண்டு பல புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் ஆறுயிரம் செலவில் பொதுச் சிற்றுண்டி விடுதி ஒன்று கட்டப்பட்டுள்ளது. "பௌதீக இயல் கட்டிடம்" ஒன்றும் "மாணவர் விடுதி" ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றன. மாணவர் படைப் பயிற்சியின் கீழ் 900 மாணவர்கள் என்.சி.சி.-யில் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். இக் கல்லூரியைத் தோற்றுவித்த இராவ் பகதூர் திரு. ஏ. வீரையா வாண்டையார் அவர்கள் தம் துணைவியாரின் நினைவாக அமைத்துள்ள மானியத்திலிருந்து இவ்வாண்டு ரூ. 4,050-ம், இராவ்பகதூர் பிறந்த நாள் அன்பளிப்பாக ரூ. 2,000-மும் மாணவர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளன.

**5. அரசினர் கல்லூரி, கும்பகோணம்.**—கும்பகோணம் அரசினர் கல்லூரியில் இவ்வாண்டு 1,252 மாணவர்களும், 94 மாணவிகளும் கல்வி பயிலுகின்றனர். தேர்வில் பொதுவான முன்னேற்றம் இருப்பினும் பல்

கலைக் கழகப் புகுமுக வகுப்பில் மிகக் காலம் தாழ்ந்து மாணவர்கள் சேர்ந்தமையால், தேர்வில் நல்ல வெற்றி கிடைக்கவில்லை. இவ்வாண்டில் பல்கலைக் கழக மானியக் குழு ரூபாய் பத்தாயிரம் மதிப்புள்ள புத்தகங்களை ஏழை மாணவர்களுக்கு வழங்கியது. இவ்வாண்டில் நான்கு பிரிவுகள் அடங்கிய தேசிய மாணவர்ப் படை செயல்பட்டு வருகிறது. 870 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். மற்றும் இக் கல்லூரியில் சமூகப்பணிக் கழகம், கவின்கலைக் கழகம், ஆகியவை நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

6. **மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.**—(1) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி அதனுடன் தொடர்பு கொண்ட மருத்துவ மாணவர் விடுதி, ஹவுஸ் சர்ஜன் விடுதி, செவிலியர் மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கான விடுதிகளுடன் தஞ்சை புதுவல்லம் சாலைக்கருகில் 210 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு வட்டத்துள் அமைக்கப்பட்டுள்ளது. 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் புகுமுக வகுப்புகளான ஆங்கிலம், ரசாயனம், பௌதீகம், உடற்கூறு இயல் (Anatomy) உடலமைப்பு இயல் (Physiology) முதலிய பகுதிகளுடன் கல்லூரி தொடங்கப்பட்டது.

மருத்துவ மனையுடன் இணைந்த மருத்துவக் கல்லூரி கட்டி முடிக்கப் பெற்று துவங்குவதற்கு தயாராக உள்ளது. இம் மருத்துவ மனையும், தற்போது தஞ்சை நகரிலுள்ள ராஜாமிராசுதார் மருத்துவ மனையும் சேர்ந்து மாணவர்கள் படிப்பிற்காக உபயோகிக்கப்படுத்தப்பட இருக்கின்றன. கல்லூரியிற் தற்போது உள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரம் :—

| | மாணவர். | மாணவிகள். | மொத்தம். |
|---|---|---|---|
| பிரி–கிளினிகல் (pre-clinical) .. | 233 | 69 | 302 |
| கிளினிகல் (Clinical) .. | 272 | 90 | 362 |
| | 505 | 159 | 664 |

பலவகைத் தேர்வுகளில் மாணவர்களின் தரம் என்பது சதவிகிதமும் சிலவற்றில் நூறு சத விகிதமும் உள்ளன. மேலும் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்காக தனி நூலகம் ஒன்றும் இயங்கி வருகிறது.

(2) **ஏனைய கல்வித் துறைகள்.**—ஆரம்பக்கல்வி நிலையங்கள் அனைத்தும் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் உள்ளன. இம் மாவட்டத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளும் அவை அமைந்துள்ள கல்வி மாவட்டங்களின் விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இம் மாவட்டத்தில் மாவட்டக் கழகத்தின் நிர்வாகத்திலிருந்த உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் தற்போது தஞ்சாவூரில் நியமிக்கப்பட்டுள்ள தனி மாவட்டக் கல்வி அதிகாரியின் நிர்வாகத்தில் இருந்து வருகின்றன. அந்த வகை பள்ளிகளின் விவரம் :—

| | உயர் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை. | அமைக்கப்பட்டுள்ள வகுப்புகள். |
|---|---|---|
| 1. | 66 | பதினொரு வகுப்புகள் உள்ளவை (XI Standard). |
| 2. | 13 | பத்து வகுப்புகள் வரை (X Standard). |
| 3. | 15 | ஒன்பது வகுப்புகள் வரை (IX Standard). |

அறிக்கை ஆண்டில் 13 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் துவக்கப் பட்டுள்ளன. முன்பு உள்ள 14 பள்ளிகளில் அறிக்கை ஆண்டில் பத்தாம் வகுப்புகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பன்னிரண்டு பள்ளிகளில் அறிக்கை ஆண்டில் பதினொன்றும் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலத் தஞ்சை கல்வி மாவட்டத்தில் அறிக்கை ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 3 உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்த்து மொத்தம் 47 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இம் மாவட்டத்தில் 882 நண்பகல் உணவு வழங்கும் இடங்கள் உள்ளன. எல்லாப் பள்ளிகளிலும் நண்பகல் உணவு வழங்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் கல்வி மாவட்டத்தில் அறிக்கை ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 3 உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்த்து மொத்தம் 56 உயர் நிலைப் பள்ளிகள் உள்ளன. அறிக்கை ஆண்டில் நடைபெற்ற இலவச நிகராடை விழாக்களில் 6 கல்விக் கூடங்கள் பங்குபெற்றன. ரூ. 10,031-66 பெறுமானமுள்ள 1,254 உடைத் தொகுதிகள் இலவசமாக மாணவர் களுக்கு வழங்கப்பட்டன.

(3) **ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்.**—நல்ல மாணவர்களை உருவாக்குவதற்கு நல்ல ஆசிரியர்களால்தான் முடியும். திறமையும், நற்பண்புகளும் கொண்ட ஆசிரியர்களை உருவாக்குவதற்கு இம்மாவட்டத்தில், தஞ்சாவூர், ஒரத்தநாடு, வேதாரணியம், திருபுவனம், குருக்கத்தி ஆகிய இடங்களில் அரசினர் ஆதார ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நிறுவப்பட்டு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். அறிச்கை ஆண்டில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை.—

| | | |
|---|---|---|
| 1. | தஞ்சாவூர் (ஆண்கள்) | 237 |
| 2. | தஞ்சாவூர் (பெண்கள்) | 280 |
| 3. | ஒரத்தநாடு .. .. | 80 |
| 4. | வேதாரணியம் .. | 200 |
| 5. | திருபுவனம் .. .. | 155 |
| 6. | குருக்கத்தி .. .. | 196 |
| | மொத்தம் .. | 1,148 |

மொத்தம் 1,148 மாணவ ஆசிரியர்கள் பயிற்சி ஆண்டில் பயிற்சிபெற்று சென்றுள்ளனர்.

**7. தொழிற் பயிற்சிப் பள்ளிகள்.—**

(1) **அரசினர் தொழிற் பயிற்சிப்பள்ளி, தஞ்சாவூர்.**—பொற் கொல்லர் களின் பிள்ளைகளுக்கும், பர்மா அகதிகளுக்கும் சலுகைகள் அளிக்கப்பட்டு இப்பள்ளியில் தொழிற்பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஏழை மாணவர் கள் தங்கியிருந்து பயிற்சி பெற அருளானந்த நகரில் ஒரு விடுதி உள்ளது. அந்த விடுதியில் 50 மாணவர்கள் தங்கியுள்ளனர். அறிக்கை ஆண்டில் இப்பள்ளியில் பயிற்சி பெற்று சென்ற மாணவர்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| | | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | நீங்கா இணைப்புப் பிரிவு .. | 19 |
| 2. | கடைசல் பிரிவு .. .. | 37 |
| 3. | தச்சுப் பிரிவு .. .. | 22 |
| 4. | கருமார் பிரிவு .. .. | 16 |
| 5. | பேருந்து வினைஞர் .. .. | 62 |
| 6. | பொருத்துவோர் பிரிவு .. | 71 |
| | | 227 |

**8. சிறுவர் சீர்திருத்தப்பள்ளி, தஞ்சாவூர்.**—சிறு வயதில் வீட்டில் அடங்காமல் இருக்கும் சிறுவர்களையும் சட்ட விரோதமான செயல்களைச் செய்த சிறுவர்களையும் திருத்தி அவர்களை நல்லவர்களாக மாற்றும் அரும்பணியினை இப்பள்ளி ஆற்றி வருகிறது.

அறிக்கை ஆண்டில் இப்பள்ளியில் 632 மாணவர்கள் இருந்தனர். இப்பள்ளியில் மாணவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாகத் திகழ எல்லா விதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை படிக்கப் போதிய வசதிகள் உள்ளன. மேற்கொண்டு படிக்க விரும்புவோருக்கு அதற்கான வசதிகள் செய்து தரப்படுகின்றன. மேலும், மாணவர்களுக்குத் தச்சுவேலை, தையல் வேலை, நூற்பு, நெசவு, புத்தகம் கட்டுதல், வாத்தியம் வாசித்தல், தோட்ட வேலை, சலவைத் தொழில், கோழிப்பண்ணை அமைத்தல் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**9. வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக், நாகப்பட்டினம்.**—இந்தத் தொழிற் பயிற்சிக் கல்லூரி 1958-ம் ஆண்டு தஞ்சாவூரில் நிறுவப்பட்டு 1959-ம் ஆண்டு நாகைக்கு மாற்றப்பட்டது. இங்கு நில்லியல், பொறியியல், மினனியல், பிரிவுகளுக்கான பாடங்கள் ஆங்கலத்தில் பயிற்றுவிக்கப் படுகின்றன. பயிற்சிக் காலம் மூன்றுண்டுகளாகும். ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசாங்க தொழிற் கல்வித் துறையினரால் அரசாங்கத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. வெற்றிபெற்ற மாணவர்களுக்கு எல்.சி.ஈ., எல.எம்.ஈ., எல்.ஈ.ஈ. ஆகிய சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அறிக்கை ஆண்டில் நடைபெற்ற தேர்வுகளில் நிலவியல் பிரிவில் 83 சதவிகிதமும், பொறியியல் பிரிவில் 76 சதவிகிதமும், மின்னியல் பிரிவில் 70 சதவிகிதமும் மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

**10. கூட்டுறவு.**—இம்மாவட்டத்தில் ஆறு கூட்டுறவுத் துணைப் பதிவாளர்கள் உள்ளனர். அவர்கள் 1964–65-ஆம் நிதி ஆண்டில் ஆற்றிய பணிகளின் விவரம் கீழே தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

**பண்டகசாலைகள்.**—இம்மாவட்டத்தில் மொத்தம் 131 பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. இவை உணவு தானியங்கள், மளிகைச் சாமான்கள் இதர பொருள்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகின்றன. மற்றும் சிறைச்சாலை, மருத்துவப் பணிமனை இதர பொது நிறுவனங்களுக்கு விசேட ஒப்பந்தத்தின் பேரில் உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றன.

**பால் விநியோகிக்கும் சங்கங்கள்.**—இம்மாவட்டத்தில் மொத்தம் 186 பால் விநியோகிக்கும் சங்கங்கள் உள்ளன. இவை மருத்துவமனை, சிறைச்சாலை, மற்றும் பொதுமக்களுக்கும் தரமான பசுவின் பாலை குறைந்த விலையில் விநியோகம் செய்து வருகின்றன.

**கிராம நாணயச் சங்கங்கள்.**—கிராம மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு குறுகிய கால, இடைக்கால, தானிய ஈட்டுக் கடன்களை வழங்குகின்றன. இந்த மாவட்டத்தில் 830 கிராம நாணயச் சங்கங்கள் உள்ளன.

**விவசாய கூட்டுறவு வங்கிகள்.**—கிராம விவசாயிகளுக்கு நகை ஈட்டின் பேரிலும், தானிய ஈட்டின் பேரிலும் இந்தச் சங்கங்கள் கடனுதவி அளித்து வருகின்றன. இந்த மாவட்டத்தில் 28 கூட்டுறவுச் வங்கிகள் உள்ளன.

**நில அடைமான வங்கிகள்.**—விவசாயிகளுக்கு நிலத்தின் பேரில் கடனுதவி செய்ய இம்மாவட்டத்தில் 10 கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன.

**நகர வங்கிகள்.**—நகர மக்களுக்கும் கடனுதவி செய்ய இம்மாவட்டத்தில் பதினைந்து நகர வங்கிகள் உள்ளன.

**அரசாங்க ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்.**—இம்மாவட்டத்தில் 34 ஊழியர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன, அவை பல்வேறு துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் கடனுதவி வழங்குகின்றன.

**வீடு கட்டும் சங்கங்கள்.**—இந்த மாவட்டத்தில் மொத்தம் 38 வீடு கட்டும் சங்கங்கள் உள்ளன. இந்தச் சங்கங்கள் தம் அங்கத்தினர்களுக்கு வீடு கட்டக் கடனுதவி வழங்கி வருகின்றன.

**நெசவாளர் சங்கங்கள்.**—நெசவாளர்களுக்கு நியாயமான கூலி கிடைக்க வகை செய்யும் பொருட்டு இம்மாவட்டத்தில் மொத்தம் 30 நெசவாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

**11. அறநிலைய ஆட்சித் துறை.**—சென்னை மாநில இந்து சமய அறநிலையங்கள் யாவும் "சென்னை இந்து சமய அறநிலையங்கள் சட்டத்திற்கு" (1959) உட்பட்டுச் செயல்படுகின்றன. ஆண்டு வருமானம் ரூ. 20,000-க்குக் குறைவாக உள்ள ஆலயங்கள் அனைத்தும் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மேலத் தஞ்சை, நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட கீழத் தஞ்சை, உதவி ஆணையர்களின் ஆளுகைக்குட்பட்டுள்ளன. ஆண்டு வருமானம் ரூ. 20,000-க்கு மேலுள்ள ஆலயம் மற்றும் அறநிலையங்கள் தஞ்சையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள துணை ஆணையரின் மேற்பார்வையில் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| | கோவில்கள். | கட்டளைகள். | மடங்கள். |
|---|---|---|---|
| தஞ்சாவூர் மாவட்டம் : | 94 | 61 | 8 |

அறநிலையங்கள் சரியாக பராமரிக்கப்படவும் அவற்றின் பெருவாரியான சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்திற்கும், அவைகளுக்காகும் செலவுகளுக்கும் தக்க கணக்குகள் வைக்கவும், வைக்கப்படும் கணக்குகள் சரியானவையா ? ஆலய நன்மைக்கே செலவிடப்படுகின்றனவா ? என்பனவற்றைக் கண்காணிக்கவும் அரசாங்கம் இயற்றியுள்ள சட்டத்தை அமலாக்குவதே இத்துறையின் முக்கிய நோக்கம்.

இம்மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட ஆலயங்கள் அனாதைச் சிறுவர்களுக்கென விடுதிகள் நடத்தி வருகின்றன.

1. ஸ்ரீ நவநீதஸ்வரர் ஆலயம், சிக்கல், நாகப்பட்டினம் தாலூக்கா.

2. ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஆலயம், வைத்தீஸ்வரன் கோவில், சீர்காழி தாலூகா.

3. ஸ்ரீ ஸ்ரீநிவாசப்பெருமாள் ஆலயம், நாச்சியார் கோவில், கும்பகோணம் தாலூகா.

நன்னிலம் தாலூகாவிலுள்ள திருப்புகலூர் ஸ்ரீ அக்னீஸ்வரர் ஆலய நிர்வாகிகள் "திலகவதி சித்த வைத்தியசாலை" என்னும் ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்தி பண்டைய மருத்துவ முறைக்கு ஊக்கமளித்து வருகின்றனர். இம்மாவட்டத்திலுள்ள பல ஆலயங்களின் உதவியைக் கொண்டு சீர்காழி தாலுகா, காவிரிப்பூம் பட்டினத்தில் திருவெண்காடு ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வரர் ஆலய நிர்வாகிகள் கீழ்த்திசை இயல் "ஓரியண்டல் கல்லூரி" ஒன்றை நிறுவி நடத்தி வருகிறார்கள்.

இத்துறை நாட்டுக்கான நற்பணிகளில் அதாவது மரக்கன்று நடும் விழா, பால் தின விழா, பள்ளிக் குழந்தைகளுக்கு நண்பகல் உணவு அளிக்கும் திட்டம், வெள்ள நிவாரணம், சிறு சேமிப்புத் திட்டம் முதலிய தேசீய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.—

12. (1) **நகராட்சி மன்றங்கள்.**—இம்மாவட்டத்தில் அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட ஆறு நகராட்சி மன்றங்கள் செயல்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் | .. | தனித் தரம். |
| 2. | கும்பகோணம் | .. | முதல் தரம். |
| 3. | மன்னார்குடி | .. | மூன்றும் தரம். |
| 4. | மாயூரம் | .. | இரண்டாம் தரம். |
| 5. | நாகப்பட்டினம் | .. | இரண்டாம் தரம். |
| 6. | திருவாரூர் | .. | மூன்றும் தரம். |

பட்டுக்கோட்டையில் 1965-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் தான் "நகராட்சி" (Municipality) அமைக்கப்பெற்றது. அதன் நடவடிக்கைகளை இவ்வறிக்கையில் சேர்க்கவில்லை.

2. மேற்கண்ட ஆறு நகரமன்றங்களும், நகரின் முக்கிய தேவைகளான பொதுச் சுகாதாரம், குடிநீர், மருத்துவம், விளக்குகள் மற்றும் தேவையான வசதிகள் ஆகியவற்றை அவ்வப்போது நல்ல முறையில் நிறைவேற்றியுள்ளன. அவை ஆற்றியுள்ள பணியின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**பொதுச் சுகாதாரம்.**—அறிக்கை ஆண்டில் எல்லா நகராட்சிகளும் தொற்றுநோய் பரவாமல் தடுக்க அம்மை குத்துதல், கொசுக்களை ஒழித்து நச்சுக் காய்ச்சல்களைத் தவிர்த்தல் முதலிய பணிகளில் ஈடுபட்டன.

1. **கல்வி.**—அறிக்கை ஆண்டில் திருவாரூர் நகராட்சியில் புதிய பள்ளிகள் எதும் திறக்கப்படவில்லையானாலும், அது நடத்திவரும் மூன்று துவக்கப்பள்ளிகளிலும் மூன்று உயர்நிலைத் துவக்கப்பள்ளிகளிலும், அதிகமாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கான கல்விச் செலவை ஈடுசெய்ய பொதுக் கணக்கிலிருந்து ரூ. 31,780 மானியமாக வழங்கப்பட்டது. கும்பகோணம் நகராட்சி நடத்தும் உயர்நிலைப் பள்ளிக்கு இவ்வாண்டு அரசினரின் உதவித் தொகை ரூ. 50,553 கிடைத்தது. பள்ளி இறுதி வகுப்பில் (எஸ்.எஸ்.எல்.சி.) 80·2 சத விகிதத்தினர் தேர்ச்சி பெற்றனர். தஞ்சை நகராட்சி மூன்று ஆரம்பப் பள்ளிகளையும், பதின்மூன்று உயர் ஆரம்பப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றது. மன்னார்குடி நகராட்சி மூன்று உயர் ஆரம்பப் பள்ளிகளையும், ஐந்து ஆரம்பப் பள்ளிகளையும் நடத்தி வருகிறது. மாயூரம் நகராட்சி பதினாறு ஆரம்பப் பள்ளிகளையும் இரு உயர்நிலைப் பள்ளிகளையும் நடத்தி வருகின்றது. மாயூரத்தில் பள்ளி இறுதி வகுப்பில் 66 சத விகிதத்தினர் தேர்ச்சி பெற்றுள்ளனர். நாகை நகராட்சி பதினெட்டு துவக்கப்பள்ளிகளையும், ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும் நடத்தி வருகிறது.

2. **மருத்துவம்.**—திருவாரூர் நகராட்சி இரண்டு மருத்துவ மனைகளையும், கும்பகோணம் நகராட்சி இரண்டு மருத்துவ மனைகளையும், தஞ்சாவூர் நகராட்சி ஐந்து மருத்துவ மனைகளையும், மாயூரம் நகராட்சி ஓர் ஆயுர்வேத மருத்துவ மனையையும் நடத்தி வருகிறது. தவிர, மாயூரத்தில் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ.ல.ஸ்ரீ. பண்டார சன்னதி அவர்களால் கட்டப்பட்டு நன்கொடையாக அளிக்கப்பட்ட மகப்பேறு மருத்துவ இல்லம் நன்கு செயல்பட்டு வருகிறது. மன்னார்குடி நகராட்சி ஓர் ஆயுர்வேத மருத்துவ மனையையும், ஒரு மகப்பேறு நிலையத்தையும் நாகை நகராட்சி நாகூரில் இரு மருத்துவ மனைகளையும் நடத்தி வருகின்றன.

3. **குடிநீர் வசதி.**—திருவாரூர் நகராட்சியில் மூன்று தானியங்கி விசை ஏற்றங்களும், பம்பு செட்டுகளும், 39 குடிநீர்க் கேணிகளும், 42 குழாய்க் கிணறுகளும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. கும்பகோணம் நகராட்சியில் 460 பொதுக் குழாய்களும், 3,779 வீட்டு இணைப்புக் குழாய் களும் உள்ளன. மின்சாரம் வழங்குதலில் ஏற்படும் தடையினால் குடிநீர் இறைக்கும் மோட்டார்கள் இயங்காவிடில் தொடர்ந்து தண்ணீர் இறைக்க ரூ. 75,000 செலவில் இரண்டு டீசல் இயந்திரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. கோடை காலத்தில் போதிய அளவு தண்ணீர் வழங்க ரூ. 23·7 லட்சம் செலவில் கொள்ளிடம் ஆற்றிலிருந்து குழாய்மூலம் நகருக்குத் தண்ணீர் கொண்டுவரும்திட்டம் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு துரித நடவடிக்கையில் உள்ளது. தஞ்சாவூர் நகராட்சிக்கு கரந்தையில் உள்ள குடிதண்ணீர் மேல்தேக்கத்திலிருந்து தண்ணீர் வழங்கப்படுகிறது. மன்னார்குடி நகராட்சிக்கு ரூ. 29·53 லட்சத்திற்கு குடி தண்ணீர்த் திட்டம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நகராட்சியிடம் போதிய பணவசதி இல்லாத காரணத்தால் மேற்படி திட்டம் நிறைவேற்றப் படாமலேயே இருந்து வருகிறது. மாயூரம் நகராட்சியில் 198 குழாய்க் கிணறுகளும், 24 தண்ணீர் வழங்கும் குழாய்களும், 3 விசை ஏற்றங்களும், 60 பொதுக் கிணறுகளும் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன. ரூ. 17·68 லட்சம் செலவில் குடிதண்ணீர் வழங்குதலுக்காக மராமத்து வேலைகள் அரசாங்கத்தால் செய்யப்பட்டு வருகின்றன. நாகப் பட்டினத்திலிருந்து 11 மைல் தூரத்திலுள்ள ஒடச்சேரி கிராமத்தினருகே வெட்டாற்றின் படுகையில் ஏற்படுத்தப்பட்ட (Infiltration gallery) வடிநீர் அடுக்கிலிருந்து குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. நாகை யிலுள்ள "சர்வீஸ் ரிசர்வாயருக்கு" ஒடச்சேரி விசை ஏற்றத் தலைப்பிலிருந்து தண்ணீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

4. **விளக்குகள்.**—திருவாரூர் நகராட்சியில் 40 குழல் விளக்குகள் சாதாரண விளக்குகளுக்குப் பதிலாக அறிக்கை ஆண்டில் அமைக்கப் பட்டன. நகரத்தில் மொத்தம் 778 விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் விளக்குகளுக்காக ரூ. 28,320 செலவிடப்பட்டது. கும்பகோணம் நகராட்சியில் மொத்தம் 2,795 விளக்குகள் போடப் பட்டுள்ளன. அவற்றிற்கு அறிக்கை ஆண்டில் ரூ. 53,269 செலவாகியுள்ளது. மாயூரம் நகராட்சியில் மின்சார விளக்குகள் பராமரிப்பிற்காக ரூ. 43,192 செலவிடப்பட்டுள்ளது.

(2) **பஞ்சாயத்து அபிவிருத்தி.**—பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தைக் கருதி இந்த மாவட்டம் கிழக்கு, மேற்கு என்று இரண்டாகப் பிரிக்கப் பட்டு இயங்கி வருகிறது. கீழத் தஞ்சை மாவட்டத்தில் மாயூரம், மன்னார்குடி, நாகப்பட்டினம் வருவாய்த்துறை கோட்டங்களும், மேலைத் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் வருவாய்த்துறை கோட்டங்களும் அடங்கியுள்ளன. இந்த மாவட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மொத்தம் 1,595 கிராமப் பஞ்சாயத்துக்களும், 30 நகரப் பஞ்சாயத்துக்களும் செயலாற்றி வருகின்றன:—

| கோட்டத்தின் பெயர். | நகரப் பஞ்சாயத்துக் களின் எண்ணிக்கை. | கிராமப் பஞ்சாயத்துக் களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. மாயூரம் | 4 | 240 |
| 2. மன்னார்குடி | 6 | 254 |
| 3. நாகப்பட்டினம் | 2 | 311 |
| 4. கும்பகோணம் | 8 | 273 |
| 5. தஞ்சாவூர் | 5 | 259 |
| 6. பட்டுக்கோட்டை | 5 | 258 |
| மொத்தம்.. | 30 | 1,595 |

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்துக்களில் வசிக்கும் மொத்த மக்கள் தொகை 2,854,518. மொத்த வாக்காளர்கள் 1,660,029. 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தலில் 70.24 சதவிகித வாக்காளர்கள் வாக்களித்தனர். இந்தத் தேர்தலில் செல்லா வாக்குகள் 3.47 சதவிகிதமாகும். இந்த மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த பஞ்சாயத்து உறுப்பினர்கள் 14,249. இவர்களில் 5,447 உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**பஞ்சாயத்துக் கூட்டு மன்றம்.**—கீழத் தஞ்சை மாவட்டத்தில் 19 பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களும், மேலத் தஞ்சை மாவட்டத்தில் 17 பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களும் செயலாற்றி வருகின்றன. இந்தக் கூட்டு மன்றங்களுக்கு அந்தந்தக் கூட்டு மன்றங்களின் பஞ்சாயத்துத் தலைவர்கள் உறுப்பினராகின்றனர். கீழத்தஞ்சை, மேலத்தஞ்சை அபிவிருத்தி மாவட்டங்களின் 1964–65-ம் ஆண்டின் வேலை பற்றிய விவரங்கள்:—

**பஞ்சாயத்து மாவட்டங்களின் பரப்பு.**—

| | | | |
|---|---|---|---|
| கீழத் தஞ்சை | .. | .. | 1,631·85 ச. மைல். |
| மேலத் தஞ்சை | .. | .. | 1,950·99 ச. மைல். |
| | | மொத்தம்.. | 3,582·84 |

இரண்டு மாவட்ட அபிவிருத்தி மன்றங்களுக்கும் கலெக்டர் தலைவராவார். மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் உள்ள பஞ்சாயத்துக் கூட்டு மன்றத் தலைவர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்களாவர்; கோட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட விவசாய, கால்நடை, கல்வி, மருத்துவ அதிகாரிகள், கோட்டப் பொறியாளர்கள் மற்றுமுள்ள துறைகள் எல்லாவற்றின் மாவட்ட அதிகாரிகள் ஆகியோர் உத்தியோகச் சார்புள்ள உறுப்பினர்கள் ஆவர். இரண்டு மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலும் 1964–65-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

1. ஐந்து ஆதாரப் பாடசாலைகளுக்கு சுகாதார வசதிகள் செய்யக் கோரியும், முடிந்த அளவு எல்லா ஹரிசனக் காலனிகளுக்கும் மின்சார வசதி செய்யக் கோரியும் அரசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டது.

2. பாசன வசதிகளைப்பற்றி, மாநில அமைச்சருடன் பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர் விவாதம் குறித்து ஆராயப்பட்டது.

3. பஞ்சாயத்து கூட்டு மன்றங்களிலுள்ள பள்ளிகளின் பராமரிப்பிற்கு விசேஷ படி அளிக்குமாறு அரசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டது.

4. மாவட்டத் தலைமை அதிகாரிகளின் அலுவலகங்களுக்குத் தொலைபேசி அமைக்கச் சிபாரிசு செய்யப்பட்டது.

5. பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கு உதவி "ஓவர்சியர்" நியமிப்பதற்கு அனுமதிக்குமாறும் உயர்தரப் பாடசாலைகளைப் புதிதாகத் திறக்க மாவட்ட அபிவிருத்தி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்குமாறும் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது.

6. இம்மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தேவாலயத்திற்கும் ரூ. 1,000 நன்கொடையாக அளிக்கவும், அதனை அனாதைகளின் நல்வாழ்விற்குப் பயன்படுத்தவும் அரசிடம் அனுமதி கேட்க தீர்மானிக்கப்பட்டது.

7. ஆவுடையார்கோயில் களபம் சாலையிலுள்ள ஆறுகளுக்குப் பாலங்கள் அமைத்து மாரிக் காலங்களில் சாலைப் போக்குவரத்துக்கு பயன்படச் செய்யவும், மேற்படி திட்டத்திற்கான செலவை மத்தியச்சாலை நிதியிலிருந்து கொடுக்குமாறும் அரசினரைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

8. கிராம வேலைத் திட்டத்தின் கீழ்ப் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களிலுள்ள பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்ட மானியத் தொகையை அதிகரிக்குமாறு அரசைக் கேட்கத் தீர்மானிக்கப்பட்டது.

9. ஒரத்தநாடு தாலுகாவிலுள்ள ஒக்கநாடு, கீழையூர் கிராமங்களுக்கு வடிகுழாய் பாசன திட்டத்தின்கீழ் சாகுபடி ஆரம்பிக்க அரசாங்க அனுமதிபெற தீர்மானிக்கப்பட்டது.

10. ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடம் அமைக்க50 சதவிகிதம் இமைகவும், 50 சதவிகிதம் கடனாகவும் உதவித் தொகை அளிக்க அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதியில் கீழத் தஞ்சை, மேலத் தஞ்சை மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. தமிழகத் தொழிலமைச்சர் தலைமை தாங்கி அரிய உரை நிகழ்த்தினர்.

13. **சேமிப்பு.**—சிறு சேமிப்புத் திட்டத்தை விரிவுபடுத்த ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் ஒரு தனித் தாசில்தார் நியமிக்கப்பட்டுள்ளார். சிறு சேமிப்பின் அவசியத்தை உணர்ந்த இம்மாவட்டத்து மக்கள் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1965-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரை பாதுகாப்புப் பத்திரங்கள், வளரும் மாத சேமிப்புக்கள், பரிசுப் பத்திரங்கள் ஆகியவற்றின் மூலம் சேமித்த விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| சேமிப்பின் விவரம். | சேமித்த தொகை. | திரும்பப் பெற்றது. | நிகர சேமிப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூபாய். | ரூபாய். | ரூபாய். |
| 1. தேசிய சேமிப்புப் பத்திரங்கள். | 27,43,711 | 21,19,830 | 6,23,881 |
| 2. அஞ்சல் நிலைய சேமிப்புகள். | 2,01,69,528 | 1,90,31,202 | 11,38.326 |
| 3. வளரும் மாதச் சேமிப்புகள். | 9,00,693 | 3,45,398 | 5,55,295 |
| 4. பாதுகாப்பு முத லீட்டுப் பத்திரங் கள். | 3,35,000 | 73,500 | 2,61,500 |
| 5. பிரீமியப் பரிசுப் பத்திரங்கள். | 4,05,815 | .. | 4,05,815 |
| 6. ஆண்டுப் பத்திரம். | .. | .. | (—) 15,480 |
| | 2,45,54,747 | 2,15,69,930 | 29,69,337 |

14. **கலைகள்—(1) கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த 54 ஆண்டுகளாக கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றது. 'தமிழ்ப்பொழில்' என்னும் திங்கள் இதழை வெளியிட்டு வருவதுடன் மூன்று பெரிய கல்வி நிலையங்களையும், திக்கற்ற மாணவரில்லம் ஒன்றையும் பதினையிரத்திற்கும் அதிக மானபலதுறை நூல்களை

டங்கிய நூல் நிலையமொன்றையும் நடத்தி வருகின்றது. இந்த நிறுவனங்களுக்கு அரசினரின் உதவித்தொகை ஆண்டு தோறும் கிடைத்து வருகிறது. 1964-65-ம் ஆண்டிற்கான அரசியலாரின் உதவித்தொகை கீழ்வருமாறு:—

| நிறுவனம். (1) | | மாணவர் எண்ணிக்கை. (2) | உதவித் தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1. | கரந்தை புலவர் கல்லூரி .. | 140 | 9,618 |
| 2. | உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி .. | 947 | 61,590 |
| 3. | இராதாகிருட்டிண இளையோர் ஆதாரப்பள்ளி | 517 | 15,833 |
| 4. | திக்கற்ற மாணவரில்லம் .. .. | 50 | 3,506 |

(2) **தஞ்சாவூர் சரபோஜி மன்னர் நூல் நிலையம்.**—இந்தியாவிலுள்ள பழம் பெரும் நூல் நிலையங்களில் தஞ்சாவூர் சரபோஜி மன்னர் நூல் நிலையமும் ஒன்றாகும். இந்நூல் நிலையத்தில் 1964-65-ம் ஆண்டில் நடைபெற்ற பணியின் விவரம் வருமாறு:—

1. **புத்தக வெளியீடு.**—மத்திய மாநில அரசினர் உதவியுடன் கீழ்கண்ட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன:—

மத்திய அரசினர் உதவியுடன் வெளியிட்ட நூல்களின் விவரம்:

1. தாச போதம் (2-ம் பாகம்)—தமிழ்.
2. ஸ்ரீதத்துவநீதி (2-ம் பாகம்)—தமிழ்.
3. தர்மாகுதம் (யுத்தகாண்டம்) சமஸ்கிருதம்.

மாநில அரசின் உதவியுடன் வெளியிட்ட நூல்கள் விவரம்:

1. தமிழ் அச்சுப் புத்தகங்களின் பட்டியல்.
2. தமிழ் வைத்தியச் சுவடிகளின் பட்டியல்.
3. சரசுவதி மகாலும், தஞ்சை வரலாறும்.
4. பர்த்ருஹரி நீதி சதகம்.
5. வாதரோகச் சிகிச்சை (2-ம் பாகம்)—தமிழ்.
6. ஆபஸ்தம்பமர்த்தப் பிரயோகம்—சமஸ்கிருதம்.

2. **நூல்நிலையப் பத்திரிகை.**—இந்நூலகத்தின் புதிய வெளியீடுகள் பற்றியும், மற்றுமுள்ள அரிய நூல்களைப்பற்றியும் ஆண்டுக்கு மும்முறை பத்திரிகை ஒன்று வெளியிடப்படுகிறது. தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், இசை வித்துவான திரு. டி.ஜி. அனந்த சுப்பிரமணியம் என்பவரை அனுப்பி இங்குள்ள சுவடிகளை ஆராயச் செய்தது. அந்த சுவடிகள் இசை வளர்ச்சிக்கு மிகவும் பயன்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

**நூல்நிலையத்திற்கு அரசாங்க உதவி.**—இந்நூல் நிலையத்திற்கு அரசாங்கம் அறிக்கை ஆண்டிற்கு ரூ. 41,775 மானியமாக வழங்கியுள்ளது.

(3) **மாவட்ட நூலக ஆணைக்குழு, தஞ்சாவூர்.**—தஞ்சாவூரில் உள்ள இந்நூலக ஆணைக்குழு 1950-ம் ஆண்டு நிறுவப்பட்டது. சென்னை மாநில 1948-ம் ஆண்டு நூலகச் சட்டத்தின் கீழ் இக்குழு இயங்கிவருகிறது. இக் குழுவினரால் 1952-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் தேதி தஞ்சாவூரில் மத்திய நூலகம் திறக்கப்பட்டது. அடுத்து வந்த ஆண்டுகளில் 47 கிளை

நூலகங்கள் திறக்கப்பட்டன. நகரங்களில் மட்டுமல்லாது கிராமங்களிலும் உள்ள மக்கள் நூலகத்தின் பயனை அடையவேண்டும் என்னும் நோக்கத்துடன் ஒவ்வொரு கிளை நூலகத்தைச் சுற்றிலும் ஐந்து மைல் வட்டாரத்திலுள்ள கிராமங்களுக்கு "வழங்கும் நூல் நிலையங்கள்" அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இது வரையில் 178 வழங்கும் நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் 1,474,251 வாசகர்கள் மத்திய நூலகத்திலும், கிளை நூலகங்களிலும் படித்து பயனடைந்துள்ளனர்.

1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தினசரி காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை தஞ்சாவூர் மத்திய நூலகம் தொடர்ந்து இயங்கி வருகிறது. இந்த நூலகத்திற்கு ஒரு புதிய கட்டிடம் மூன்று லட்ச ரூபாய் செலவில் தஞ்சாவூர் திலகர் திடலுக்கு அருகில் கட்டப்பட்டு இருக்கிறது.

இதுவரை நூலகங்கள் திறக்கப்படாத பகுதிகளில் விரைவில் நூலகங்கள் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

(4) புதைபொருள் மற்றும் பழங்கால நினைவுச்சின்னங்களின் பராமரிப்பு:—

1. தஞ்சையில் உள்ள ஸ்ரீ பிரகதீஸ்வரர் ஆலயம்.

2. தாராசுரத்தில் உள்ள ஸ்ரீ ஐராவதேஸ்வரர் ஆலயம்.

3. தஞ்சைப் பெரிய கோவிலைச் சுற்றிலுமுள்ள சிவகெங்கை கோட்டை தஞ்சை மாவட்டத்தில் மேற்படி வரலாற்றுப் புகழ் வாய்ந்த சோழப் பேரரசர்கள் காலத்துக் கோவில்களையும், சிவகெங்கைக் கோட்டையையும் தொல் பொருள் ஆராய்ச்சித் துறை பராமரித்து வருகிறது. தாராசுரத்தில் உள்ள ஸ்ரீ ஐராவதேஸ்வரர் கோவிலின் உள் மண்டபத்தில் உள்ள கல் தளத்தைப் பழுது பார்த்ததுடன் இம்மண்டபத்தின் தெற்கு வடக்கு வாயில்களுக்கு இரண்டு புதிய தேக்கு மரக் கதவுகள் போடப்பட்டுள்ளன.

(5) **தஞ்சைக் கலைக்கூடம்.**—சோழமன்னர்கள் காலத்திய கலைச்செல்வங்களை ஒன்று சேர்த்து தென்னாட்டவரின் கலைத்திறனை உலகுக்கு உணர்த்த தஞ்சாவூரில் நாயக்க மராட்டிய மன்னர்கள் ஆட்சி செய்த அரண்மனையில் தஞ்சை கலைக்கூடம் நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கலைக் கூடத்தில் ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றும் நூற்றாண்டு வரையிலுள்ள காலத்தைச் சேர்ந்த கல் செப்புச் சிலைகளும், பிற்காலத்திய கைத்தொழில் கலைப் பொருள்களும், காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. உள்நாட்டார் மட்டுமின்றி வெளிநாட்டவரும் ஏராளமாக வந்து கலைக்கூடத்தை பார்வையிட்டுப் பாராட்டு தெரிவித்த வண்ணமுள்ளனர்.

சங்கீத மண்டபம் முன்போல் வெறும் காட்சித்தலமாக மட்டுமின்றி கர்நாடக சங்கீதத்தைக் கேட்டு அனுபவிக்கும்படியாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதனால் "தியாகப் பிர்மசபை"யினரால் மாதம் இருமுறை கச்சேரிகள் நடத்தப்பட்டு வருகின்றன. சங்கீத மகாலில் தினமும் காலை 7–30 முதல் 9 மணிவரையில் திரு. வெங்கடேச அய்யங்கார் அவர்கள் தலைமையில் சங்கீத பாடசாலை நடைபெற்று வருகிறது. பார்வையாளர்களின் எண்ணிக்கை நாள்தோறும் பெருகி வருகிறது. அறிக்கை ஆண்டில், 133,298 பார்வையாளர்கள் கலைக் கூடத்திற்கு வருகை தந்துள்ளனர்.

**15. முதியோர் உதவித்தொகை திட்டம்.**—அறுபது வயதிற்கு மேற்பட்டு வேலை செய்ய இயலாமல், நெருங்கிய உற்றார், உறவினரின்றி அல்லற்படும் வயது முதிர்ந்தோருக்கு அவர்களின் நல்வாழ்விற்காக மாதா மாதம் ரூ. 20 உதவிப் பணமாக அளிக்கப்படுகிறது. இந்த மாவட்டத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதிவரை 5,484 முதியவர்களுக்கு ரூ. 10,74,010–55 உதவிப் பணமாக வழங்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில

587 புதிய நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. 1964–65-ம் ஆண்டில் 6,071 நபர்களுக்கு ரூ. 13,04,421·62 முதியோர் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் பயனாக ஆதரவற்ற முதியவர்கள் பலர் இம்மாவட்டத்தில் பயன் பெறுகின்றனர்.

16. அகதிகள்.—இரண்டாவது உலகயுத்தத்தின்போது பர்மா, மலேயா ஆகிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களின் புனர் வாழ்விற்காக ரூ. 17,99,743·09 கடன் தொகையாக முன்பு வழங்கப்பட்டது. அதில் 1965–ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ம் தேதி முடிய ரூ. 5,24,865·48 வசூல் செய்யப்பட்டும், தள்ளுபடி செய்யப்பட்டும் உள்ளது. மீதி ரூ. 12,74,877·61 வசூல் செய்யப்படவேண்டியுள்ளது.

2. அண்மையில் பர்மாவில் ஏற்பட்ட புரட்சி அரசாங்கம் மேற்கொண்ட குடியுரிமைக் கொள்கையின் விளைவாக பர்மாவிலிருந்து வெளியேற்றப் பட்ட இந்திய வம்சா வழியினர் குடும்பங்களில் ஒரு பகுதியினர் தஞ்சாவூர் முகாமிற்கு அனுப்பப்பட்டனர். அப்படி வந்தவர்களுக்கு, அதாவது 2,298 நபர்கள் அடங்கிய 536 குடும்பங்களுக்கு 1965-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி முடிய ரூ. 3,03,052 புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் கடன் தொகையாக அளிக்கப்பட்டது. மேற்படி கடன் உதவியைக் கொண்டு அவர்கள் வியாபாரம் மற்றும் உபதொழில்களைச் செய்து கொள்ள வசதி செய்து தரப்பட்டுள்ளது.

17. (1) தீ விபத்து.—அறிக்கை ஆண்டில் இம்மாவட்டத்தில் பல இடங்களில் தீ விபத்து ஏற்பட்டது. தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கப்பட்டது. 1964–65-ம் ஆண்டில் இம் மாவட்டத்தில் மொத்தம் 263 தீ விபத்துகள் நடைபெற்றன. தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணமாக மொத்தம் ரூ. 7,978 அளிக்கப்பட்டது.

(2) கலெக்டரின் தன்யுக்த உதவித்தொகை.—அறிக்கை ஆண்டில் கலெக்டர் அவர்களின் தன்யுக்த உதவி நிதியிலிருந்து கீழ்கண்ட நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்யப்பட்டது.—

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் தாலுகா அச்சம்பட்டி, குறும்பூண்டி ஆகியகிராமங்களில் 24 ஏழைக் குடியானவர்களுக்கு நபருக்கு 50 ரூபாய் பெறுமானமுள்ள கோழிக் குஞ்சுகள் வாங்கிக் கொடுத்தது .. .. .. | 1,200 | 00 |
| 2. | நீரில் மூழ்கிய ஒருவரைக் காப்பாற்றிய தீரச் செயலுக்காக வழங்கப்பட்ட பரிசு .. | 25 | 00 |
| 3. | செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனைக்கு பசுமாடு ஒன்று வாங்குவதற்கு .. .. | 500 | 00 |
| 4. | நன்னிலம் அரசிதழ் பதிவு பெறு அலுவலர் சங்க நூலகத்திற்குப் புத்தகங்களும் விளையாட்டுக் கருவிகளும் வாங்க | 250 | 00 |
| 5. | அறந்தாங்கி அரசிதழ் பதிவு பெறு அலுவலர் சங்கத்திற்கு மேஜை நாற்காலி வாங்க .. .. .. | 100 | 00 |
| 6. | மாவட்ட நல அதிகாரி நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளின் மாணவர்களில் திருப்பாவை, திருவெம்பாவை சமயப் பாடல்களை இசையோடு இசைத்த மாணவர்களுக்குப் பரிசாக வழங்கப் பட்ட புத்தகங்களின் மதிப்பு .. | 120 | 00 |

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 7. | தஞ்சை குழந்தைகள் பள்ளிக்கு விளையாட்டுக் கருவிகள் வாங்க .. | 200 | 00 |
| 8. | குடந்தை தொழுநோய் மருத்துவமனைக்கு .. .. .. | 200 | 00 |
| 9. | தஞ்சை போலீசார் பொழுதுபோக்கு மன்றத்திற்கு வழங்கப்பட்ட தொகை. | 80 | 00 |
| 10. | கும்பகோணம் வள்ளலார் மாணவர் இல்லத்திற்குப் புத்தகங்கள் வாங்க.. | 100 | 00 |
| 11. | தஞ்சாவூர் மாணவிகள் இல்லத்திற்கு வசதிகள் செய்ய .. .. | 425 | 00 |
| | மொத்தம் .. | 3,200 | 00 |

**18. உள்நாட்டு விநியோகம்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் உணவு மற்றும் இன்றியமையாத பண்டங்களின் விநியோகத்திற்காகவும், நெல் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்யவும் ஒரு மாவட்ட விநியோக அதிகாரியும் அவருக்கு உதவியாக போக்குவரத்துக் கட்டுப்பாடு தாசில்தார்கள் அறுவரும், மூன்று தொடர்பு அதிகாரிகளும், பன்னிரண்டு தாலூக்கா விநியோக அதிகாரிகளும், பன்னிரண்டு துணை தாலுக்கா விநியோக அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

இம் மாவட்டத்தில் தானிய கொள்முதல் 1—10—1964 முதல் ஆரமபமாயிற்று. 31—3—1965 முடிய குறுவை அரிசி, 73,840 டன்னும் சம்பா அரிசி 173,840 டன்னும் ரூ. 5,01,94,915·83-க்கு கொள்முதல செய்யப்பட்டது. மேற்படி தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டுவிட்டது. 1964-ம் ஆண்டு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் கேரளாவில் ஏற்பட்ட உணவு நெருக்கடியினுல், கேரளாவை அடுத்துள்ள மாவட்டங்களில் உள்ள வியாபாரிகள் அதிகமாகவும், தீவிரமாகவும் தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்ததினுல், இம்மாவட்டத்திலும் தமிழ்நாடு முழுவதிலும் உணவு விநியோகத்தில் ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டது. தமிழ்நாடு முழுமைக்கும் சென்னை நகரம் உள்பட எல்லா இடங்களுக்கும் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நெல்லும், அரிசியும் உடனடியாக அனுப்பவேண்டியிருந்தது. இம் மாவட்டத்தில் விளைந்த குறுவை நெல் முழுதும் அரசாங்கத் தரப்பிலும், கூட்டுறவு சங்கங்கள் மூலமும் கொள்முதல் செய்யப்பட்டு அனுப்பபட்டது. 1964–65-ம் ஆண்டில் மொத்தம் 73,840 டன் அரிசி கேரளா மற்றும் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டது. விநியோகம் செய்யும் வேலையை பல இடங்களிலும் அரசாங்கம் பெற்றுக் கொண்டதால், கொள்முதல் திட்டத்தை அரசாஙகம் குறுவை அறுவடைக்குப் பிறகும் தீவிரமாக நீடிக்க வேண்டியதாயிற்று, சம்பாவில் 175,000 டன் அரிசி கொள்முதல் செய்து அனுப்ப வேண்டுமென்று முடிவாயிற்று.

ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு நெல், அரிசி கொண்டு போவதை முறைப்படுத்தும் தமிழ்நாடு உணவுதானிய போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணை அமுலுக்கு வந்தது. நெல் உபரியாக விளையும் தஞ்சை மாவட்டத்தில் இந்த நிலையை வியாபாரிகள் தங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்தி உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த விலை கொடுத்து அவர்களுக்கு இன்னல் விளைவிப்பார்களோ என்ற அச்சத்தினுல், அரசாங்கம் நெல்லின் காப்பு விலையை நிர்ணயித்து அதைத் தீவிரமாக அமுல் நடத்த ஏற்பாடு செய்தது. அதன்படி தலா 50,000 டன் அரிசி பாதுகாத்து வைகைக்கூடிய நவீன வசதிகள் கொண்ட இரண்டு கிடங்குகள் தஞ்சாவூரிலும் மன்னார்குடியிலும் கட்டப்பட்டன. இந்த கிடங்குகளில்

விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலும், குற்றாலம், சீர்காழி போன்ற இடங்களில் வாடகைக்கு கிடங்குகளை வாங்கி நெல் வாங்குவதற்கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. முன்பே, நாகப்பட்டிணம், கும்பகோணம் ஆகிய ஊர்களிலுள்ள தானிய சேமிப்புக் கிடங்குகளைப் பயன்படுத்தி உற்பத்தியாளர்களுக்குக் காப்பு விலை கிடைப்பதற்கான எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. தவிரவும், நெல்லைத் துரிதமாக, அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்வதற்காக தொடர்பு (Liaion) அதிகாரிகள் நியமிக்கப் பட்டு துரிதமாக போக்குவரத்துகள் நடப்பதற்கான ஏர்பாடுகள் செய்யப் பட்டன.

**சர்க்கரை விநியோகம்.**—இந்த மாவட்டத்தில் 23 சர்க்கரை மொத்த வியாபாரிகளும், 2,260 சில்லறை வியாபாரிகளும், 1,557 சர்க்கரை மொத்தமாக உபயோகிப்பவர்களும் (Bulk Consumers) உள்ளனர். இரண்டு பெரிய மிட்டாய்த் தொழிற்சாலைகளும் உள்ளன. மிட்டாய்த் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய சர்க்கரை மத்திய அரசாங்கத்திலிருந்து நேரடியாகக் கிடைக்கிறது. இந்த மாவட்டத்திற்கு மாதந்தோறும் 8,060 மூட்டை சர்க்கரை பொது மக்கள் உபயோகத்திற்கு வழங்கப்படுகின்றன. திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிக் காலங்களில் தனியாக 40 கிலோ வரை சர்க்கரை கொடுக்க தாலுக்கா விநியோக அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று கோட்டாட்சித் தலைவர்களுக்கு 40 கிலோவிற்கு மேல் ஒரு மூட்டை வரையிலும், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிக்கு ஒரு மூட்டைக்கு மேலும் தனியாக சர்க்கரை கொடுக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**சிமெண்டு விநியோகம்.**—இந்த மாவட்டத்தில் 153 சிமெண்டு மொத்த வியாபாரிகள் உள்ளனர். இவர்கள் டால்மியா சிமெண்டு உற்பத்திசாலை, தாழையூத்து சிமெண்டு உற்பத்திச்சாலை ஆகியவற்றில் சிமெண்டு பெற்று விநியோகம் செய்கிறார்கள். விநியோகத்தை அந்தந்த தாலுக்காவின் தலைமையிடத்துத் துணைத் தாசில்தார் அனுமதிச் சீட்டுகள் (பர்மிட்) மூலம் பொதுமக்களுக்குத் தேவையான சிமெண்டைப் பகிர்ந்தளிக்கிறார்.

**உணவு தானிய வியாபாரிகளுக்கு உரிமங்கள் வழங்குவது குறித்த ஆணை.**—1964ம் ஆண்டு உணவு தானிய வியாபாரிகளுக்கு உரிமம் வழங்குவது குறித்த ஆணை 1—4—1964 முதல் அமுலில் இருந்து வருகிறது. மாவட்ட விநியோக அதிகாரியே உரிமம் வழங்கும் அதிகாரியுமாவார் இந்த ஆணையின் படி 973 மொத்த வியாபாரிகளுக்கும், 205 சில்லறை வியாபாரிகளுக்கும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 1—4—1964 முதல் 31—3—1965 வரை இம் மாவட்டத்தில் புதிதாக 35 அரிசி ஆலைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

**19. முன்னேற்றப் பாதை—**

**(1) கிராம வேலைத் திட்டம்.**—கிராமங்களில் சாலைகள் அமைக்கவும் கிணறுகள் வெட்டவும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் மேற்படி வேலைகளுக்காக இம்மாவட்டத்தில் ரூ. 22,12,753 செலவிடப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 3,59,482 வழங்கப்பட்டுள்ளது.

**(2) குடும்பக்கட்டுப்பாடு.**—நாட்டில் உற்பத்தியைப் பெருக்கவும், அதே சமயம் பெருகிவரும் மக்கள் தொகையைக் குறைக்கவும், எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குடும்பக்கட்டுப்பாட்டின் அவசியம் பற்றி கிராம நல ஊழியர்கள் சமூகநல ஊழியர்கள் முதலானோர் நல்ல முறையில் பிரசாரம் செய்துவருகின்றனர். அறுவை சிகிச்சை மூலம் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களுக்கு அரசாங்கம் ரூ. 30 இலவசமாக வழங்குகிறது. நாகப்பட்டினம், மாயூரம், மன்னார்குடி திருவாரூர், சீர்காழி, பட்டுக்கோட்டை, கும்பகோணம், தஞ்சாவூர் ஆகிய

நகரங்களில் குடும்பக்கட்டுபாடு நிலையங்கள் உள்ளன. பிற இடங்களிலுள்ள மருத்துவ மனைகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் அறுவைச் சிகிச்சை மூலம் கருத்தடை செய்துகொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அறிக்கை ஆண்டில் ஆண்கள் 3231 பேரும் பெண்கள் 63 பேரும் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளனர்.

(3) **மின்சாரம்.**—இந்த மாவட்டத்தில் உரிமம் பெற்ற மின்சார நிறுவனங்கள் ஐந்து உள்ளன. அவை—

(1) தஞ்சாவூர் நகராட்சி மின்சார நிறுவனம்.

(2) திருச்சி-சீரங்கம் மின்சார உரிமம் பெற்றோர்.

(3) மாயூரம்—மன்னார்குடி—திருவாரூர் மின்சாரம் உரிமம் பெறறோர்.

(4) கும்பகோணம் மின்சாரம் வழங்கும் கார்பொரேஷன் லிமிடெட்.

(5) நாகப்பட்டினம் மின்சாரம் வழங்கும் கம்பெனி லிமிடெட்.

1964–65-ல் புதிதாக உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டில் அரசாங்கம் மின்சார நிறுவனம் எதையும் தனது நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளவில்லை.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கார்ப்பொரேஷன் வழங்கும் கடனைப்பெற கீழ்க்கண்ட உரிமம் பெற்ற நிறுவனங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

| உரிமம் பெற்ற நிறுவனத்தின் பெயர். | அரசாங்க ஆணை (எண்ணும், தேதியும்.) | தொகை. ரூ. |
|---|---|---|
| நாகப்பட்டினம் மின்சாரம் வழங்கும் கம்பெனி. | அ. ஆ. 672, பொதுத் துறை, தேதி 5—3—1965. | 2·5 லட்சம். |

இந்திய மின்சாரச் சட்டத்தின் 9 (2) பிரிவின்படி தென் சென்னை மின்சாரம் வழங்கும் கம்பெனி தனது நிலையான சொத்துக்களையும் பண்டகங்களையும் ஷெட்யூல்டு பாங்கிகளில் அடமானம் வைத்து ரூ. 20 லட்சம் கடன் பெறுவதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது.

**திரைப்பட அரங்குகள்.**—அறிக்கை ஆண்டில் இம்மாவட்டத்தில் 49 நிலையான திரைப்பட அரங்குகளும், 35 நடமாடும் திரைப்பட அரங்குகளும் இருந்தன. இவற்றிற்கு மின்சாரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**திரைப்படம் ஒட்டுபவர் உரிமம்.**—அறிக்கை ஆண்டில் 35 பேருக்கு திரைப்படம் ஒட்டும் உரிமம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | வழங்கிய புது உரிமங்கள் .. .. | 26 |
| 2. | புதுப்பித்த உரிமங்கள் .. .. | 9 |
| | | 35 |

(4) **பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு நிறுவனம்.**—இம் மாவட்டத்தில் உள்ள 26 நகரப் பஞ்சாயத்துக்களிலும், 1,537 கிராமப் பஞ்சாயத்துக்களிலும் வானொலிப் பெட்டிகள் அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் மொத்தம் 1,787 வானொலிப் பெட்டிகள் இயங்கி வருகின்றன. இந்த ஆண்டில் மட்டும் 20 பெட்டிகள் நிறுவப் பட்டுள்ளன. இம் மாவட்டத்திலிருக்கும் பஞ்சாயத்துக்களிலுள்ள

வானொலிப் பெட்டிகளை, தஞ்சை, மன்னார்குடி, பட்டுக்கோட்டை, கும்பகோணம், மாயூரம், நாகப்பட்டினம் ஆகிய ஆறு இடங்களிலும் உள்ள வானொலி மேற்பார்வையாளர்கள் சிறப்பாக நிர்வகித்து வருகின்றனர், பழுதடைந்த வானொலிப் பெட்டிகளுக்குத் தேவையான உறுப்புகள் இந்நிறுவனத்தின் மூலமாக கொடுக்கப்பட்டு வானொலிப் பெட்டிகள் பழுது பார்க்கப்படுகின்றன. வானொலிப் பெட்டிகளில் உபயோகிக்கப்பட்ட உறுப்புகளின் விலையை பிறகு பஞ்சாயத்துக்களிடமிருந்து இந்த நிறுவனம் பெற்றுக் கொள்ளுகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்திட மிருந்தும் வானொலிப் பெட்டிகளைப் பராமரிக்க ஆண்டு தோறும் ரூ. 20 வசூலிக்கப்படுகிறது.

**படக்காட்சிச் சாதன வண்டி (இழுவை).**—இம் மாவட்டத்தில் ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு படக்காட்சிச் சாதன வண்டி (இழுவை) வானொலி மேற்பார்வையாளரின் பொறுப்பிலும், கோட்டாட்சித் தலைவரின் நிர்வாகப் பொறுப்பிலும் திரைப்படம் ஒட்டுபவரால் இயக்கப்படுகிறது. ஒவ்வொரு பஞ்சாயத்துக் கூட்டுமன்றத்திலும் உள்ள பஞ்சாயத்துக்களில் சமூக, பொருளாதார விவசாய கிராமிய நலம் சம்பந்தப்பட்ட திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. இம் மாவட்டத் திலுள்ள ஆடுதுறையிலும், பட்டுக்கோட்டையிலும், உள்ள கிராம விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் இயங்கிவரும் திரைப்படக்காட்சிக் கருவிகளும் அதனைச் சார்ந்த உபசாதனங்களும் பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு நிறுவனத்தால் செம்மையாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

(5) **தொழிலாளர் துறை**.—இம் மாவட்டத்தில் இரண்டு தொழிற் சாலை ஆய்வாளர் அலுவலகங்கள் உள்ளன. ஒன்று தஞ்சாவூரிலும், மற்றொன்று திருவாரூரிலும் உள்ளன. இம் மாவட்டத்தில் மொத்தம் 224 தொழிற்சாலைகள் உள்ளன.

**ஆய்வு**.—தொழிற்சாலைகள் ஆண்டு ஒன்றுக்கு குறைந்த பட்சம் இரண்டு முறைகளாவது ஆய்வு செய்யப்படும். தொழிலாளர்களுக்கு வேண்டிய கூலி, விடுமுறை, ஆகியவையும் இன்னும் தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் சொல்லப்பட்டுள்ள சலுகைகளும் கொடுக்கப்படுகின்றனவா என்பதையும், பதிவேடுகள் சரிவர நிர்வகிக்கப்படுகின்றனவா என்றும் சரி பார்க்கப்படுகிறது. வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் இயந்திரங்கள் இயக்கப்படுகின்றனவா என்றும் மற்றும் தொழிலாளர்களுக்குத் தேவையான பாதுகாப்புச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்றும் பார்க்கப்படுகிறது.

**வேலை நேரம்**.—பெரும்பாலான தொழிற்சாலைகளில் தொழிற்சாலைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி 8 மணி நேரத்திற்குமேல் வேலை வாங்குவது கிடையாது. வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறையாக எல்லாத் தொழிற்சாலைகளிலும் அனுசரிக்கப்படுகிறது.

**சுகாதாரம்**.—பெரும்பாலான தொழிற்சாலைகள், நல்ல சுகாதார முறைப்படியும் தொழிலாளர்கள் வேலை செய்ய ஏற்றவாறும் கட்டப் பட்டுள்ளன. மற்ற சுகாதார வசதிகள், தொழிற்சாலைகளில் செய்து கொடுக்கப்பட்டுள்ளனவா என்று ஆய்வின்போது சரிபார்க்கப்படுகின்றன.

**தொழிற்சாலை விபத்துக்கள்**.—1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய 38 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. விபத்து நேர்வதற்கான காரணத்தை தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு எடுத்துரைத்து விபத்துக்கள் ஏற்படு வதை தடுக்க தேவையான குறிப்புகளும், அறிவுரைகளும் வழங்கப்படு கின்றன. அரசாங்கத்தால் வெளியிடப்படும் "விபத்துக்களைத் தடுப்பது எப்படி ?" என்னும் சிறு புத்தகங்களும் தொழிற்சாலை உரிமையாளர் களுக்கு வழங்கப்படுகின்றன.

**நாகப்பட்டினம் துறைமுக அலுவலர்கள்.**—இம் மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து வெளிநாடுகளுடன் கப்பல் போக்கு வரத்து நடைபெற்று வருகிறது. அறிக்கை ஆண்டில் நடைபெற்ற கப்பல் போக்குவரத்து, ஏற்றுமதி, இறக்குமதியான சரக்குகள் ஆகிய வற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| | இத்துறைமுகத்திலிருந்து புறப்பட்ட கப்பல்கள் | 57 |
| 2. | இத்துறைமுகத்திற்கு வந்துசேர்ந்த கப்பல்கள் | 58 |
| 3. | வெளிநாடுகளுக்குச் சென்ற பயணிகள் | 13,077 |
| 4. | வெளிநாடுகளிலிருந்து வந்து இறங்கிய பயணிகள் | 10,097 |
| 5. | இறக்குமதியான சரக்குகளின் நிறை | 60,711 டன் |
| 6. | ஏற்றுமதியான சரக்குகளின் நிறை | 11,098 டன் |
| 7. | வசூலான துறைமுகக் கட்டணம் | ரூ. 46,458·48 |
| 8. | வசூலான ஏற்றுமதி இறக்குமதிக் கட்டணம் | ரூ. 3,86,667·10 |
| 9. | பிரயாணிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட சுங்கத் தொகை | ரூ. 36,734 |

(6) **தொழில் வர்த்தகத் துறை.**—இந்த மாவட்டத்தில் தொழில் வர்த்தகத் துறையினர் அறிக்கை ஆண்டில் ஆற்றிய பணியின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

கடனுதவிபெற்று வளர்ந்துவரும் பல்வேறு கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கங்களைப் பற்றிய விவரம்.

1. **கலைத்தாம்பாளங்கள் உற்பத்தி செய்வோர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், தஞ்சாவூர்:**—தஞ்சை கலைத்தாம்பாள உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழிற் சங்கம் 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம் தேதியில் துவங்கப்பட்டது. இதில் 68 கலைஞர்கள் உறுப்பினர்க ளாய் உள்ளனர். அறிக்கையாண்டில் ரூ. 18,986 மதிப்புள்ள கலைத் தாம்பாளங்களை இந்தச் சங்கம் தயார் செய்து விற்பனை செய்துள்ளது.

2. **இன்னிசைக் கருவிகள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், தஞ்சாவூர்.**—இந்தச் சங்கம் 1952-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதியன்று துவங்கப்பட்டது. இதில் 59 கலைஞர்கள் உறுப் பினராக உள்ளனர். தமிழ் நாட்டிலேயே இன்னிசைக் கருவிகள் உற்பத்தி செய்வோருக்காக அமைக்கப்பட்டிருக்கும் ஒரே தொழிற் கூட்டுறவு சங்கம் இதுவேயாகும். இசைக் கருவிகள் உற்பத்தி செய்ய தேவையான மூலப் பொருட்களை பல்வேறு இடங்களிலிருந்து மொத்தமாகக் கொள்முதல் செய்து சங்கத்தில் வைத்துக்கொண்டு அங்கத்தினர்களுக்குத் தேவையானவற்றை அவ்வப்பொழுது சங்கம் கொடுத்து உதவுகிறது. இங்கு செய்யப்படும் இசைக் கருவிகள், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு அரசினர் விற்பனை நிலையங்கள் மூலமாக வெளியில் விற்பனை செய்யப்படுகின்றன. அறிக்கையாண்டில் இந்த சங்கம் ரூ. 14,634 மதிப்புள்ள இசைக் கருவிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளது.

3. **காகிதப் பொம்மைகள் உற்பத்தி செய்வோர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம், தஞ்சாவூர்.**—இந்த சங்கம் 1958-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதியில் தஞ்சாவூரில் துவக்கப்பட்டது. இதில் 41 அங்கத் தினர்கள் உள்ளனர். அறிக்கையாண்டில் இந்தச் சங்கம் ரூ. 4,274-க்கு காகிதப் பொம்மைகள் தயார் செய்து விற்பனை செய்துள்ளது.

4. **பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.**—இந்த மாவட்டத்தில் மொத்தம் ஆறு பாய் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அவை, விளாங்குடி, வாண்டையானிருப்பு, விளாந்திரசமுத்திரம்

வடுவூர், இராதா நரசிம்மபுரம், சூரப்பள்ளம் ஆகிய ஊர்களில் அமைக்கப்பட்டுள்ளன. அறிக்கையாண்டில் இவை ரூ. 36,275 மதிப்புள்ள பாய்களைத் தயாரித்து விற்பனை செய்துள்ளன.

5. **வெண்கல வார்ப்புச் சாமான்கள்உற்பத்திச் சங்கம், நச்சியார் கோவில்.**—இச் சங்கம் வெண்கல வார்ப்புத் தொழிலை வளரச் செய்யவும் புதிய முறையில் அதன் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளித்து உற்பத்தி செய்யவும் 1959-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதியில் தொடங்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் மேற்படி சங்கம் ரூ. 9,533 மதிப்புள்ள சாமான்கள் செய்து விற்பனை செய்துள்ளது.

6. **கோட்டப்பட்டினம் மகளிர் பனை ஓலைச் சாமான்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம்.**—கிராமத்திலுள்ள மகளிர் ஓய்வு நேரத்தை நன்முறையில் பயன்படுத்தி தங்கள் குடும்பத்தின் வருவாயைப் பெருக்குவதற்காகவும், பனை ஓலைச் சாமான்கள் செய்வோர்களை ஊக்குவிப்பதற்காகவும், இச் சங்கம் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதியில் துவக்கப்பட்டது. இச் சங்கம் 1964–65-ல் ரூ. 1,007 மதிப்புள்ள சாமான்களை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளது,

7. **கயிறு உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம்.**—இந்த மாவட்டத்தில் மூன்று கயிறு உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை, முத்துப்பேட்டை, மல்லிப்பட்டினம், புஷ்பவனம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அறிக்கையாண்டில் இவை ரூ. 9,809 மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளன.

8. **சுவாமிமலை உலோக விக்கிரக தொழிலாளர்கள் கூட்டுறவு குடிசைத்தொழில் சங்கம்.**—இச்சங்கம் உலோக விக்கிரக தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சிற்பக் கலையைப் பாதுகாக்கவும் 1958-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் தேதியில் ஆரம்பிக்கப்பட்டது. சங்கத்திலிருந்து அங்கத்தினர்களுக்குச் செம்பு போன்ற உலோகங்கள் வாங்கி விக்கிரகங்கள் செய்ய முன்பணமும் கொடுக்கப்படுகிறது. 1964–65-ம் ஆண்டில் இச் சங்கம் ரூ. 28,309 மதிப்புள்ள விக்கிரகங்களைச் செய்து விற்பனை செய்துள்ளது.

தமிழ்நாடு அரசாங்கத் தொழில் வர்த்தகத் துறையினரால் தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்கண்ட சிறு தொழில் அபிவிருத்தித் திட்டங்களும், தொழில் நிறுவனங்களும் நடத்தப்பட்டு வருகின்றன:—

**தொழிற்பேட்டைகள்.**—தனியார் துறையில் சிறு தொழில் அபிவிருத்திக்காக தஞ்சாவூரில் ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்தப்பட்டுள்ளது, இந்தத் தொழிற்பேட்டை தஞ்சாவூர்—நாஞ்சிக்கோட்டைச் சாலையில் 21 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் ரூ. 6,45,000 செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்ட தொழில் நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. மருத்துவ நிலையத்திற்காகன தேவைப் பொருட்கள்.
2. நெல் மில்களுக்குத் தேவையான இயந்திர பாகங்கள்.
3. போல்ட், நட் மற்றும் ரிவெட்டுகள்.
4. சிறு ஆணிகள்.
5. முலாம் பூசுதல் மூலம் வாளி (பக்கெட்) முதலியவை தயாரித்தல்.

ஒவ்வொரு தொழில் நிலையம் பற்றியும், அறிக்கை ஆண்டில் அதன் சாதனையைப்பற்றியும் கீழே குறிப்பிட்டுள்ளது:—

**1. மிதிவண்டி கோர்த்துச் சேர்க்கும் சேர்ப்பு நிலையம், தஞ்சாவூர்.**—தஞ்சாவூர் தொழிற்பேட்டையில் ரூ. 7,60,800 மூலதனத்துடன் 1959-ம் ஆண்டு இந்த மிதிவண்டி கோர்த்துச் சேர்க்கும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. வெளியிலிருந்து வாங்கப்படும் பாகங்களையும், இங்கேயே தயார் செய்யப்படும் பாகங்களையும் இணைத்து ஆண்டு தோறும் சுமார் 5,000 மிதிவண்டிகள் தயார் செய்ய இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன அறிக்கை ஆண்டில் இந்தத் தொழிற்சாலையில் 1,700 மிதிவண்டிகள் தயார் செய்யப்பட்டு ரூ. 5,99,580 க்கு விற்பனை செய்யப்பட்டன.

**2. அரசினர் மாதிரி வார்ப்பட நிலையம், தஞ்சாவூர்.**—சிறு தொழில்களுக்கும், அரசினர் நிறுவனங்களுக்கும் தேவையான இரும்புக் குழாய்கள், மற்றும் வார்ப்படப் பொருள்களும் காஸ்டிங்ஸ்கள் தயார் செய்யப்பட இந்தத் தொழிற்சாலை 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதியில் தஞ்சையில் நிறுவப்பட்டது. இந்தத் தொழிற்சாலை அறிக்கை ஆண்டில் ரூ. 1,67,146 மதிப்புள்ள இரும்புச் சாமான்களை உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளது.

**3. கருவி சேவை நிலையம், தஞ்சாவூர்.**—தனியார் துறையிலுள்ள சிறு தொழிற் கூடங்களுக்கு விலை உயர்ந்த இயந்திரங்களின் சேவை வெகு எளிதில் கிடைக்கச் செய்யவும் மற்றும் சிறு தொழில்களுக்குத் தேவையான கருவிகள், இயந்திரப் பாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யவும் இத் தொழிற்சாலை தஞ்சையில் 1963-ம் ஆண்டு துவக்கப் பட்டது. அறிக்கையாண்டில் ரூ. 8017 மதிப்புள்ள கருவிகளும், இதர சாமான்களும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டன.

**4. பித்தளை சாமான்கள் உற்பத்தி நிலையம், கும்பகோணம்.**—இந்தத் தொழிற்சாலை விவசாயத் துறைக்குத் தேவைப்படும் துடைப்பான்கள் (டஸ்டர்கள்), தெளிப்பான்கள் (ஸ்பிரேயர்கள்) ஆகியவற்றை தயார் செய்வதற்கும் ஏற்கனவே கும்பகோணத்திலுள்ள பித்தளைப் பாத்திர உற்பத்தித் தொழிலில் நவீன முறைகளை புகுத்துவதற்கும் 1957-ம் ஆண்டில் கும்பகோணத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டிலும் இத் தொழிற்சாலையில் ஏழு முதல் எட்டு லட்சம் ரூபாய் வரை மதிப் புள்ள சரக்குகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**5. அரசாங்க தச்சு மற்றும் கொல்லத் தொழிற்சாலை, மன்னார்குடி.**—இந்தத் தொழிற்சாலை ரூ. 4,83,000 மூலதனத்துடன் 1957-ம் ஆண்டு மன்னார்குடியில் அமைக்கப்பட்டது. இத் தொழிற்சாலை ஆண்டு தோறும் தச்சுத் தொழிலில் 15 நபர்களுக்கும், கொல்லத் தொழிலில் 20 நபர்களுக்கும் பயிற்சியளிக்கிறது. அறிக்கை ஆண்டில் இந்தத் தொழிற்சாலையில் ரூ. 4,92,236 மதிப்புள்ள சாமான்கள் தயாரிக்கப்பட்டு விற்பனையாகியுள்ளது. இதன் மூலம் ரூ. 75,186 தொழிற்சாலைக்கு லாபம் கிடைத்துள்ளது.

இவை தவிர, இந்தத் துறையின் மேற்பார்வையிலும், அளிக்கப்படும் நிதி உதவியாலும், இந்த மாவட்டத்தில் கீழ்க்கண்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன:—

1. கும்பகோணம் உலோகப் பொருட்கள் தயாரிப்பாளர் கூட்டுறவுச் சங்கம்.
2. இரும்புப்பெட்டி தயாரிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கம், நாகப்பட்டினம்.
3. தலைஞாயிறு செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.
4. தீப்பெட்டி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், அறந்தாங்கி.

5. தீப்பெட்டி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், பட்டுக்கோட்டை.

6. பாத்திர உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், தாராசுரம்.

7. உலோகத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், சத்திரம் கருப்பூர்.

8. தச்சு, கொல்லத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம், அம்மாப் பேட்டை தேவூர்.

9. தச்சு, கொல்லத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம், பேராவூரணி.

10. தச்சு, கொல்லத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம், தம்பிக் கோட்டை.

11. கடைசல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், சிந்தாமணி, நாகை தாலூகா.

இவை தவிர வேதாரணியம், தஞ்சாவூர் மற்றும் திருமுல்லைவாசல் ஆகிய இடங்களில் பெண்களுக்கான நெசவுப் பொருட்கள் மற்றும் தயார் ஆடைகள் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

**(7) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் கழகம்.**—தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் கழகத்தின் உதவியுடன் 1964-65-ம் ஆண்டில் நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கைக்குத்தல் அரிசி கூட்டுறவுச் சங்கங்கள், செங்கல், ஓடு மற்றும் மட்பாண்ட உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், ஆகியவை செயல்பட்டன.

**அவற்றின் விவரம்—**

**1. நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.**—அறிக்கையாண்டின் இறுதியில் 23 நாட்டு செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வேலை செய்தன. அவை ரூ. 21 லட்சம் பெறுமானமுள்ள எண்ணெய் உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளன. ஏறத்தாழ 480 குடும்பங்கள் வேலை வாய்ப்பைப்பெற்றன. இந்த சங்கங்களுக்குத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் கழகம் ரூ. 3,16,250-ஐ கடனாகவும், ரூ. 90,050-ஐ மானியமாகவும் வழங்கிற்று. எல்லா சங்கங்களும் லாபத்தில் நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**2. கைக்குத்தல் அரிசி கூட்டுறவுச் சங்கம்:**—அறிக்கை ஆண்டில் 8 கைக்குத்தல் அரிசி கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டன. அவை மேற்படி ஆண்டில் ரூ. 2.75 லட்சம் பெறுமான அரிசியை விற்பனை செய்துள்ளது. இவற்றால் 575 குடும்பங்கள் வேலை வாய்ப்பைப் பெற்றன. இந்த சங்கங்களுக்கு ரூ. 72,400 கடனாகவும், ரூ. 17,920 மானியமாகவும் கதர் கிராமத் தொழில் கழகத்தால் அறிக்கை ஆண்டில் வழங்கப்பட்டது. சென்னை, சேலம், கோவை ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைச்சாலைகளுக்கும், தஞ்சை மாவட்டத்திலுள்ள இளைஞர் சீர்திருத்தப் பள்ளி, கிளைச் சிறைச்சாலைகள், மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கும் மேற்படி சங்கங்கள் கைக்குத்தல் அரிசி வழங்கி வருகின்றன.

**3. செங்கல், ஓடு மற்றும் மட்பாண்ட உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள்.**—அறிக்கை ஆண்டில் இந்த மாவட்டத்தில் 27 செங்கல், ஓடு மற்றும் மட்பாண்ட உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வேலை செய்தன. 1964-65-ம் ஆண்டில் ரூ. 84,313 பெறுமான மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 87,850 க்கு விற்பனை செய்யப்பட்டன. இதன் மூலம் 600 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ்நாடு கிராம கைத் தொழில் கழகம் மேற்படி சங்கங்களுக்கு ரூ. 58,800 கடன் தொகையாகவும், ரூ. 28,970 மானியமாகவும் வழங்கியுள்ளது. இவை தவிர

நான்கு தேனீ வளர்ப்புச் சங்கங்கள், காகித உற்பத்தியாளர் சங்கம், தோல் மற்றும் உர உற்பத்தியாளர் சங்கங்களும் அறிக்கை ஆண்டில் துவக்கப்பட்டன. இவற்றில் தேனீ வளர்ப்புச் சங்கங்கள் மட்டுமே செயல் படத் துவங்கியுள்ளன.

இவை ஏறத்தாழ 250 பேருக்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளது.

(8) **கதர் அபிவிருத்தித் திட்டம்.**—இந்த மாவட்டத்தில் 18 முக்கிய விற்பனை நிலையங்களிலும, நான்கு கிளை விற்பனை நிலையங்களிலும் கதர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஐந்து கதர் உப உற்பத்தி கேந்திரங்களில் கிஸான் நூல், கதர் நெசவு செய்யப்பட்டு வருகிறது. கிராம மக்களை ஓய்வு நேரங்களில் நூற்பு வேலையில் ஈடுபடுத்தி அவர்களுக்கு உபரி வருவாய் கிடைக்கச்செய்ய இந்த மாவட்டத்தில் திருப்பந்துருத்தி, ஆயக்காரணம்பலம், அதிராம்பட்டினம், பூவை மாநகர், மணல் மேடு, ஆகிய இடங்களில் நூல் உற்பத்தி கேந்திரங்கள் இயங்கி வருகின்றன. சுமார் 20,000 நூற்பாளர்கள் கிசான் ராட்டையால் நூற்று வருகின்றனர். அம்பர் ராட்டையில் சுமார் 100 நபர்கள் நூற்று வருகின்றனர். 1964-65-ம் ஆண்டில் நூற்கப்பட்ட நூலின் அளவு, விற்பனை விபரம்:—

**கிசான் நூல்**

| | |
|---|---|
| கிசான் ராட்டையில் உற்பத்தியான நூல் சிட்டங்கள்: | 205,585 |

**அம்பர் நூல்**

| | |
|---|---|
| அம்பர் ராட்டையில் உற்பத்தியான நூல் சிட்டங்கள்: | 16,233 |
| கதர்த் துணி விற்பனை | ரூ. 77,156·32 |
| கதர் விற்பனை, விற்பனைப் பிரிவு பஞ்சாயத்து யூனியன் இவை மூலம் கூடுதல் தொகை: | ரூ. 9,37,798·90 |

(9) **கிராமத் தொழில் வளர்ச்சி.**—கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் 1964-65-ம் ஆண்டில் நடைபெற்ற வேலை விவரம்—

1. **தோலுரிப்பும், எலும்புரம் தயாரித்தலும்.**—இம்மாவட்டத்தில் பதின்மூன்று தோலுரிப்பு, எலும்புரம் தயார் செய்யும் தொழிற்கூடங்கள் உள்ளன. இந்தத் தொழிற்கூடங்களில் 1964-65-ம் ஆண்டில் 38,522 கிலோகிராம் எலும்புரம் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாண்டில் ரூ. 13,674 மதிப்புள்ள எலும்புரம் விற்பனை செய்யப்பட்டது.

2. **சோப்பு தயாரித்தல்.**—வேதாரணியம், திருத்துறைப்பூண்டி, குடவாசல் ஆகிய இம்மூன்று வட்டாரங்களிலும் சோப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. 1964–65-ம் ஆண்டில் 22,739 கிலோ கிராம் சோப்பு உற்பத்தி செய்யப்பட்டது.

3. **கிராம தோல் பதனிடும் மாதிரி நிலையம்.**—கொள்ளிடம் வட்டாரத்திலுள்ள திருமைலாடி என்னும் கிராமத்தில் தோல் பதனிடும் நிலையம் ஒன்று உள்ளது. 1964–65-ம் ஆண்டில் ரூ. 940 மதிப்புள்ள தோல் பதனிடப்பட்டு ரூ. 1643-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

4. **கொல்லு, தச்சு உற்பத்தி நிலையங்கள்.**—இம் மாவட்டத்தில் 35 வட்டாரங்களில் கொல்லு, தச்சுத் தொழில் நிலையங்கள் உள்ளன. இவைகளில் தச்சுத் தொழில் நிலையங்கள் நன்றாகச் செயல்படுகின்றன. கொல்லப் பட்டறைகளுக்கு மூலப் பொருட்கள் கிடைக்காததால் அதிகப்படியான கொல்லப்பட்டறைகள் நன்றாகச் செயல்படாமல் இருக்கின்றன. இந்த நிலையங்களில் 1964–65-ம் ஆண்டில் ரூ. 2,80,530 மதிப்புள்ள சாமான்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**5. சுண்ணாம்புக் காளவாய்கள்**.—கிராமக் கைத்தொழில் திட்டத்தின் கீழ் 8 வட்டாரங்கள் சுண்ணாம்பு உற்பத்தி செய்கின்றன. 1964–65-ம் ஆண்டில் இவை ரூ. 9,392 மதிப்புள்ள சுண்ணாம்பை உற்பத்தி செய்துள்ளன.

**6. தையல் பூவேலை பயிற்சி நிலையம்**.—தையல் பூவேலை பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது மூன்று முறை நடத்தப் பட்டுள்ளன. இதுவரை 240 பேர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**7. மட்பாண்ட தொழில் பயிற்சி நிலையம்**.—இம் மாவட்டத்தில் மொத்தம் 15 வட்டாரங்களில் மட்பாண்டத் தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அறிக்கை ஆண்டில் ரூ. 13,002 மதிப்புள்ள மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

**8. பிரம்புத் தொழில் பயிற்சி நிலையம்**.—கொள்ளிடம் பஞ்சாயத்து யூனியனில் பிரம்புச் சாமான்கள் செய்யும் தொழிற்கூடம் ஒன்று செயலாற்றி வருகிறது. அறிக்கை ஆண்டில் ரூ. 875 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**9. மீன்வலை பின்னுதல்**.—பட்டுக்கோட்டை பஞ்சாயத்து யூனியனில் நைலான் நூலினால் மீன் வலை பின்னும் தொழில் நடந்து வருகிறது. அறிக்கை ஆண்டில் ரூ. 6,930 மதிப்புள்ள மீன் வலைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

**10. மெத்தை, தலையணை தொழிற்கூடம்**.—பொற்கொல்லர்களின் குடும்பப் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்க கும்பகோணம் பஞ்சாயத்து யூனியனில் மெத்தை தலையணை செய்யும் தொழிற்கூடம் ஒன்று நிறுவப் பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் இந்தத் தொழிற் கூடத்தில் ரூ. 386 மதிப்புள்ள மெத்தை, தலையணை முதலியவை தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

**11 சாக்குத்துண்டு தொழிற்சாலை**.—முத்துப்பேட்டை பஞ்சாயத்து யூனியனில் சாக்குத்துண்டு செய்யும் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இதில் அறிக்கை ஆண்டில் ரூ. 600 மதிப்புள்ள சாக்குத்துண்டு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.

**12. கண்ணாடிக்குப்பிகள் செய்யும் தொழிற்கூடம்**.—கும்பகோணம் பஞ்சாயத்து யூனியனில் கண்ணாடிக்குப்பிகள் செய்யும் தொழிற்கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான மூலப்பொருள்கள் கிடைக்காத காரணத்தால் இது உற்பத்தியைத் தொடங்கவில்லை.

**(10) இந்தியக் கொதிகலன் (பாய்லர்) சட்டம்**.—நூல்களுக்குச் சாயம் ஏற்றுதல், சர்க்கரை ஆலைகள், நெல் அவியல், அரைத்தல், சாலை அமைக்கும் இயந்திரங்கள் மற்றும் விதைகளினின்று எண்ணெய் எடுக்கும் இயந்திரங்களை இயக்குதல் ஆகிய காரியங்களுக்கு கொதிகலன்கள் தேவைப்படுகின்றன. அறிக்கை ஆண்டில் இந்தியக் கொதிகலன் சட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் நடந்தேறிய வேலைகளின் விவரம்:—

| | | |
|---|---|---|
| 1. | 1964–65-ம் ஆண்டில் நடைமுறைப் பட்டியலில் உள்ள நீராவிக் கொதிகலன்கள் .. .. | 128 |
| 2. | அறிக்கை ஆண்டில் சான்றிதழ் பெற்று செயல்படுத்தப்படும் கொதிகலன்களின் எண்ணிக்கை .. .. ... | 123 |
| 3. | அறிக்கை ஆண்டில் செயல்படாத கொதிகலன்களின் எண்ணிக்கை | 5 |

4. பரிசோதனைக்கு உட்பட்ட கொதிகலன்களின் எண்ணிக்கை ... ... .. 128

5. முழு வருடச் சான்றிதழ் அளிக்கப்பட்ட கொதிகலன்கள் .. .. .. 116

6. அரை வருடச் சான்றிதழ் அளிக்கப்பட்ட கொதிகலன்களின் எண்ணிக்கை .. .. 7

7. அறிக்கை ஆண்டில் கொதிகலன்களில் பரிசோதனைகளுக்காக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 9,125

8. அறிக்கை ஆண்டில் பழுது பர்க்கப்பட்டு சான்றிதழ்கள் அளிக்கப்பட்ட கொதிகலன்களின் எண்ணிக்கை .. .. 6

**(11) மாவட்ட வேலை வாய்ப்பு நிலையம்.**—அறிக்கை ஆண்டில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில நடந்தேறிய வேலை விவரம்.

1964–65-ம் ஆண்டில் தஞ்சாவூர் வேலை வாய்ப்பு ஏற்பாட்டு அலுவலகத்தில் 18,738 பேர் (2405 பெண்கள்) வேலைக்காக பதிவு செய்து கொண்டனர். 4548 நபர்களுக்கு (727 பெண்கள்) வேலை தேடி கொடுக்கப்பட்டது. அறிக்கையாண்டில் 5485 இடங்களுக்கு ஆட்கள் தேவை என்று தெரியப்படுத்தி அவைகளில் 4,464 இடஙகள் பூர்த்தி செய்யப்பட்டன. 2,288 நிறுவனங்கள் மாவட்ட வேலை வாய்ப்பின் உதவியை நாடின. அறிக்கை ஆண்டில் 517 தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வேலை தேடித்தரப்பட்டது. வேலை இழந்த 45 பொற்கொல்லர்களுக்கு வேறு வேலை தரப்பட்டது. உடலுறுப்புக் குறையுள்ள 16 நபர்களுக்கு வேலை தேடித்தரப்பட்டது. பர்மா அகதிகள் 646 பேர் வேலை வேண்டி அறிக்கை ஆண்டில் பதிவு செய்து கொண்டனர். அவர்களில் 47 பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது.

இது தவிர இந்த அலுவலகம் காலாண்டுக்கு ஒருமுறை எல்லா அரசாங்க அலுவலகங்களிலிருந்தும், மற்றும் தனியார்துறை நிறுவனங்களிலிருந்தும் எவ்வளவு நபர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்னும் புள்ளி விவரத்தைச் சேகரிக்கிறது. அதன்படி இந்த அலுவலகத்தின் மூலம் வேலையில் சேர்ந்தவர்களின் அட்டவணை.

| காலம் | வேலையில் உள்ள நபர்கள் | |
|---|---|---|
| | அரசாங்கத் துறை | தனியார் துறை |
| மார்ச் 1964 | 38,514 | 22,053 |
| ஜூன் 1964 | 38,348 | 21,788 |
| செப்டம்பர் 1964 | 39,717 | 21,313 |
| டிசம்பர் 1964 | 40,864 | 21,443 |

**(12) மாதர் நலம்.**—அறிக்கை ஆண்டில், இந்த மாவட்டத்தில் மகளிர் நலத்திற்காக மாவட்ட மாதர் நல அதிகாரியும், அவருடன் தொடர்பு கொண்டுள்ள ஏனைய மாதர் நல அமைப்புகளும் ஆற்றிய பணியின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

ஒவ்வொரு பஞ்சாயத்திலும், பெண் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, ஒருவரைத் தலைவியாகக் கொண்டு பஞ்சாயத்து மகளிர் நலக்குழு அமைக்கப்பட்டு வருகிறது. அவ்வாறே பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றங்களில் மூன்று பெண் உறுப்பினர்களைச் சேர்த்து ஒருவரைத் தலைவியாகக் கொண்டு வட்டார மகளிர் நலக்குழு அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வட்டார மகளிர் நலக்குழு பஞ்சாயத்துக் கூட்டு மன்ற ஆணையர், பஞ்சாயத்துத் தலைவர் ஆகியவர்களைக்கொண்டு செயல்படுகிறது.

மாதர் நலச் சங்கங்கள் முக்கியமாக ஆசிரியைகளை அமைப்பாளர்களாகக் கொண்டும் ஆர்வமுடன் சிறந்தவகையில் பணியாற்றும் பெண்களைக் கொண்டும் நடைபெற்று வருகின்றன. மாதர் நலச் சங்கங்களுக்கு வழங்கப் பட்டிருக்கும் தையல் இயந்திரங்களை நல்ல முறையில பயன் படுத்தும் பொருட்டு, தையல் ஆசிரியைகள் நியமிக்கப்பட்டு, தையற் கலையைத் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்குள் கற்பித்து, தையல் தேர்விற்கும் பெண்களை அனுப்புகின்றனர், தவிர அவ்வப்போது, தங்களுக்கு தேவை யான துணிகளைத் தைத்தும் பயனடைகின்றனர். 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் தேதியன்று தஞ்சையில் மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தலைமையில் கூடிய மாவட்ட மகளிர் நலக்கருத்தரங்கின் போது, நேரு நினைவு நிதிக்கு ரூ. 18,000 நன்கொடை அளித்து தமிழக மாவட்டங்களிலேயே தஞ்சை மாவட்ட மாதர் நலச் சங்கம் முதன்மை பெற்று விளங்கியது.

2. கிரம நல ஊழியைகளுக்கு விவசாயத் திட்டத்தின்கீழ் மூன்று நாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. கிராம நல ஊழியைகளினால் வீடுகளில் காய்கறித் தோட்டங்கள் ஏற்படுத்துதப்பட்டு, அவற்றில் கிடைக்கும் காய் கறிகள் வீட்டு உபயோகம், விற்பனைபோக, பள்ளிகளுக்கு நண்பகல் உணவிற்காகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. மகளிர் நலத் திட்டத்தின்கீழ் குழந்தைகள் நலமும் இணைக்கப்பட்டிருப்பதை முன்னிட்டு பாலர் பள்ளிகள் மதுக்கூரிலும், நாகையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பள்ளிகளுக்கு தனிப்பயிற்சி பெற்ற ஆசிரியைகள் நியமிக்கப்பட்டுள்ளனர் ஒவ்வொரு பள்ளியிலும் சராசரி 30 முதல் 40 குழந்தைகள் வருகின்றன. காலையில் நாள்தோறும் குழந்தைகளுக்குப் பால் வழங்கப்படுகிறது. தங்களுக்கு வேண்டிய சத்துள்ள உணவுப் பொருள்களை உட்கொள்ள வேண்டியதின் அவசியத்தை யாங்கணுமுள்ள மக்களுக்கு வலியுறுத்தும் நோக்கத் தின்படி சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது—மூன்று ஆண்டுகளுக்கு (UNICEF) ஐ. நா.—உலகக் குழந்தைகள் அவசர நிதியின் உதவி கொண்டு நடத்தப்படும் இத்திட்டத்தை பிறகு கிராம மக்களே பொறுப்பு ஏற்றுக்கொண்டு நடத்தவேண்டும். இம்மாவட்டத்தில் மேற்படி திட்டம் பட்டுக்கோட்டையிலும், திருவிடமருதூரிலும் செயல்பட்டு வருகிறது.

3. இம்மாவட்டத்தில் தஞ்சாவூர், திருவாரூர், திருக்காட்டுப்பள்ளி ஆகிய மூன்று இடங்களில் மாதர் நலக் கிளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிளைக்கும் ஒரு மாதர் நல அமைப்பாளரும், ஒரு வழிகாட்டியும் உள்ளனர். இக்கிளைகளில் நாள் தோறும் காலையில் பாலர் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாதர் நல அமைப்பாளரும் மூன்று மைல் சுற்று வட்டாரத்தில் மாதர் சங்கங்களை அமைத்து நடத்துகின்றனர். இதன் மூலம் சுற்றுப்புறத்துப் பெண்கள் முக்கியமாக தையல், பூவேலை போன்ற கைத் தொழில்களைச் செய்து வருகின்றனர். திருக்காட்டுப்பள்ளி மாதர் நலக் கிளையில் அப்பளம் உற்பத்தி செய்யப்பட்டுச் சுற்றுப்புறங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. குடும்பக் கட்டுப்பாடு பற்றியும் பிரசாரம் செய் கின்றனர். வயது வந்த குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல், மகளிருக்கு வேலை தேடித்தருதல் முதலியவற்றுடன் ஆதரவற்றவர்களையும் விதவை களையும் சேவை இல்லங்களில் சேர்த்து அவர்கள் வாழ்வு புத்தொளி பெற்று விளங்கவும் உதவிபுரிகின்றனர்.

4. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருவிடைமருதூரிலும், திருவாலம்பொழிலிலும் மூங்கில் பயிறசி நிலையங்கள் துவங்கப்பட்டு வெற்றி கரமாக நடந்து வருகின்றன. மேலும், மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தில் ஹரிஜன நல திட்டத்தின் கீழ் கொள்ளிடத்தில் பிரம்பு கைத்தொழில் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

(13) **ஹரிஜன நல முன்னேற்றம்.**—இம்மாவட்டத்தில் 153 பொது நலப்பள்ளிகள் ஹரிஜன நலத்துறையின் மேற்பார்வையில் இருந்து வருகின்றன. இப் பொது நலப் பள்ளிகளில் 8,684 மாணவர்களும், 7,910

மாணவிகளும் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களில் 6,974 ஆண்களும், 6,366 பெண்களும் ஹரிஜன மாணவ மாணவிகள் ஆவார்கள். இந்த ஹரிஜன மாணவ மாணவிகளுக்குப் புத்தகங்கள், எழுது பலகைகள் முதலியன வாங்கி இனமாக அளிக்கப்பட்ட வகையில் ரூ. 35,000 செலவு செய்யப்பட்டிருக்கிறது. பெண் பிள்ளைகளுக்கு நிகராடை வழங்கிய வகையில் ரூ. 1,40,149-94 செலவானது. பொது நலப் பள்ளியில் பயின்றுவரும் மாணவ மாணவிகட்கு நண்பகல் உணவு வழங்கிய வகையில் செலவானது ரூ. 3,13,900, மொத்தம் உள்ள 153 பள்ளிகளில் 67 பள்ளிகள் வாடகைக் கட்டிடங்களில் நடைபெற்று வருகின்றன. வாடகைக் கட்டிடங்களுக்கு வாடகை கொடுத்த வகையில் ரூ. 9,871-38 செலவானது. எஞ்சிய பிற பள்ளிகள் அரசினருக்குச் சொந்தமான கட்டிடங்களில் நடைபெற்று வருகின்றன. அரசினருக்குச் சொந்தமான பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் பழுது பார்ப்பதற்கும், புதுப்பித்தலுக்கும் ஆகமொத்தம் ரூ. 53,374 செலவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட 153 பள்ளிகளிலும் கூட்டுக் கூலிக்காக கொடுக்கப்பட்டது ரூ. 1,563-28. மேற்கண்ட 153 பள்ளிகளிலும் பணியாற்றி வரும் ஆசிரியர்கள், ஆசிரியைகளுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் ரூ. 5,55,256-80.

**விடுதிகள் :**—இம்மாவட்டத்தில் 18 அரசினர் ஆண் விடுதிகளும், 6 பெண் விடுதிகளும் உள்ளன. இவை அரசினர் பராமரிப்பில் உள்ளன. இவைகளின் பராமரிப்புக்காக ரூ. 2,35,915-82 செலவிடப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர இம்மாவட்டத்தில் மானியம் பெறும் 13 விடுதிகளும் உள்ளன. இவ்விடுதிகளுக்காக வழங்கப்பட்ட மானியம் ரூ. 2,06,037-60.

**படிப்பதற்கு நிதி உதவி :**—இம்மாவட்டத்தில் உள்ள பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கல்வி பயின்றுவரும் தகுதி சான்ற மாணவ மாணவிகளுக்குக் கல்வி மானியம் வழங்கப்படுகிறது. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளும் இந்த உதவி பெற்று வருகின்றனர். மேற்கண்டவாறு நிதி உதவி வழங்கிய வகையில் அரசினருக்குச் செலவானது ரூ. 7,17,671.

**ஹரிஜனக் காலனிகள் :**—ஆங்காங்கே ஹரிஜனங்களுக்குக் குடியிருப்பு வசதி, சாலைகள் வசதிகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டது. இவ்வகையில் ரூ. 2,56,210 செலவிடப்பட்டது. குடிநீர் வசதி, சுகாதார வசதி, சாலைகள் அமைத்தல், பழுது பார்த்தல் முதலிய வேலைகளுக்காகப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்ட தொகை ரூ. 1,18,592-33. ஹரிஜனங்கள் வீடுகள் கட்டிக்கொள்ள அவர்களுக்கு மானியமாக ரூ. 78,000 செலவிடப்பட்டுள்ளது. இவர்கள் தவிர முன்னாள் குற்றப் பரம்பரையினருக்கும் வீட்டு வசதிகள் செய்து தரப்பட்டன. இந்த தொகையில் ரூ. 37,500 செலவிடப்பட்டது. தொழிற் பயிற்சி பெற்ற ஹரிஜனங்களுக்குக் கொடுத்த வகையில்அரசினர் செலவு ரூ. 18,996-09 ஆகும். ஹரிஜன விவசாயிகளுக்கும், சாகுபடியாளர்களுக்கும் சாகுபடி செய்வதற்கு மாடுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டன. இந்த வகையில் செலவிடப்பட்டது ரூ. 41,939-92. பாசன வசதியற்ற ஹரிஜனங்களின் புன்செய் நிலங்களில் கிணறு வெட்டிக்கொள்ள தகுதியுடைய ஹரிஜனங்களுக்கு தலைக்கு ரூ. 1,000 வீதம் உதவித்தொகை அளிக்கப்பட்டது. இந்த வகையில் ரூ. 15,000 செலவிடப்பட்டது. தீண்டாமை ஒழிப்பில் தலை சிறந்து விளங்கும் கிராமங்கள் இரண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு முதற்பரிசு ரூ. 1,000-ம், இரண்டாவது பரிசு ரூ. 500-ம் வழங்கப்பட்டன. சுத்தமாக வைக்கப்பட்டிருக்கும் ஹரிஜன காலனிகளுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின்படி தாலுகாவுக்கு ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு 12 கிராமங்களுக்கு 12 வானொலிப் பெட்டிகள் ரூ. 3,525-15 செலவில் வாங்கி வழங்கப்பட்டன. ஹரிஜன நல வார விழா 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதியில் மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்த விழா கொண்டாடுவதற்காக ரூ. 1,000 அரசினரால் செலவிடப்பட்டது.

தீண்டாமை ஒழிப்பில் "மகாத்மா காந்தியடிகள்" அரும்பாடுபட்டார். இவ்வண்ணலுக்கு நாட்டு மக்கள் அனைவரும் அஞ்சலி செய்யக் கடமைப் பட்டிருக்கின்றனர். அந்த வகையில் ஒவ்வொரு மாதமும் 30-ம் தேதி அவர் மறைவை நினைவுகொள்ளும் பொருட்டு ஹரிஜன தின விழா இம்மாவட்டமெங்கும் கொண்டாடப்படுகிறது.

சென்ற ஆண்டு இம் மாவட்டத்தில் 863 ஹரிஜன தின விழாக்கள் கொண்டாடப்பட்டன.

20. **மண்டலப் போக்கு வரத்து** :—இம்மாவட்டத்தில் போக்கு வரத்துத் துறையின் அறிக்கை ஆண்டு நடவடிக்கைகளின் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள பலதரப்பட்ட மோட்டார் வண்டிகளின் புள்ளி விவரங்கள் :—

| | ஆண்டு தொடக்கத்தில். | இறுதியில். |
|---|---|---|
| 1. மோட்டார் பயண வண்டிகள் | 381 | 381 |
| 2. மோட்டார் பொதி வண்டிகள் (லாரிகள்) | 404 | 412 |
| 3. வாடகைக் கார் (டாக்ஸி வண்டிகள்) | 28 | 45 |
| 4. தனிப்பட்டவர்களின் கார்கள் | 772 | 875 |
| 5. மோட்டார் சைக்கிள்கள் | 556 | 648 |
| 6. டிராக்டர்கள் | 297 | 378 |
| 7. டிரெய்லர்கள் (இணைப்பு வண்டிகள்) | 209 | 253 |

இம்மாவட்டத்தில் 171 பஸ் மார்க்கங்கள் உள்ளன. பெருவழித்துறை அதிகாரிகளால் பஸ்கள் செல்லத் தகுதியுடைய சாலைகள் என்று அறிவிக்கப் படும் எல்லாவற்றிலும் பஸ் போக்கு வரத்துக்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது. மேலும் அறிக்கை ஆண்டில் பொது மக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு 43 பழைய பஸ்களுக்குப் பதிலாக புதிய பஸ்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. சமீப காலம் முதற் கொண்டு முறைப்படி விண்ணப்பிப்பவர்களுக்கு லாரி, டாக்சி உரிமங்கள் தடங்கலில்லாமல் விரைவில் வழங்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் மோட்டார் வண்டி வரி சட்டங்களின் கீழ் அறிக்கை ஆண்டில் வசூலிக்கப்பட்ட தொகை :—

| | ரூ. | பை. |
|---|---|---|
| 1. 1931-வது ஆண்டு மோட்டார் வண்டி வரிச் சட்டத்தின் கீழ் .. .. | 42,24,486 | 90 |
| 2. 1952-வது ஆண்டு மோட்டார் வண்டி உபரி வரிச் சட்டத்தின் கீழ் .. | 17,32,229 | 00 |
| 3. 1939-40-வது ஆண்டு மோட்டார் வண்டிச் சட்டம் மற்றும் சென்னை மோட்டார் வண்டி விதிகளின் பல்வேறு பிரிவு களின் கீழ் .. .. .. | 1,51,082 | 75 |
| 4. இதர வருமானம் .. .. | 6,275 | 00 |

83132

தமிழ்நாடு அரசாங்கத்திற்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்தொழில் நெறியாளரால் அச்சிடப்பட்டது.